# உதயன்

ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 23 வியாழக்கிழமை (09.12.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 013


# கூட்டமைப்பினர் முன்பு புலிகளின் பிரதிநிதிகள் எனவே அவர்களுடன் பேச்சு நடத்த வேண்டும்

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறுகிறார்

கொழும்பு,டிசெ.9

''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்னர் புலிகளை பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள். எனவே, இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து அவர்களுடன் பேச்சு நடத்த வேண்டியது முக்கியம். கூட்டமைப்புடன் விரைவில் பேச்சு நடத்தப்படும். அத்துடன் வட மாகாண சபைத் தேர்தலை நடத்தி, மக்கள் பிரதிநிதிகளிடம் நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும்'' - என்று தேசிய மொழிகள் மற்றும் இன நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை கொழும்பு நிப்போன் ஹோட்டலில் நடைபெற்றது. அதில் இனப் பிரச்சினைத் தீர்வு குறித்து கேட்டபோதே, வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''ஜனாதிபதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஏற்கனவே பேச்சுகளை ஆரம்பித்துள்ளார். ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் பல இருக்கின்றன. இனங்களுக்கிடையே நல்லுறவு ஏற்படுத்தப்பட வேண்டும். தமிழ், சிங்கள மொழிகள் முறையாக அமுல்படுத்தப்பட வேண்டும். வட மாகாணத்தில் தேர்தல் நடத்தி, மக்கள் பிரதிநிதிகளிடம் நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க உந்து

(28ஆம் பக்கம் பார்க்க)

## மழைக் காலநிலை ஒருவாரம் தொடரும்

கொழும்பு,டிசெ.9

நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலை இம்மாதம் நடுப்பகுதிவரை நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானிலை அவதான நிலைய அதிகாரி லக்ஷ்மி லத்தீப் தெரிவித்தார்.

தொடர்ந்து பெய்யும் மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு,மண்சரிவுகள் காரணமாக

(28ஆம் பக்கம் பார்க்க)

## தலைமறைவாகத் திரியும் புலிகளை ஒன்று திரட்டி

# மீண்டும் ஆயுதக் கிளர்ச்சிக்கு சர்வதேச மட்டத்தில் சதித் திட்டம்

## சபையில் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெம்பர் 9

தலைமறைவாகத் திரியும் தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவினரையும், ஆயுதக் குழுவினரையும் ஒன்று திரட்டி நாட்டில் மீண்டும் ஆயுதக் கிளர்ச்சி ஒன்றை ஏற்படுத்த சர்வதேச மட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ளது என்று பிரதமர் டி.எம்.ஜயரத்ன நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

இதற்கு சர்வதேச அமைப்புகளிடம் உதவிகளைப் பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று நம்பகரமான தகவல்கள் கிடைத்ததாகவும் அவர் தெரிவித்தார். புலிகளின் இந்த முயற்சியை முறியடிக்கும் வகையில் வெளிநாடுகளில் உள்ள தூதரகங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என்று தெரிவித்த பிரதமர் இதற்கான பணிப்புரைகளும் விடுக்கப்பட்டுள்ளன என்றும் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிப்பது தொடர்பான விவாதம் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான எம்.சுமந்திரன் அப்போது ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார்.

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்குவதாயின் குழு நிலையில் பரிசீலிக்கப்படும் நிலையில் அவசரகாலச் சட்டம் பற்றி விவாதிக்க முடியாது என்று அவர் கூறினார்.

இதனை ஏற்றுக்கொண்ட

(02ஆம் பக்கம் பார்க்க)

## சபையில் நேற்றும் அமளிதுமளி

கொழும்பு, டிச. 09

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவின் ஊடக அறிக்கையைத் தூக்கிப்பிடித்துக் கொண்டு அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று நாடாளுமன்றில் மீண்டும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டார். இதனால் சபையில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒரே நேரத்தில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சபையில் அமைதியை ஏற்படுத்த மேற்கொண்ட பிரயத்தனம் தோல்வி அடைந்ததால் சபாநாயகர் சபையை 15 நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.

சபா பீடத்தின் அறிவிப்பை ஏற்று அமைச்சர் மேர்வின் சில்வா தனது ஆசனத்தில் அமராவிட்டால், சபையை ஒத்திவைத்து விட்டுப் போய்விடுவேன் என்றும் சபாநாயகர் எச்சரித்தார்.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. வழமையான சபை ஆரம்ப நடவடிக்கைகளின் பின்னர் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பத்திரிகைச் செய்தி

(02ஆம் பக்கம் பார்க்க)


உள்ளே...

2 உள்நாடு
புலிகளின் தளபதி ரமேஷை விசாரிக்கும் வீடியோ போலி-அரசு

19 மலையகம்
தாய்ப்பாலில் விஷம்! ஆய்வில் திடுக்கிடும் தகவல்

21 உலகம்
'விக்கி லீக்ஸ்' நிறுவுநர் நாடு கடத்தப்படுவாரா?


## 50 இலங்கையர்கள் தாய்லாந்தில் கைது

கொழும்பு,டிசெ.9

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் இலங்கையர்கள் 50 பேர் மீண்டும் கைது செய்யப்பட்டனர்.

சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் தொடர்பில் கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்போது நேற்று அதிகாலை இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனத் தாய்லாந்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்களும் அடங்குகின்றனர் என நம்பப்படுவதாக தாய்லாந்துப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, இவர்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் அனுப்பப்பட்டுள்ளனர் என இலங்கைக்கான தூதரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த வாரங்களிலும் 200இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தாய்லாந்தில் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்டு தடுத்து

(02ஆம் பக்கம் பார்க்க)

## சிறையில் வாடும் தமிழ் இளைஞர்கள் குறித்து இனியாவது நடவடிக்கை-கோருகிறது ஜே.வி.பி.

கொழும்பு, டிசெ.9

''நீண்டகாலமாக விசாரணை இன்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் மீது இனியாவது சட்டவிசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். அவர்களின் பெயர் விவரங்கள் உடன் வெளியிடப்பட வேண்டும்'' என்று ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

வரவு - செலவுத்திட்ட குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டு ஒன்றரை வருடங்கள் (02ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டில் வெள்ளப் பாதிப்பு; 5,760 பேர் பொது இடங்களில்

## பாதிப்புறுவோர் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ். குடாநாட்டில் வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துவரும் அதேசமயம், 5 ஆயிரத்து 760 பேர் பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

கடந்த இரு தினங்களில் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்தார்.

தற்போதைய மழை, வெள்ளம் தொடர்பான அனர்த்த நிலைமை குறித்து யாழ். செயலகத்தால் வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வெள்ள அனர்த்தத்தினால் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஒருவரும், நல்லூர் பிரதேச பிரிவில் ஒருவருமாக மொத்தம் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர். 8 ஆயிரத்து 365 குடும்பங்களைச் சேர்ந்த 30 ஆயிரத்து 452 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம் காரணமாக 156 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. 2 ஆயிரத்து 138 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன.

ஆயிரத்து 744 குடும்பங்களைச் சேர்ந்த 5,760 பேர் 31 பொது இடங்களில் தங்கியுள்ளனர் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-15-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1983 இனப் படுகொலைதான் பிரபாகரனை உருவாக்கியது

## அதை யாரும் மறுக்க முடியாது; அப்பாத்துரை விநாயகமூர்த்தி

கொழும்பு, டிச. 09

1983 ஆம் ஆண்டு இனக் கலவரப் படுகொலைகள்தான் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை உருவாக்கியது - என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

1956, 1958, 1977 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் தமிழர்களை உயிருடன் பெற்றோல் ஊற்றி எரித்தார்கள். 7 மாகாணங்களில் அவர்களுடைய வாழ்வாதாரங்கள், இருப்பிடங்கள் அழித்தொழிக்கப்பட்டன. எஞ்சியவர்கள் கப்பலில் ஏற்றப்பட்டு யாழ்ப்பாணத்திற்கும் மட்டக்களப்பிற்கும் அனுப்பப்பட்டனர்.

1983 ஆம் ஆண்டு இனப்படுகொலையின் பின்னர் தமிழர்களாகிய நாம் எங்களைக் காப்பாற்றுவதற்காக ஆயுதமேந்த நிர்ப்பந்திக்கப்பட்டோம். 1983 ஆம் ஆண்டுக் கலவரம் தான் பிரபாகரனை உருவாக்கிய தென்றால் அதனையாரும் மறுக்க முடியாது.

ஜனாதிபதியும் சில முக்கிய அமைச்சர்களும் இலங்கையில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டது என்று உலகத்திற்கு கூறிக் கொண்டிருக்கும் போது அவசரகாலச் சட்டவிதிகளுக்கான தேவைதான் என்ன?

தமிழ் அரசியல் கைதிகளைத் தொடர்ந்தும் சிறைச் சாலைகளிலும், முகாம்களிலும் தடுத்துவைத்திருப்பதற்காக மட்டுமே இந்த அரசுக்கு அவசரகால ஒழுங்குவிதிகள் தேவைப்படுகின்றன என்றே கருதுகின்றேன். - என்றார்.

## சிறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்துவிட்டன. இன்னும் அவர்கள் விசாரிக்கப்படவில்லை. இனியாவது அவர்கள் சட்டரீதியாகக் கையாளப்பட வேண்டும்.

அந்த இளைஞர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட வேண்டும். அவ்வாறு வெளியிடுவதன் மூலம் எவ்வித சிக்கலும் அரசுக்கு ஏற்படாது.

இவ்வாறான பிரச்சினைகள் தீர்க்கப்படாமைதான் பிரிட்டனில் ஜனாதிபதிக்கு ஏற்பட்ட சிக்கலுக்குக் காரணம். சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு எதிராக மனித உரிமை மீறல் பிரச்சினை எழுப்பப்படுவதற்கும் இவ்வாறான நிலைமைதான் காரணம்.

வடக்கு, கிழக்கில் இராணுவ நிர்வாகத்தைத் தவிர்த்து சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த வேண்டும். அதைச் செய்யாது புலிகளுக்குத் தலைமை தாங்கிய கே.பியை நல்ல முறையில் உபசரித்துக்கொண்டு பயங்கரவாதத்தை ஒழிக்கத் தலைமை தாங்கிய சரத் பொன்சேகாவைச் சிறையில் அடைக்கின்றீர்கள்.

கே.பிக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அவரை நீதிமன்றில் ஆஜர்படுத் தவில்லை. கே.பியிடம் இருந்த பணம், நகைகள் மற்றும் கப்பல் போன்றவற்றைப் பறித்துக்கொண்டவர்கள் யார் என்ற விவரம் தெரியவரும் என்பதால்தான் அவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவில்லை.

தமிழ் இளைஞர்களுக்கு அநீதி இழைக்கப்படும்போது வடக்கு, கிழக்கு இளைஞர்கள் மீண்டும் கிளர்ந்தெழுவர். இன்னும் 2 வருடங்களுக்கு சூழ்நிலை இவ்வாறே போனால் நிலைமை மிக மோசமாகும் - என்றார்.

(சி)

## சபையில் நேற்று.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகைச் செய்தி ஒன்றைத் தூக்கிப்பிடித்து கவனயீர்ப்பு விளக்கம் ஒன்றைச் செய்தார்.

பான் கீ-மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கைகள் வெளிவரவுள்ள நேரத்தில், கரு ஜயசூரியபத்திரிகை அறிக்கையை விடுத்து பெரும் தேசத்துரோகச் செயலைச் செய்துள்ளார் என்று கூறினார்.

இதனால் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட அனைத்து ஐ.தே.கட்சி உறுப்பினர்களும் எழுந்து நின்று ஆட்சேபனை தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். இதற்குப் போட்டியாக ஆளும் கட்சி உறுப்பினர்களும் ஆர்ப்பாட்டத்தில் இறங்கி விட்டனர்.

அமைச்சர் மேர்வின் சில்வா, அஸ்வர் எம்.பி., பிரியதர்ஷன யாப்பா உட்பட பலரும் முன்வரிசைக்கே வந்துவிட்டனர். கூச்சல் குழப்பங்களை ஏற்படுத்தினர்.

இந்தக் கூச்சல்களுக்கு மத்தியில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஒரு கருத்தை வெளியிட்டார்.

''யுத்தக் குற்றத்தையும், கே.பியின் கப்பல்களையும் வைத்துக்கொண்டு அரசு எதிர்க்கட்சிகள் மீது சேறு பூசுகிறது. அதாவது இந்த அரசு எல்லா யுக்திகளையும் மேற்கொண்டு எதிர்க்கட்சிகளின் செல்வாக்கைக் குறைக்க முயல்கின்றது.

நேற்று போர்க்குற்ற விசாரணை என்று ஆர்ப்பாட்டம் செய்து எமது சக உறுப்பினர்கள் மீது சேற்றை அள்ளி வீசினர். லண்டனில் பேச முடியவில்லை என்று சபையில் உறுப்பினர்களைத் தாக்க முயன்றனர்.

புலிகளின் பதில் தலைவர் கே.பியிடமிருந்து பெற்ற கப்பல்களை வைத்துக்கொண்டு எம்மீது சேறு பூசுகின்றனர். இதுதான் ஜனநாயகமா?'' அமைச்சர்களின் கூற்றுகளை வன்மையாகக் கண்டிக்கிறோம்'' - என்றார் அவர்.

இருந்தும் சபையில் அமைதி ஏற்படவில்லை. பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன்வரிசைக்கு வந்துவிட்டனர்.

அமைச்சர்களான தினேஷ் குணவர்தனவும், விமல் வீரவன்ஸவும் அருகருகில் அமர்ந்து கொண்டு ஆர்ப்பாட்டக்காரர்களை உற்சாகப்படுத்தினர்.

மேர்வின் சில்வா தனது ஆசனத்தைவிட்டு முன்னே வந்து ஜனாதிபதிக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்துக்கு அருகில் நின்று வாய்க்கு வந்தபடி கத்திக்கொண்டிருந்தார். சபாநாயகர் பல தடவைகள் கூறியும் அவர் தனது ஆசனத்துக்குச் செல்லவில்லை.

இதனால் ஆத்திரம் அடைந்த சபாநாயகர், மேர்வின் சில்வா தனது ஆசனத்துக்கு சென்று அமரா விட்டால், நான் சபையை ஒத்திவைத்துவிட்டுப் போய் விடுவேன். நீங்கள் வேண்டிய மட்டும் பேசிக் கொண்டிருங்கள் - என்றார்.

### கருவின் விளக்கம்

அதன் பின்னரே மேர்வின் சில்வா தனது ஆசனத்தில் போய் அமர்ந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் கரு ஜயசூரிய விளக்கம் அளிக்க எழுந்தார். முதலில் பேச இடமளிக்க மறுத்த சபாநாயகர் பின்னர் சுருக்கமாக விளக்கம் அளிக்கும்படி அனுமதித்தார்.

கரு ஜயசூரிய பேச எழுந்தவுடன் மீண்டும் கூச்சல்கள். பேச இடமளிக்கக் கூடாது என்று ஆளும் தரப்பினரும், பேச இடமளிக்கவேண்டும் என்று எதிர்க்கட்சியினரும் ஆர்ப்பாட்டத்தில் இறங்கிவிட்டனர்.

இதனால் சபை அல்லோல கல்லோலப்பட்டது. அமைதி குலைந்தது. சபையை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர முடியாத நிலையில் 10.35 மணிக்கு சபை நடவடிக்கைகளை 15 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாகக் கூறி சபையை ஒத்திவைத்துவிட்டு சபாநாயகர் எழுந்து போய்விட்டார்.

ஒத்திவைக்கப்பட்ட பின்னரும் இந்த ஆர்ப்பாட்டம் ஓயவில்லை. படிப்படியாக அமைதி ஏற்பட்ட போது சபை 10.55 மணிக்கு மீண்டும் கூடியது.

இவ்வேளையில் கரு ஜயசூரிய விளக்கம் அளித்தார்.

''ஜனநாயக உரிமைகள் தொடர்பாக தம்பட்டம் அடிக்கிறது அரசு. ஆனால், இந்தச் சபையில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் பேசுவதற்குக்கூட இடமளிக்க மறுக்கின்றனர். ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். புலிகள் என்று பட்டம் கட்டுகின்றனர்.

நான்எதற்கும்பயப்படவில்லை. நான் நேர்மையானவன். என் மீது சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளும் அரசியல் உள்நோக்கம் கொண்டவையே. அங்கு உண்மை இல்லை'' என்று தெளிவுபடுத்தினார் கரு ஜயசூரிய.

### அமைச்சரின் குற்றச்சாட்டு

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றம் தொடர்பாகவும், அடிப்படை மனித உரிமை மீறல் தொடர்பாகவும் பரிந்துரை வழங்கவில்லை. ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்துள்ள நிபுணர்கள் குழு தனது அறிக்கையை வெளியிடவுள்ள சமயத்தில் கரு ஜயசூரிய வெளியிட்டுள்ள கருத்துகள் திட்டமிட்ட ஒரு சதிச் செயலாகும் என பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குற்றம் சாட்டினார்.

''ஐ.தே.கட்சி பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரிக்கப்பட வேண்டும் என்று நேரடியாகக் கூறாவிட்டாலும், அதனை வலியுறுத்தும் வகையில் தனது கருத்துகளை சூசகமாக உட்படுத்தி உள்ளார்.

இப்பொழுது கருத்து என்னுடையது. அதற்கு போட்டப்பட்ட தலையங்கம் பத்திரிகையுடையது என்று தனது குற்றத்தில் இருந்து தப்ப முனைகிறார்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

கரு ஜயசூரியவின் பத்திரிகை அறிக்கை தொடர்பாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கவனயீர்ப்பு விளக்கம் ஒன்றை விடுத்தார்.

உறுப்பினரின் அறிக்கை ஞாயிறு அன்று பிரசுரமானது. நாங்கள் திங்கட்கிழமை இவ்வறிக்கை தொடர்பாக செய்தியாளர் மாநாட்டில் எமது நிலைப்பாட்டையும், அதன் பாரதூரமான பின்விளைவுகள் தொடர்பாகவும் விளக்கினோம்.

ஆனால், கரு ஜயசூரிய செவ்வாய்க்கிழமை தான் தனது மறுப்பு அறிக்கையை விடுத்துள்ளார். ஆனால், அதற்கு முன் இன்டர்நெட், வெப்சைட் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலமாக அவருடைய அறிக்கை சென்றுவிட்டது.

இங்குள்ள வெளிநாட்டுத் தூதுவர்களும் இதனைக் கவனத்தில் கொண்டுள்ளனர். இதனை மீளப் பெறமுடியாது.

இலங்கையில் பெருமளவு உயிர் இழப்புகள் ஏற்பட்டுள்ளன. தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

பான் கீ-மூனின் நிபுணத்துவ குழு தொடர்பாக நாம் உத்தியோக பூர்வமான எதிர்ப்பைத் தெரிவித்ததோடு அத்தேவையையும் நிராகரித்துள்ளோம்.

ஆனால், கரு ஜயசூரியவின் அறிக்கை வெளியான அதே பத்திரிகையில் - அதே பக்கத்தில் பான் கீ-மூன் அறிக்கை இம்மாத இறுதிக்குள் ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்படும் என்ற செய்தியும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இது கரு ஜயசூரியவினால் திட்டமிட்டே செய்யப்பட்ட ஒரு சதிச் செயல் மட்டுமல்ல, இராஜதுரோகமும் கூட என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறினார்.

(சி)

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகர் அவசரகாலச் சட்டம் சபை நிலையில்தான் விவாதிக்கப்படவேண்டும். எனினும், கட்சித் தலைவர்கள் இணங்கினால் இரண்டையும் ஒரே சமயத்தில் விவாதிக்கலாம். ஆனால், மாலை 7 மணிக்கு மீண்டும் சபை நிலையில் வாக்கெடுப்பு நடத்தப்படும் எனக் கூறினார்.

எதிர்க்கட்சி கொரடாவான ஜோன் அமரதுங்க ''இரண்டையும் ஒரே நேரத்தில் விவாதிப்பது என்றால் அவசரகாலச் சட்ட நீடிப்பு தொடர்பான அறிக்கையை பிரதமர் சமர்ப்பித்தால் நாம் விவாதிப்பதற்கு உதவியாக இருக்கும்'' என்று சுட்டிக்காட்டினார்.

இதனைத் தொடர்ந்து பிரதமர் அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டியதற்கான காரணங்களை விவரித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

உள்நாட்டில் பயங்கரவாதம் அழிக்கப்பட்டுவிட்டாலும் சர்வதேச மட்டத்தில் மாற்றம் ஏற்படவில்லை.

எமது ஜனாதிபதி லண்டன் சென்றபோது புலி ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்து ஜனாதிபதிக்கு பெரும் அவமானத்தை ஏற்படுத்திவிட்டனர்.

லண்டனில் சவுத்போல் என்ற இடம் முற்றும் முழுதாக தமிழர்கள் வாழும் இடம். இவர்கள் புலிகளின் அனுதாபிகள்.

ஜனாதிபதி முதலாவது பதவிக் காலத்தில் பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வெற்றிகண்டார். இதனைச் சர்வதேசமும் பாராட்டியது.

இரண்டாவது பதவிக்காலத்தில் பொருளாதார வளர்ச்சிக்காகப் போராடவேண்டி உள்ளது. இப்போராட்டத்தில் நாம் வெற்றிபெறுவோம் என்பதும் உறுதி.

சரண் அடைந்து விடுதலையான புலி உறுப்பினர்கள் மீண்டும் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு வைக்கமாட்டோம் என்று உறுதியாக இருக்கின்றனர். முன்பு புலிகளால் மரண அச்சுறுத்தல் இருந்தது. ஆனால், இப்பொழுது அந்த பயமும், பீதியும் இல்லை. அரசின் நடவடிக்கைகளை வரவேற்கின்றனர்.

சரண் அடைந்துள்ள புலி உறுப்பினர்களில் முக்கியமானவர்கள் என அடையாளம காணப்பட்ட நான்குபேர் மூலம் கிடைத்த தகவலின்படி கிளிநொச்சியில் புலிகளின் சித்திரவதைக் கூடம் ஒன்று தோண்டிப் பார்க்கப்பட்டுள்ளது. அங்கே 60 வீரர்களின் எழும்புக்கூடுகள் காணப்பட்டன. இந்த அறுபது பேரும் எவ்வாறு வெட்டியும், கொத்தியும், சுட்டும் கொல்லப்பட்டனர் என்ற விவரத்தையும் இவர்கள் கூறி உள்ளனர். இது காட்டுமிராண்டித்தனமான செயலாகும்.

ஆனால், இவ்வாறான செயல்களில் ஈடுபட்டவர்களை நாம் இன்று மனிதாபிமானத்துடன் நடத்துகின்றோம். அவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்கின்றோம். இவர்கள் ஒரு போதும் மீண்டும் புலிகளுடன் இணையமாட்டார்கள்.

இப்பொழுது நாம் மேற்கொண்டுவரும் புலனாய்வு நடவடிக்கைகளின் மூலம் வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல, கொழும்பு நகரை அண்டிய பகுதிகளிலும் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டாலும், புலிகளின் புலனாய்வுப் பிரிவினரும், ஆயுதக் குழுவினரும் இரகசியமாக நடமாடுகின்றனர். இவர்களை ஒன்று திரட்டி மீண்டும் ஓர் ஆயுதக் கிளர்ச்சியை ஆரம்பிக்க சர்வதேச மட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கையில் புலிகளின் மாவீரர் தினம் கொண்டாடப்படவில்லை என்றாலும் சர்வதேச அளவில் மாவீரர் தினம் அதற்குச் சமான முறையில் கொண்டாடப்பட்டுள்ளது.

எனவே, இதனை முறியடிக்கவும், நாட்டில் சட்டம், ஒழுங்கை பாதுகாக்கவும் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, நாட்டின் நலன் கருதி எதிர்க்கட்சியும் இதற்கு ஆதரவளிக்க வேண்டும்.

- இப்படி பிரதமர் கூறினார்.

(உ-சி)

## 50 இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை நாடு கடத்துவதற்காக, அவர்களுக்குத் தேவையான ஆவணங்களைத் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன என தாய்லாந்து-பாங்கொக் அதிகாரிகள் கூறியுள்ளனர். ஏற்கனவே 50 பேர் கட்டம், கட்டமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

(உ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் அகழக் கொட்டோடை வீதியைப் பயன்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அம்பன் மக்கள் ஆர்ப்பாட்டம்

## வெறும் பெட்டியுடன் திரும்பின டிராக்டர்கள்

குடத்தனை,டிசெ.9

அம்பன் கிழக்கு, கொட்டோடைக் கிராமத்தில் மணல் அகழ்வதற்கு அம்பன் - கொட்டோடை வீதியைப் பயன்படுத்த வேண்டாம் எனக் கோரி அப்பகுதி மக்கள் நேற்றுப் புதன் கிழமை ஒன்றுகூடி எதிர்ப்புத் தெரிவித்தனர். அப்பாதை ஊடாக மணல் ஏற்றச் செல்லும் டிராக்டர்களை அனுமதிக்காது நடுவீதியில் ஒன்று கூடி பலத்த எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

இதனால் மணலை அகழ்ந்து ஏற்றவந்த நூறு வரையான டிராக்டர்கள் மணல் ஏற்றும் இடத்திற்குச் செல்ல முடியாது திரும்பிச் சென்றன. எஞ்சிய சுமார் 25 இற்குட்பட்ட டிராக்டர்கள் அவ்விடத்திலேயே நேற்று நண்பகல் வரை நின்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையினால் மணல் அகழ்ந்து ஏற்றும் நடவடிக்கை நேற்றைய தினம் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தது. டிராக்டர்கள் ஏற்றிவரும் மணலை ஏற்றச் செல்வதற்காக குடத்தனைச் சந்தியில் காத்திருந்த சுமார் 50 இற்கும் மேற்பட்ட லொறிகள், டிப்பர் வாகனங்கள் அங்கேயே நின்றன.

பருத்தித்துறை - மருதங்கேணி பிரதான வீதியில் அம்பனிலிருந்து கொட்டோடைக்குச் செல்லும் மூன்றரைக் கிலோமீற்றர் தூரம் கொண்ட வீதியில் இடைநடுவில் இடம்பெற்ற மணல் அகழ்வுக்காக டிராக்டர்களை செல்லவிடாது தடுக்கும் எதிர்ப்புப் போராட்டத்தில் சுமார் 50 இற்கும் மேற்பட்ட பெண்கள் உட்பட ஒரு தொகை ஆண்களும் கலந்துகொண்டனர். இந்த எதிர்ப்பு நடவடிக்கை நேற்று நண்பகல் வரை நீடித்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் மருதங்கேணி உதவி அரச அதிபர் ஊடாக யாழ். அரச அதிபருக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். அந்த மனுவில் ஆண்கள், பெண்கள் உட்பட 13 பேர் கையெழுத்திட்டுள்ளனர். அந்த மனுவின் பிரதிகள் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, நாகர் கோயில் கட்டளை அதிகாரி, பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர், மத்திய சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரி ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

'வீதிப் பாவனையைத் தடை செய்தல்' என்னும் தலைப்பில் அனுப்பிவைக்கப்பட்டுள்ள அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

தற்போது மகேஸ்வரி நிதியம் மணல் அகழ்வினை மேற்கொண்டு வருகின்ற இடமானது எமது ஊரைச் சேர்ந்தவர்களது காணியாகவும், ஊர்மனையாகவும் காணப்படுகின்றது. அத்தோடு, மணல் அகழ் வுக்காகப் பயன்படுத்தப்படும் பாதையானது ஏற்கனவே மணலாகக் காணப்படுகிறது. போக்குவரத்துக்குச் சிரமமாக இருந்தபோதும் கூட கடற்றொழிலுக்கும், ஆலயத்திற்கும் நடைப் பயணமாகவும், உழவு இயந்திரத்திலும் மூன்று கிலோமீற்றர் தூரத்திற்கு மேலாகச் சென்று வந்தோம்.

இந்நிலையில் தற்போது இரண்டு நாள்களாக மண் அகழ்வுக்காக சுமார் நூறுக்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்கள் இந்தப் பாதையால் சென்று வருவதால், எமது அன்றாட தொழில்களுக்கும், ஆலயங்களுக்கும் முற்றாகச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே அப்பாதையினைப் பயன்படுத்தாது வேறு பாதையினைப் பயன்படுத்துமாறு ஊர் மக்களாகிய நாம் அன்பாகவும், பண்பாகவும் கேட்டுக் கொள்கின்றோம்.

அத்தோடு வடக்கின் வசந்தத்தின் கீழ் இப்பாதையினைப் புனரமைக்க முடியாத நிலையில், இப்பாதையைப் புனரமைக்க வந்த ஒப்பந்தக்காரர் சிரமப்படுகின்றனர் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம். - என்றுள்ளது.

யாழ். மாவட்டத்தில் இடம் பெற்றுவரும் அபிவிருத்தி, புனரமைப்பு நடவடிக்கைக்குத் தேவையான மணல் கடந்த பல வருடங்களாக வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலிருந்து எடுக்கப்பட்டு வருகிறது. கடைசியாக குடத்தனைப் பகுதியிலிருந்து மணல் அகழப்பட்டு வந்த போது, அப்பகுதி மக்கள் காட்டிய எதிர்ப்பு நடவடிக்கையினால் கடந்த ஒக்ரோபர் மாதம் முற் பகுதியிலிருந்து அது இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து வடமராட்சி கிழக்கில் உள்ள அம்பன் கிழக்கு கொட்டோடை பகுதில் இம்மாதம் 2ஆம் திகதியிலிருந்து மணல் அகழப்பட்டு வந்தது.

தற்போது இப்பகுதியில் மணல் அகழச் செல்லும் டிராக்டர்களினால் பாதை பலத்த சேதத்துக்குள்ளாகின்றது. இதனால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளோம் என இப்பகுதி மக்கள் கூறினர். அப்பாதை ஊடாக டிராக்டர்கள் மணல் அகழச்செல்லவிடாது எதிர்ப்பு நடவடிக்கையும் மேற்கொண்டுள்ளனர். இதனால் மணல் அகழும் நடவடிக்கை நேற்று ஸ்தம்பிதமடைந்தது.

(த)

# உலக உணவுத் திட்ட பணிகள் கிழக்கு மாகாணத்தில் நிறுத்தம்

யாழ்ப்பாணம்,டிசெ.9

உலக உணவுத் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் இம்மாதம் 31ஆம் திகதியுடன் நிறுத்தப்படுகின்றன. அத்துடன் அங்குள்ள அலுவலகத்தையும் மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக உலக உணவுத் திட்டம் தெரிவிக்கிறது.

இதற்கமைய இந்த அமைப்பின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் மொனராகலை அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன. தற்போது அங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பான எஞ்சிய தகவல்களைச் சேகரிப்பதற்கு மாத்திரம் 2011 வரை மட்டக்களப்பில் உப அலுவலகமொன்றை வைத்திருப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவிகளை வழங்கிய நாடுகள் இப்போது அந்த உதவிகளை நிறுத்தியுள்ளமையே இவற்றை மூடுவதற்குக் காரணம் எனக் கூறப்பட்டுள்ளது.

உலக உணவுத் திட்டம் கிழக்கு மாகாணத்துக்கான தனது சேவைகளை முடிவுக்குக் கொண்டுவந்துள்ள போதிலும் வடமாகாணம் தொடர்பாகத் தனது அதிக கவனத்தைச் செலுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-22)

# போதியளவில் மின்சாரம் கிடைகின்றது அதனால் இப்போது மின்வெட்டு இல்லை

## மின்சார சபை விளக்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ். மாவட்டத்துக்கான மின்விநியோகப் பணியில் ஈடுபடும் 'நொதேர்ன் பவர்' நிறுவனம் இப்போது 17.5 மெகா வோற்ஸ் மின்சாரத்தை வழங்குவதால் மின்வெட்டுத் தவிர்க்கப்பட்டுள்ளது என இலங்கை மின்சார சபையின் வட பிராந்திய பொது முகாமையாளர் எஸ்.முத்துரட்னாணந்தம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு தற்போதுள்ள மழை மற்றும் காலநிலை சீர்கேடு காரணமாக மரங்கள் முறிந்து மின்சார கம்பங்களின் மேல் விழுதல், வாகனங்கள் மோதுண்டு மின்சாரத் தூண்கள் முறிவடைதல் ஆகிய காரணங்களினாலேயே மின்விநியோகம் சில சந்தர்ப்பங்களில் தடைப்படுகிறது.

பகலில் 20 மெகா வாற்ஸ் மின்சாரமும் இரவில் 37.5 மெகா வோற்ஸ் மின்சாரமும் யாழ். மாவட்டத்துக்கு தினசரி தேவையாக உள்ளது.

'நொதேர்ன் பவர்' நிறுவனம் 17.5 மெகா வோற்ஸ் மின்சாரத்தையும், அக்கிறிகோ 15 மெகா வோற் மின்சாரத்தையும் இலங்கை மின்சார சபை 6 மெகாவோற்ஸ் மின்சாரத்தையும் இப்போது யாழ்.மாவட்டத்துக்கு வழங்கி வருகிறன.

'நொதேர்ன்பவர்' முன்னர் 10 மெகா வோற்ஸ் மின்சாரத்தையே வழங்கியது. போதிய மின்சாரம் கிடைப்பதனால் இப்போது மின் தடை தவிர்க்கப்பட்டுள்ளது என்றார்.

(த-14)

# புலிகளின் தளபதி ரமேஷ் தொடர்பான வீடியோ போலி என்கிறது ராணுவம்

கொழும்பு, டிசெ.9

விடுதலைப் புலிகளின் முன்னாள் மட்டக்களப்புத் தளபதி கேணல் ரமேஷ் இலங்கைப் படையினரால் சித்திரவதை செய்யப்படுவதாக வெளியான வீடியோப் பதிவு போலியானது என்று இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக இலங்கை இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவெல தகவல் வெளியிடுகையில்,

இந்த வீடியோ பதிவு போலியானது. புலிகள் ஆதரவு இணையத்தளங்கள் சில, நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி போலியான வீடியோப் பதிவுகளைத் தயாரித்து பொதுமக்களை தவறாக வழிநடத்த முனைகின்றன.

கடந்த ஆண்டு மே மாதம் அறிவிக்கப்பட்டது போன்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் கேணல் ரமேஷ், பொட்டு அம்மான், பானு, ஜெயம், நடேசன், புலித்தேவன், இளங்கோ, சாள்ஸ் அன்ரனி உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் அனைவருமே போர்க்களத்தில் தான் கொல்லப்பட்டனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# போதனா வைத்தியசாலை தாதியர் இன்றும் ஒரு மணி நேரம் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ்.போதனா வைத்தியசாலை தாதியர்கள் இன்றும் முற்பகல் 11.30 மணிமுதல் 12.30 மணிவரை வெளிநோயாளர் பிரிவு முன்றிலில் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு அம்சக் கோரிக்கையை முன்வைத்து இன்று வியாழக்கிழமை ஒன்பதாவது கட்டமாக இந்தப் போராட்டத்தை அரச தாதிய உத்தியோகத்தர் சங்கத்தினர் நடத்துகின்றனர்.

கடந்த 2ஆம் திகதியும் தாதியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தை நடத்தி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-319)

## நாட்டுக்குத் துரோகம் இழைத்திருந்தால்

# விமான நிலையத்திலே கைது செய்திருக்கலாம் குண்டர்களை ஏவித் தாக்கியது கோழைத்தனம்

## விக்கிரமபாகு கருணாரட்ன கூறுகிறார்

கொழும்பு,டிச9

நான் இந்த நாட்டுக்குத் துரோகம் செய்யும் வகையில் பிரிட்டனில் உரையாற்றியிருந்தால், நான் வந்து இறங்கியதும் என்னை விமான நிலையத்தில் கைது செய்து முறைப்படி விசாரணை நடத்தியிருக்கலாம். அதை விடுத்து எமது வாகனங்களுக்குப் பின்னால் குண்டர்களை ஏவி விட்டு தாக்குதல் நடத்துவது கோழைத்தனமானது - இப்படி நவ சமசமாஜக் கட்சியின் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன நேற்றுத் தெரிவித்தார்.

நவ சமசமாஜக் கட்சியின் செய்தியாளர் மாநாடு கொழும்பு கியூ வீதியிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது. விக்கிரமபாகு கருணாரட்ன தொடர்ந்து கூறியவை வருமாறு:-

பிரிட்டனில் நடைபெற்ற சில வைபவங்களில் உரை நிகழ்த்த எனக்குத் தனிப்பட்ட முறையில் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது. இதே போன்றதொரு அழைப்புத்தான் ஜனாதிபதிக்கும் அனுப்பப்பட்டிருந்தது. [illegible] ளும் அரச தலைவர்களுக்கு பிரிட்டனில் ஒரேயொரு பொலிஸ் அதிகாரியே பாதுகாப்புக்கு அனுப்பப்படுவார். உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளும் அரச தலைவருக்கு பாதுகாப்பு வழங்க பிரிட்டனில் நிதி ஒதுக்கப்பட வேண்டும். இதுதான் அங்கு நடைமுறையிலுள்ள சட்டம்.

பிரிட்டனில் மாத்திரம் சுமார் இரண்டு லட்சம் தமிழர்கள் வசிக்கின்றனர். அவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஓர் இனவாதியாகவும் சர்வாதிகாரியாகவுமே பார்க்கின்றனர்.

இதேவேளை, பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளும் அங்குள்ள சில முக்கியஸ்தர்களும் ஜனாதிபதியின் பிரிட்டிஷ் விஜயத்தை ரத்துச் செய்யும்படி அறிவுறுத்தியிருந்தனர். இந்த நிலையில் ஜனாதிபதியின் பிரிட்டிஷ் விஜயம் முட்டாள்தனமானது.

இலங்கையின் போர்க் குற்றங்கள் குறித்த புகைப்படங்கள் வீடியோக்கள் நாளாந்தம் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இதுகுறித்து அரசு தெளிவுபடுத்த வேண்டும். வெறுமனே மறுப்பு தெரிவிப்பதால் பயனில்லை.

நானோ அல்லது டாக்டர் ஜயலத் ஜயவர்தன எம்.பியோ ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. இது குறித்து எம்மைச் சாடுவது முறையல்ல.

யுத்தக் குற்றங்கள் தொடர்பாக எந்த வெளிநாடும் இலங்கைக்கு வந்து விசாரணைகளை மேற்கொள்ள முடியாது. அதற்கான ஒப்பந்தத்தில் இலங்கை கைச்சாத்திடவில்லை. இருந்தும் சர்வதேச நாடுகளில் மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்டோர், யுத்தக்குற்றமிழைத்தோர் பிரிட்டனுக்கு வந்தால் அவர்களைக் கைது செய்து விசாரணை நடத்தும்படி அங்குள்ள நீதிமன்றங்களில் மனு தாக்கல் செய்யலாம். நீதிமன்றம் அனுமதியளித்தால் அப்படியான அரச தலைவர்களைக் கைதுசெய்து விசாரணை நடத்த முடியும். பிரிட்டனில் இவ்வாறான சட்டங்கள் அமுலிலுள்ளன.

- இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இதோ முதன்முறையாக யாழ்.மற்றும் வன்னி மாவட்டங்களுக்கான 2011 ஆம் ஆண்டுக்கான

## மாபெரும் வேலை வாய்ப்புக்கள்

யாழ்.மற்றும் வன்னி மாவட்டங்களில் இருந்தும் அதிகமான பேருக்கு வேலை வாய்ப்பினை வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை

யாழ்.மற்றும் வன்னி மாவட்ட சகல பாகங்களிலும் இருந்தும்அதிசிறந்த நிதி சார்ந்த முன்னணி தனியார் (CIC-LIFE) கம்பனி கிளைகள் சிலவற்றுக்கான பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான வேலை வாய்ப்புத் திட்டம்

**வேலை வாய்ப்புக்கான பதவி வெற்றிடங்கள்**

1. விற்பனைத்துறை, அலுவலகத்துறை
2. விற்பனை நிறைவேற்று அதிகாரிகள்
3. விற்பனை ஆலோசகர்கள்
4. மேற்பார்வையாளர்கள் போன்றவற்றுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக பின்வரும் தகுதி உடையவர்கள் நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ளலாம்.

ஆண், பெண் இருபாலாரும்

வயது எல்லை - 18-50

**அடிப்படைத் தகுதி:**
O/L கணிதம் உட்பட ஆறு பாடங்கள் அத்துடன் வேறு தகைமைகள், முன்அனுபவம் இருப்பின் விருப்பத்தக்கது.

**இடம்:**
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (M.P.C.S), யாழ்ப்பாணம்.

**காலம்:**
11 ஆம் திகதி சனிக்கிழமை 2010

**நேரம்:**
மு.ப. 9.30 மணி தொடக்கம் பி.ப.1 மணி வரை (வி/573465)



புதிய கல்வியாண்டு
இன்று 3.00 P.m
★ தரம் 1 முதல் O/L வரை
★ புலமைப்பரிசில் சித்தியினருக்கு 2 மாதக்கட்டணச் சலுகை
★ மாதம் இரு பரீட்சைகள்
★ கணிதம்விசேட கவனம்.
நெருக்கடியற்ற கல்வி பாதுகாப்பான சூழல்
I.B.S. கண்டுக்குளி


## தவறிவிட்டது

07.12.2010 செவ்வாய்க்கிழமை திருநெல்வேலி யாழ்.பல்கலைக்கழக சூழலில் கையடக்கத் தொலைபேசி தவறி விட்டது. கண் டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். (தகுந்த சன்மானம் வழங்கப்படும்)
0716963063, 0779310845

## யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்

## புலமையாளர் கௌரவிப்பு

எமது பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2010 இல் சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமையைச் சேர்த்த மாணவச் செல்வங்களான

- க.விதுஷன் - 154
- இ.இராஜஜிதேந்திரன் - 147
- சி.அனுசிஜா - 145



ஆகியோரைப் பரிசில்தின நன்னாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்
(சி/573464)

## குடாநாட்டில் மின்தடை அறிவிப்பு

மின்சார சபையினர் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள இருப்பதால் குறிப்பிட்ட தினங்களில் காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை மின்தடையை அமுல் செய்யவுள்ளனர்.இன்றும் நாளையும் சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, செல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் பகுதிகளிலும்-நாளை மறுதினம் கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய பகுதிகளிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-319)

## மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்

எமது பாடசாலையின் எல்லாக் கட்டடத் தொகுதிகளுக்கும் உள்ளக ஒலியமைப்பு வசதிகளை

அமரர் சிவலிங்கம் கோவிந்தம்மா அவர்களின் ஞாபகார்த்தமாக செய்து தந்த எமது பழைய மாணவரும் லண்டனில் வசிப்பவருமான

சிவலிங்கம் யோகேஸ்வரன் அவர்களையும் பாடசாலையின் உள்ளக நீர்வழங்கல் அமைப்புக்கு உதவிபுரிந்த பழைய மாணவரும் பிரான்ஸில் வசிப்பவருமான சின்னத்தம்பி சந்திரகுமார் அவர்களையும் பாடசாலையின் வளவிருத்திக்கும் அபிவிருத்திக்கும் பல வழிகளில் உதவிபுரிந்து வரும் தம்பாட்டி கிராமிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரையும் பல உதவிகளை மனமுவந்து செய்துவரும் எமது பழைய மாணவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளை உரித்தாக்கி அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்கள்
யா/தம்பாட்டி அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயம்,
ஊர்காவற்றுறை.


## பருவகால மலிவு விற்பனை

அனைத்துப் பயன்தரு மரங்கள் அலங்காரத் தாவரங்கள் மலிவு விலையில்.

| | |
|---|---|
| ஒட்டுத் தோடை (விரிலிய சுவிற்) | மிளகு |
| ஒட்டுத் தேசி | கோப்பி |
| அம்பிரலா | கொக்கோ |
| ஒட்டுப் பலா | வெற்றிலைக் கொழுந்து |
| ஒட்டு மா | செவ்வரத்தை |
| ஈரப்பலா | றோஸ் |
| ஜம்பு நாவல் | பாம் வகைகள் |
| கமுகு | மினி எக்ஸ்சோறா |
| கறுவா | தென்னை |
| கராம்பு | காட்டுத் தேக்கு |
| | மகோகனி. |

அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்

பவிசாரு பூங்கனிச் சோலை.
311/1, பலாலி வீதி, கோண்டாவில் சந்தி.
0212228199, 0718475629.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி திபூசியஸ் டொறத்தி (கனகராணி)



குருநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி டொறத்தி நேற்று (08.12.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரசரத்தினம் - லூர்த்தம்மா தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான அருளப்பு - கிளாறம்மா தம்பதியரின் மருமகளும் திபூசியஸின் (குணம்-தாளையடி) அன்பு மனைவியும் கீர்த்தனா, றஜிஸ்மன், பிரசாந்தன், சதனா ஆகியோரின் அன்புத் தாயும் இந்திராணி, புனிதசீலி, இராசராணி (கட்டார்), அழகராணி, பிலிப்பு, காலஞ்சென்ற சந்திரன் மற்றும் விக்டோறியா, இந்திரா (பிரான்ஸ்), செல்வதி ஆகியோரின் சகோதரியும் நவரத்தினம் , யோகசீலி, மத்தியூஸ் (சுவிஸ்), இருதயம் (லண்டன்), ரவி, நிமல் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (09.12.2010) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குருநகர்,
யாழ்ப்பாணம். (107116)

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

### திருமதி நாரயணக்குருக்கள் தேவசேனா

புலோலி உபயகதிர்காமத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி நாரயணக்குருக்கள் தேவசேனா நேற்று(08.12.2010) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்தைச் சேர்ந்த அமரர் தியாகராஜக் குருக்கள்-புவனேஸ்வரி அம்மா தம்பதியரின் இளைய புத்திரியும், புலோலி உபயகதிர்காமத்தைச் சேர்ந்த இரத்தினசபாபதிசர்மா, சாரதாம்பாள் தம்பதியரின் இளைய மருமகளும், நாராயணக்குருக்களின் அன்பு மனைவியும், மகாலக்ஷ்மி, சிவாஜினி, வாகீஸ்வரசர்மா ஆகியோரின் சகோதரியும், சதாசிவசர்மா, சரவணபவஐயர், நந்த கோபசர்மா, ரோகினி அம்மா, கலைவாணி, கலைச்செல்வி ஆகியோரின் மைத்துனியும், பிரவணசர்மா, ரிசிகேசசர்மா, டிலக்சனா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உபயகதிர்காம இல்லத்தில் (09.12.2010)இன்று நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனஞ்செய்வதற்கு ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உபயகதிர்காமம்,
புலோலி தெற்கு,
புலோலி. (573467)

தகவல் :
நாராயணக்குருக்கள்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### துரைசிங்கம் பரமேஸ்வரி



மலேசியாவைப் பிறபிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் பரமேஸ்வரி நேற்று முன்தினம் (07.12.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2010) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மாயனத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குட்செட் றோட்,
முதலாம் ஒழுங்கை,
கோண்டாவில். (107118)

தகவல்:
குடும்பத்தினர்.

### வைரவன் நாகலிங்கம்



உசன், விடத்தற்பளையைச் சேர்ந்த வைரவன் நாகலிங்கம் நேற்று (08.12.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவன் மற்றும் பாய்க்கியம் தம்பதியரின் மூத்த மகனும் நாகம்மாவின் அன்புக் கணவரும் ஜெகதாஸ் (லண்டன்), உதயதர்சினி, அமுதா, பாலதாஸ், மயூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசகுமார், துரைசிங்கம், துஷி ஆகியோரின் அன்பு மாமனும் நவரத்தினம், சிவசுப்பிரமணியம், குணபாலசிங்கம் (ஜேர்மனி), ரகுவரன் (ஜேர்மனி), அன்னலட்சுமி, புஸ்பராணி (லண்டன்), சத்தியபாமா, அமுதராணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கம்சிகன், மதுநிலா, மதுமிஷா, மதுசாயி, ஜெரிதா, ஜெசுதா, பரணிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் கச்சாயைச் சேர்ந்த ஆறுமுகம் - சின்னமணி தம்பதியரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2010) வியாழக்கிழமை ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, உசன் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விடத்தற்பளை,
உசன். (வி/573472)

தகவல் :
வீ. சுந்தரலிங்கம்
(சகோதரன்)

## மரண அறிவித்தல்

### தம்பாப்பிள்ளை செல்லத்துரை



கற்குழி வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பாப்பிள்ளை செல்லத்துரை நேற்று (08.12.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் தம்பாப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் ஜீவராணியின் அன்புக் கணவரும் ரவிக்கா (சுவிஸ்), ரவீந்திரன் (இலங்கை கைத்தொழில் அபிவிருத் திச்சபை, யாழ்ப்பாணம்), ரமேஸ், ராகினி ஆகியோரின் அன்புத் தந்தையும் நாகராசா (சுவிஸ்), தவரூபி (சென். ஜேம்ஸ் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்), லோகேஸ்வரன் (விவசாயத் திணைக்களம், கிளிநொச்சி) ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம் (ஆசிரியர்), பரமேஸ் ஆகியோரின் சகோதரனும் அபிலாஸ் (சுவிஸ்), குயானன், சாதனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே : 0776412839 (வி/573476)

தகவல் :
ரவீந்திரன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## நாட்டின் ஜனநாயக நடைமுறையைக் காப்பாற்றுவதற்கு......

நாடாளுமன்றம் இப்போது கூச்சல், குழப்பம் நிறைந்த அரங்கமாக அடிக்கடி மாறிவருகின்றது. ஒரு வாரத்துக்கு முன்னர் ஐ.தே.கட்சி உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனாவை உடல் ரீதியாகத் தாக்குவதற்கு அரசு தரப்பின் மூத்த அமைச்சர்கள் முதற்கொண்டு ஏனைய பலர் கெம்பி எழுந்து சபையை மல்லுக்கட்டும் மேடை யாக மாற்றினார்கள்.

இன்னொருநாள், தம்மீதான குற்றச்சாட்டுக்கு உறுப்பினர் ஜயலத், சபாநாயகரின் அனுமதியுடன் தன்னிலை விளக்கம் அளித்துக்கொண்டிருந்தபோது, மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் அடிக்கடி குறுக்கிட்டுக் குழப்பிக்கொண்டிருந்தார். அதனைத் தவிர்க்குமாறு, சபாநாயகர் புத்திமதி கூற வேண்டிய தாயிற்று.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமையும் நாடாளுமன்றத்தில் பெரும் கூச்சலும், குழப்பமுமாக இருந்தது. ஜனாதிபதியினதும் நாட்டினதும் நற்பெயருக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் ஐ.தே.கட்சியின் மூத்த தலைவர் கரு ஜெயசூரிய பத்திரிகை ஒன்றுக்குச் செவ்வி அளித்தார் என்று குற்றஞ்சாட்டி, அவரைத் தேசத்துரோகி என்று வர்ணித்தார் சபை முதல்வரும் மிக மூத்த அமைச்சருமான சிறிபால டி சில்வா.

தேசப்பிரேமி (தேச பக்தன்) என்ற பட்டியை மாட்டிக் கொண்டு தேசத்துரோகம் செய்பவன் தான் அல்லன் என்று மறுத்துரைத்தார் ஜெயசூரிய.

பயங்கரவாதப் பிடியில் இருந்து நாட்டை மீட்ட தளபதி சரத் பொன்சேகாவைச் சிறையில் அடைத்துச் சித்திர வதை செய்வதும், ராஜீவ் காந்தியை கொலை செய்த கே.பிக்கு பாதுகாப்பு அளிப்பதுமே தேசத்துரோகம் என்றார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

இவ்வாறு நாளாந்தம் நாடாளுமன்றில் நடைபெறும் உறுப்பினர்களின் செயற்பாடுகளை பொறுக்க முடியா மல் சபாநாயகர் அடிக்கடி புத்திமதிப் பாடம் நடத்த வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டது.

அவர் தெரிவித்த அறிவுரைகளில் ஒரு பகுதி வருமாறு:

*நாடாளுமன்றம் என்பது நாட்டின் உயரிய சபை. இந்த உயரிய சபைக்குத் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதனை மனதில் கொள்ள வேண்டும். கடந்த சில நாள்களாக இந்தச் சபையில் அமைதியற்ற நிலை நிலவு கின்றது.*

*இந்த உயர்ந்த சபையைப் பார்வையிடுவதற்காக வருங்காலத் தலைவர்களான மாணவர்கள் அன்றாடம் கலரிக்கு வருகிறார்கள். இங்கு நடப்பவற்றை அவர்கள் அவதானிக்கிறார்கள். அந்த எதிர்காலத் தலைவர்களுக்கு, இந்த உயர்ந்த சபையில் உள்ளவர்கள் முன்னுதாரணமாக இருக்க வேண்டும். இதனை இங்குள்ள உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.*

*உயரிய சபையில் கடந்த சில நாள்களாக உறுப்பினர்கள் சிலர் பயன்படுத்தும் வார்த்தைப் பிரயோகங்கள் குறித்து வெட்கித் தலைகுனிய வேண்டியுள்ளது. அவை இந்த உயரிய சபையில் தவிர்க்கப்பட வேண்டும். பண்பான சொற்களைப் பாவிக்கப் பழகிக் கொள்ளுங்கள்.*

*சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த சபையில் கருத்துச் சுதந்திரம் உள்ளது. அதை எவராலும் தடுக்க முடியாது. ஓர் உறுப்பினர் தனது கருத்தை வெளிப்படுத்தும் போது ஏனையவர்கள் அமைதியாக இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும். இந்தச் சபையில் பல மூத்த உறுப்பினர்கள் உள்ளார்கள். அவர்களுக்கு நாடாளுமன்ற நடைமுறை நன்கு தெரியும். அதனை அவர்கள் மதித்து நடக்க வேண்டும். மூத்த உறுப்பினர் கள் இதற்கு விதிவிலக்கல்ல. ஆளும் கட்சி என்றால் என்ன எதிர்க்கட்சி என்றால் என்ன, அனைத்து உறுப்பினர்களும் இந்தச் சபையில் சமமாகவே மதிக்கப்படுவார்கள்.*

*எதிர்காலத்தில் சபை அமர்வுகளை அமைதியாகவும் நாகரிகமாகவும் நடத்த என்னுடன் ஒத்துழையுங்கள்-* என்பதாகும்.

ஜனாதிபதியின் லண்டன் விஜயத்தின்போது, ஒக்ஸ்போட் பல்கலைக்கழக யூனியனில் ஏற்பாடு செய்யப்பட்ட உரையை அவர் ஆற்ற முடியாமற் போனமை நாட் டுக்கும் அவருக்கும் அவமானம் என்பது உண்மையே. அதற்கு மூலகாரணமான காரணிகளைக் கண்டறிந்து அவற்றைக் களைவதற்கு நடவடிக்கை எடுப்பதே அரச தரப்பின் முதற் பணியும், பிரதான பணியுமாக இருக்க வேண்டும்.

சர்வதேச மட்டத்தில் எழுந்துள்ள குற்றச்சாட்டுகளை தக்க சான்றுகளுடன் மறுத்துரைக்கும் பொறுப்பும், சந்தர்ப்பமும் அரசுக்கு உண்டு. அவ்வாறு செய்வதில் அக்கறை காட்டாது, நாடாளுமன்றத்தில் உறுப்பினர் "சமர்" செய்வதால் உரிய பெறுபேறு எதுவும் கிடைக்க வாய்ப்பில்லை. இதனை அரசாங்கத்தில் உள்ளவர்கள் உய்த்து உணரத் தவறுவது ஏனோ தெரியவில்லை.

இதேபோன்ற சம்பவமே லண்டனுக்குச் சென்று விழா ஒன்றில் உரை நிகழ்த்திவிட்டுத் திரும்பிய நவசம சமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத் தின விமான நிலையத்தில் வந்திறங்கிய பின்னர் நடத்தப்பட்ட தாக்குதலும் ஆகும்.

இவை ஜனநாயகத்தின் மீதும் அதன் அடிப்படை மீதும் விழுந்த அடி.

எனவே, அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களும், அவர்களின் அடியாள்களும் பிரச்சினைகளை, விவகாரங்களை ஜனநாயகக் கட்டமைப்புக்குள் நின்று, எல்லோரும்- சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய மூவின மக்களும் - சமாதானமாகவும் சமஉரிமைகளுடனும் வாழும் நிலையைக் கட்டி எழுப்புவதற்கு மனங்கொள்ள வேண்டும். அதுவே நல்லிணக்கத்துக்கும் நல்லாட்சிக்கும் வேண்டப்படுபவை. இல்லையேல் தன்வினை தன்னைச்சுடும், ஓட்டப்பம் வீட்டைச்சுடும் என்ற நிலையே வந்தெய்தும்.

# தொழிற்சாலைகள் பதிவு செய்யப்படாவிடின் சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானம்

### தொழிற்சாலை பரிசோதனைப் பொறியியலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.09

புதிதாக நிர்மாணிக்கப்படும் தொழிற்சாலைகள், இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலைகள் தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும்.

இல்லையேல் சட்டநடவடிக்கை எடுக்கவும் தீர்மானித்துள்ளோம் எனத் தெரிவித்தார். மாவட்ட தொழிற்சாலைகள் பரிசோதனைப் பொறியியலாளர் சி.மகேந்திரராஜன்.

இந்த விடயம் தொடர்பாக உதயனுக்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:'

தொழிற்சாலைகளின் இரண்டு தளவரைபடப் பிரதிகள் அனுமதிக்காக மாவட்டத் தொழிற்சாலை பரிசோதனைப் பொறியியலாளருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மாவட்ட தொழிற்சாலைப் பரிசோதனைப் பொறியியலாளர் அனுமதி பெற்ற பின்னரே கட்டட நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

கட்டடம் நிர்மாணிக்கப்பட்டபின் இயந்திர சாதனங்கள் பொருத்தப்படும் பொழுதும் மிகையான இட நெருக்கடி ஏற்படாதிருக்கவும், சரியான முறையில் நிறுவுவதை உறுதிப்படுத்தவும் ஆலோசனை பெறப்பட வேண்டும்.

தொழிற்சாலைகளை நிர்மாணித்து, இயந்திரங்களை இயக்க ஆரம்பிப்பதற்கு 30 நாள்களுக்கு முன்னர் மாவட்ட தொழிற்சாலைப் பரிசோதனைப் பொறியியலாளருக்கு தெரியப்படுத்த வேண்டும்.

தொழிற்சாலைகள் இயங்க ஆரம்பித்ததும் தொழிற்சாலைக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 128) கீழ் பதியப்பட வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட பின்னர் தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளுக்கு அமைவாக இயங்க வேண்டும். மீறினால் தொழிற்சாலைகள் பதிவுச் சான்றிதழ் இரத்துத்துச் செய்யப்படுவதுடன் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற்சாலைக் கட்டடத்தில் ஏதேனும் விசாலிப்புச் செய்தல் அல்லது மாற்றஞ் செய்தல் போன்ற விடயங்களுக்கு எனது ஆலோசனை பெறப்பட வேண்டும்.

தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 128) கீழ் உள்ளடக்கப்படும் தொழிற்சாலைகளின் விவரங்கள்:

அரிசி ஆலை, அரைக்கும் ஆலை, மர அரிவு ஆலை, தச்சுத் தொழிலகம், கல்லுடைக்கும் ஆலை, இரும்புத் தொழிலகம், தும்புத் தொழிற்சாலை, வாகனத் திருத்தகம், வாகனச் சுத்திகரிப்பு நிலையம், ரயர் திருத்தகம், பொறியியல் வேலைத் தளம், வெல்டிங் வேலைத் தளம், வார்ப்பகம், செங்கட்டி, ஓடு உற்பத்தி செய்யும் வேலைத்தளம், கட்டட நிர்மாணத்தளம் (6 வாரங்களுக்கு மேற்பட்ட ஒப்பந்த காலமுடையவை), துறைமுகம், கண்ணாடியிழைப் படகு நிர்மாணிக்கும் வேலைத் தளம், பிளாஸ்ரிக் ஒட்டும் வேலைத் தளம், அலுமினியம் பொருத்தும் வேலைத் தளம், பனிக்கட்டித் தொழிற் சாலை, மின்சார சபை, மின்சார உப கரணத் திருத்தகமும், மீளச்சுற்றும் நிலையமும், வானொலி, தொலைக்காட்சி, கணினி திருத்தகம், மணிக்கூடு திருத்தகம், மின் முலாமிடும் வேலைத் தளம், மின்கலம் மின்னேற்றும் வேலைத்தளம், மின்தறி நிலையம், பதிப்பகம், வெதுப்பகம், புடைவை அச்சிடும் நிலையம், உணவு தயாரிக்கும் நிலையம், நகைத் தொழிலகம், படமாடம். (ம-14)

## விக்டோரியா நீர்த்தேக்கத்தின் இரு வான்கதவுகள் மூடப்பட்டன

கொழும்பு, டிசெ.9

விக்டோரியா நீர்த் தேக்கத்தின் இரு வான் கதவுகள் மூடப்பட்டன.

பெருமழை காரணமாக நிரம்பியிருந்த விக்டோரியா நீர்த்தேக்கதில் திறந்து விடப்பட்டிருந்த ஆறு வான் கதவுகளில் இரண்டு மீண்டும் மூடப்பட்டதாக நீர்த்தேக்கதுக்குக் பொறுப்பான பொறியியலாளர் எஸ்.ஆர்.கே. அருப்பல தெரிவித்தார்.

இப்பிரதேசத்தில் மழை ஓரளவு குறைந்துள்ளதால் இவ்விரு கதவுகளும் மூடப்பட்டு தற்சமயம் நான்கு கதவுகள் மட்டும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மழை மேலும் குறைவடையும் பட்சத்தில் மற்றைய கதவுகளும் படிப்படியாக மூடப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

## காக்கைதீவில் பூர்த்தி செய்யப்படாத வீடுகளின் மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.9

காக்கைதீவு மீனவர் குடியேற்றத் திட்டத்தில் யு.என்.டி.பி. நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தி செய்யாமல் விடப்பட்ட வீடுகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள மேற்படி நிறுவனம், வீடுகளைப் பூர்த்தி செய்வதற்காக காக்கைதீவுக்குச் சென்று பயனாளிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி மதிப்பீடு செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

1985ஆம் ஆண்டு காக்கைதீவுப் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட மீனவர் குடியேற்றத் திட்டத்திற்கு அருகில் 2002 ஆம் ஆண்டு யு.என்.டி.பி. நிறுவனத்தால் மீனவர்களுக்கான வீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 25 வீடுகள் அமைக்கப்பட்டன.

பூர்த்தி செய்யப்படாமல் விடப்பட்ட இந்த வீட்டுத் திட்டத்தின் வீடுகளில் சிரமத்தின் மத்தியில் பயனாளிகள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த வீட்டுத் திட்டத்தை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு முன்வந்துள்ள மேற்படி நிறுவனம் தற்போது காக்கைதீவிற்குச் சென்று பயனாளிகளுடன் கலந்துரையாடி வீட்டுக்குத் தேவையான கட்டடப் பொருள்களின் மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளது. (201-115)

## பரிசளிப்பு விழா

கோப்பாய், டிசெ. 9

கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் ம.ஞானசம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். ஆசிரியர் வள நிலைய முகாமையாளர் ஆர். இரட்ணசிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி கோப்பாய் பிரதேச அமைப்பாளர் இ. ஐங்கரன், இலங்கை வங்கி கோப்பாய் கிளை முகாமையாளர் மு. தவபாலன், மக்கள் வங்கி கோப்பாய் கிளை முகாமையாளர் த.கனகலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர்.

(204-72)

## நாளை

| | | |
|---|---|---|
| கார்த்திகை 24 | | 10.12.2010 வெள்ளிக்கிழமை |
| திதி: | : | பஞ்சமி பி.இ. 02.31 வரை |
| நட்சத்திரம் | : | திருவோணம் பி.இ. 12.25 வரை |
| சுபநேரம் | : | [illegible] வரை |
| ராகுகாலம் | : | 10.49-12.19 வரை |

## ஒருமை என்கின்ற உணர்வு தேவை

பல மனிதர்கள் கடவுளுக்காக ஏங்குகிறார்கள் வழிபடுகிறார்கள் அவரையே மனதில் நினைத்திருக்கிறார்கள். ஆனால் எந்த வழியாலும் கடவுளை உணர முடியாது. இந்த எல்லா நடவடிக்கைகளினதும் அடிப்படை மனிதனையும் இறைவனையும் வேறுபடுத்துகின்றது. ஒருமை என்ற உணர்வுதான் இங்கே தேவையானது. இதை எப்படிப் பெறுவது?நானும் நீயும் என்ற உணர்வை அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டும். இந்த ஒருமை என்ற உணர்வு மனதுக்கும், புலன்களுக்கும் அப்பாற்பட்டது. புத்தி மட்டுமே புலன்களுக்கு ஏற்பட்ட இந்த உணர்வை அனுபவிக்க முடியும் (காயத்ரி ஜெபம்).

மனிதன் அறிவுள்ள உயிர். ஆனால் அவனுக்கு இந்த அறிவை எப்படிப் பாவிப்பது என்று தெரியவில்லை. எப்படி இந்த அறிவைப் பாவிக்க வேண்டும் என்று ஒரு சிலருக்குத் தெரிந்திருந்தாலும் தவறான வழிகளை அவர்கள் பின்பற்றுகின்றார்கள். ஏன் இந்த வழியைப் பின்பற்றுகிறீர்கள் என்று கேட்டால் அவர்கள் ஒரு வழவழப்பாகச் சொல்லிக் கொள்கிறார்கள். எல்லாம் மாயை என்கிறார்கள். மாயை என்பது ஒரு தவறான நம்பிக்கை என்றே பொருள்படும். ஆனால் அது உண்மையில் இல்லாத ஒன்று. இந்த ஆச்சரியமான உலகை உண்டாக்கி அதை அதன் பலவகையான தோற்றங்களுடன் உண்மை போலத் தோன்றச் செய்தது மாயை என்று மக்கள் கற்பனை செய்துள்ளார்கள்.

அறிஞர்கள் இந்த மாயையை ஒரு நாட்டியக்காரி அல்லது நர்த்தகி என்று அழைத்தனர். இந்த மாயை ஒவ்வொருவரையும் ஆட்டி வைக்கின்றது. இதை எப்படிக் கட்டுப்படுத்தலாம். இந்த நர்த்தகி என்பதை மாற்றி வைத்தால் கீர்த்தன என்றாகிறது. இது ஒரு பக்தி மார்க்கமாகும்.

(நன்றி: தெய்வீகம் மலரும் போது)



சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலுவிழந்தோர் உளப்பாதிப்புக்கு ஆளாகாதவாறு சமத்துவம் வழங்க சமுதாயம் முன்வர வேண்டும்



யாழ்ப்பாணம் டிசெ.9

யாழ்ப்பாணம், வன்னி மாவட்டம் உட்பட உடலால் அங்கவீனம் அடைந்தோர் அதிகமாக உள்ளனர். எனினும் அவர்களுக்கு உளரீதியாக எவ்வித பாதிப்புக்களும் ஏற்படாத வகையில் சமுதாயம் அவர்களுக்கு சமத்துவம் வழங்க முன்வரவேண்டும். இவ்வாறு தெரிவித்தார் டாக்டர் நந்தகுமார்.

சர்வதேச மாற்று வலுவுடையோர் தினம் யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் நடைபெற்றது.

## டாக்டர் நந்தகுமார் உரை

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் வன்னி மாவட்டத்தில் போரின்போது அநேகமானோர் கால்களை இழந்து அங்கவீனமடைந்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது ஏற்படும் விபத்துக்களில் பலர் அவயவங்களை இழக்க நேரிடுகிறது. அங்கவீனமடைந்தோர் வைத்தியசாலைகளில் தமது தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் சிகிச்சை முறைகளை மேற்கொண்டு உதவ முன்வரவேண்டும். அதற் கமைய கட்டட வசதிகளையும் பெற்றுத்தர அரசாங்கமோ தனியார் நிறுவனங்களோ முன்வரவேண்டும் என்றார்.

இதேவேளை -

2000 இற்கும் மேற்பட்ட கால்களை இழந்த பயனாளிகள் யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தில் பயன் பெற்று வருகின்றனர்.

ஜெய்ப்பூர் நிறுவனத்தின் நிர்வாகச் செயலாளர் தலைமை யில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் ஐ.சி.ஆர்.சி உத்தியோகத்தர்கள் நிர்வாகத் தலைவர் திருமதி ஜெ.கணேசமூர்த்தி, ஜெய்ப்பூர்பயனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(204-313)


## வழிபடு சபையின் பொதுக்கூட்டம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் வழிபடுநர் சபையின் பொதுக்கூட்டம் ஏற்கனவே 07.09.2010 இல் பத்திரிகையில் விளம்பரம் செய்தவாறு 19.12.2010 ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும். அன்றையதினம் ஆலய முகாமைத் திட்ட வாசகர் பிரிவு 5 தொடர்பாக சபையினரின் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளதால் 2004 இல் அங்கத்தவர்களாக அனுமதிக்கப்பட்டவர்களும் 2009,2010 இல் உறுப்பினர்களாகச் சேர்வதற்கு அங்கத்துவப் பணம் செலுத்தியவர்களில் முகாமைத் திட்ட விதி 3, மற்றும் விதி 6 இல் கூறப்பட்டவாறு தகைமையுடயவர்களும் பொதுக் கூட்டத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

தனிப்பட்ட முறையில் அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படாமையினால் இக்கூட்ட அறிவித்தலை தகைமையுடையோர் ஏற்று சமுகமளிக்கவும். இக் கூட்டம் தீவகம் தெற்கு பிரதேச செயலாளர் திரு.மு.நந்தகோபாலன் அவர்களின் தலைமையில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்

(107031) நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்



## விண்ணக வாழ்வில் முதலாம் ஆண்டு நினைவு



மண்ணுலகில்: 27.09.1944

விண்ணுலகில்: 09.12.2009

அமரர் செல்லையா மகேந்திரன்

அன்பான அப்பாவாய்
பண்பான கணவனாய்
பரிவான மாமனாய்
பாசமுள்ள பேரனாய்
ஆளுமையின் ஆணிவேரான
எம் ஆசானே
ஆறவில்லை எம் இதயவடுக்கள்

46/2, மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம். (107039)

உங்கள் பிரிவால் ஏங்கும்:
உம்முடையார்



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு: 11.04.1946
உதிர்வு: 09.11.2010

அமரர் சங்கரப்பிள்ளை லயான் இராசரத்தினம் (J.P)

கடந்த 09.11.2010 அன்று இறைபதம் அடைந்த எமது அன்பு தெய்வத்தின் மறைவு செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறி எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்வதோடு இன்று 09.12.2010 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (சி/573455)

குடும்பத்தினர்.


## நெற்பயிர்களை அழிக்கும் கட்டாக்காலிகள்

தென்மராட்சி டிசெ. 9

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கால போக நெற் செய்கைப் பயிர்கள் கட்டாக்காலி மாடுகளால் அழிக்கப்படுவதாக நெற் செய்கை பயனாளிகள் தெரிவித்துள்ளனர்.

நெற் பயிர்களைப் பாதுகாக்க அமைக்கப்பட்ட முட்கம்பி வேலிகள் சட்ட விரோதமாக மாடுகள் பிடிப்போரால் வெட்டப்படும் இடங்களால் வரும் மாடுகள் பயிர்களை அழிப்பதாகத் தெரிவித்தனர்.

இரவு வேளைகளில் சட்ட விரோதமாக மாடு பிடிக்க வருவோரைத் தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்டோரை கேட்டுள்ளனர்.

(204-207)

## கிறிஸ்து இல்லப் பெருவிழா

ஊர்காவற்றுறை டிசெ. 9

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள கிறிஸ்து இல்லத்தின் வருடாந்த பெருவிழாவும் பெற்றோர் தின விழாவும் எதிர்வரும் சனிக்கிழமை மேற்படி இல்லத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இல்லத்தின் இயக்குநர் அருட் தந்தை ஏ.றொபின்சன் ஜோசேப் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் அருட் தந்தையர்கள், அருட்சகோதரிகள், ஆசிரியர்கள், இல்ல மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்துகொள்வர்.

( 201-325)


## தவறிவிட்டது

கச்சார்வெளி, பளை என்னும் முகவரியைச் சேர்ந்த வீரசிங்கம் கோபாலசிங்கம் என்பவரது தேசிய அடையாள அட்டை (763601862V), சாரதி அனுமதிப் பத்திரம் என்பன 05.12.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து வவுனியா செல்லும் பேருந்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 0772727546என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.



## விநியோகத்தர்கள் தேவை

யாழ்ப்பாணம்/ வன்னி/ வவுனியா

மேலேயுள்ள பகுதிகளுக்கு எமது Export Quality உணவு வகைகளை விநியோகப்படுத்த Distributors தேவை. Consumer Items தற்போது விநியோகித்துக்கொண்டிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். உயர்ந்த லாபம்

Instant Products,
Health Products & Other items

தொடர்பு: 0713267826
011 2716288 (Only Office hours)


## திருவெம்பாவை பூசை

வண்ணை, டிசெ. 9

அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை திருவெம்பாவை பூசை ஆரம்பமாகவுள்ளது.

டிசம்பர் 22 ஆம் திகதி புதன் கிழமை வரையான 10 தினங்களுக்கும் தினமும் அதிகாலை 5 மணிக்கு திருப்பாவைப் பாடல்கள் ஓதலும் பூசைகளும் நடைபெற்று மாணிக்கவாசகர் சுவாமி திருவுருவம் வீதியுலா வரும் நிகழ்வும் நடைபெறும். (204-160)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை 2010 இல்

செல்வன் சிவநாதன் அகிலன்

157 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்தமையையும் 70 இற்கு மேல் புள்ளிகளைப் பெற்ற பின்வரும் மாணவர்களையும் இப்பரிசில் நாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| இ.லோகிராஜ் | 119 | த.விநோதன் | 113 |
| ப.கீர்த்திகன் | -101 | சி.அனுசியன் | 96 |
| சு.லக்ஷன் | 94 | ந.போதினி | 89 |
| க.கர்ஷவதனி | 77 | | |

பாடசாலைச் சமூகம்
யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்.



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1249 நீலம்

துலாம் 13 20 26 55 07-12-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 7,576,575/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 211,452 | 20/- | 4,229,040/- |
| 2 இலக்கங்கள் | 19,422 | 40/- | 776,880/- |
| 1 இல. + லக்கினம் | 19,208 | 60/- | 1,152,480/- |
| 2 இல. + லக்கினம் | 1,792 | 200/- | 358,400/- |
| 3 இலக்கங்கள் | 519 | 1000/- | 519,000/- |
| 3 இல. + லக்கினம் | 45 | 10,000/- | 450,000/- |
| 4 இலக்கங்கள் | 02 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 01 | 7,576,575/- | 7,576,575/- |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 15,462,375/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 555 | | 576,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 252,996 | | 16,038,375/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

விருச்சிகம் 06 24 25 45

ஜக்பொட் பரிசு ரூபா. 200,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 552 | 500/- | 276,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 200,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 555 | | 576,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 300,000/-



## மரண அறிவித்தல்

திருமதி மிக்கேல் ஞானம்மா



கூளாவடி கிழக்கு, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மிக்கேல் ஞானம்மா (06.12.2010) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மிக்கேலின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தங்கமணி மற்றும் புஸ்பம் (கனடா), ராணி, ராசாத்தி (கொழும்பு), அல்பிறேட் (லண்டன்), டேவிற் (டென்மார்க்), நவரட்ணம் (A.M.J.Trade Center), லலிதா (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயும் வலோரியாம் பிள்ளை, பாலசிங்கம் (கனடா), ராசா, அலோசியஸ் (Francis Enterprise (PVT) Ltd.- கொழும்பு), மங்களா (லண்டன்), பற்றிமா (டென்மார்க்), தியடோசியா (ஆசிரியர், யா/சென்ற். ஆன்ஸ் றோ.க.த.க.பாடசாலை), ஜெயக்குமார் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (10.12.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மி.மரியதாஸ் (நவரட்ணம்-மகன்).
தொ.பே.: 021 3218392, 077 7068633.

4ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துச் சிதம்பரத்தில் திங்களன்று திருவாதிரை உற்சவம் ஆரம்பமாகிறது



காரைநகர்,டிசெ.9

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை உற்சவம் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

உற்சவ காலங்களில் தினமும் காலை 7மணி முதல் மூல மூர்த்தி களுக்குவிசேட அபிஷேக ஆரா தனைகளும் தொடர்ந்து மணி வாசகப்பெருமான் எழுந்தருளி கூத்தபிரான் சந்நிதியில் திருவெம்பாவை ஓதலும் தொடர்ந்து மணிவாசகப் பெருமான் உள்வீதி உலா வருவதலும் இடம் பெற் றும். முற்பகல் 11 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் சுவாமி திருவீதி உலாவருதலும் இடம்பெறும்.

எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பஞ்சரத பவனியும் அன்றைய தினம் இரவு 2 மணி முதல் நடேசர் அபிஷேகமும் மறுநாள் புதன் கிழமை அதிகாலை 5 மணிக்கு ஆருத்திரா தரிசனம் இடம்பெறும் மாலை 3 மணிக்கு திருவூடல் உற்சவமும் தொடர்ந்து தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.

உற்சவ காலங்களில் யாழ். நகரில் இருந்து ஆலயம் வரை நேரடி பஸ்சேவைகள் நடத்தப் படவுள்ளன. ஆலயச் சூழலில் உள்ள அறப்பணி நிலையம், மாணிக்கவாசகர் மடாலயம் என்பன அடியார்களுக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடாகியுள்ளது. மாணிக்கவாசகர் சபையும் இறுதி 5 நாள்களும் திருவாசகப் பெரு விழாவை நடத்தவுள்ளது.

அத்துடன் உற்சவ காலங்களில் ஆலயத்துக்கு வருகை தரும் பல்லாயிரக்கணக்கான அடியார்களின் போக்குவரத்து, சுகாதாரம், குடிதண்ணீர், பாதுகாப்பு போன்ற இதர வசதிகளை ஏற்படுத்துவதற்காக காரைநகர் பிரதேச சபை, இலங்கை போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலை,உதவி அரசாங்க அதிபர் பணிமனை உள்ளிட்ட அரசநிறுவனங்கள் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன.

(201-250)

# அடையாள அட்டை விண்ணப்பத்தை பேணிப் பாதுகாத்தார் கிராமசேவகர்

தென்மராட்சி,டி.செ.9

கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கிராம அலுவலரிடம் கையளிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்பம் கடந்த வாரம் இடம்பெற்ற நடமாடும் சேவையின் போது மீண்டும் உரியவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவந்துள்ளதாவது:

கிராம அலுவலரிடம் படிவத்தினைக் கையளித்தவர் பல தடவைகள் அவரிடம் கேட்டபோது இன்னும் அடையாள அட்டை வர வில்லை என்ற பதிலே கிடைத்தது. கடந்த வாரம் தென் மராட்சியில் நடைபெற்ற நடமாடும் சேவை யில் இது குறித்து முறையிடுவதற்கு கடிதம் ஒன்றுடன் குறிந்த நபர் அங்கு சென்றுள்ளார்.

கிராம அலுவலரிடம் சென்று விண்ணப்பம் எப்போது அனுப்பப்பட்டது என்பதைச் சிபார்சு செய்து வருமாறு நடமாடும் சேவையில் கலந்துகொண்ட அதிகாரிகள் அவரிடம் கூறினார்கள்.

இதனையடுத்து கிராம சேவகரிடம் குறித்த நபர் சென்ற போது அலுவலகத்தில் உள்ள கோவையொன்றில் வைக்கப்பட்டிருந்த விண்ணப்பத்தினை எடுத்து அந்த நபரிடம் கையளித்தார் கிராம அலுவலர். விண்ணப் பத்தினைப் பாதுகாப்பாக வைத்திருந்தமைக்கு நன்றி தெரிவித்து உரிய படிவத்தினை நடமாடும் சேவையில் கையளித்தார் அந்த நபர். இவ்வாறான பல சம்பவங்கள் அரச அலுவலகங்களில் வெளியில் வராத நிலையில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-207)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.9

யாழ். கைதடி சேதுகாவலர் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும், சமையறைத் திறப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளன.

வித்தியாலய முதல்வர் திருமதி இ.சிவஞானசிவம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி கோட்டக் கல்வி அலுவலர் குமாரசாமி சிவானந்தமும், சிறப்பு விருந்தினர்களாக உலக உணவுத்திட்டத்தின் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் விஸ்வலிங்கம் ஜெயரூபன், தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்தம்பையாஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரும் கலந்துகொள்வர்.(ற)

## உதவி....



வாழ்வாதாரம்: இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் வீட்டுத்திட்டத்தின் கீழ் காரைநகர் வடகிழக்கில் புதிதாக கட்டப்பட்ட வீட்டினை பயனாளியிடம் கையளிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனை நிர்வாக அலுவலர் திருமதி அ.விஜயகுமார் பயனாளியிடம் வீட்டின் சாவியை கையளிக்கின்றார்.

(204-250)

# வன்னியிலிருந்து குடாநாட்டுக்கு எரு

சண்டிலிப்பாய்,டிசெ.9

குடாநாட்டுக்கு வன்னியிலிருந்து போதுமானளவு எரு கிடைப்பதால் விவசாயிகள் புகையிலைச் செய்கையில் அதிக நாட்டம் கொண்டுள்ளனர்.

இதனால் தோட்டக் காணிகளில் எருக் குவியல்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

கடந்த யுத்த காலப் பகுதியில் வாகனப் போக்குவரத்தின்மையால் வன்னியிலிருந்து குடாநாட்டிற்கு எரு எடுத்து வரமுடியாத நிலை காணப்பட்டது.

இதனால் குழைகளை மட்டும் பயன்படுத்தி புகையிலை உற்பத்தி செய்யப்பட்டது.

தற்பொழுது நாட்டில் ஏற்புட்டுள்ள சமாதானச் சூழ்நிலையைத் தொடர்ந்து வன்னி யிலிருந்து தேவையான எரு லொறிகள் மூலம் குடாநாட்டுக்கு எடுத்து வரப்படுகின்றது. பல வருடங்களாக எருவைப் பெற முடியாமல் கவலையுடன்இருந்த விவசாயிகள் தற்பொழுது தோட்டக் காணிகளுக்கு தேவையான எருவை வாங்கிப் பயன்படுத்துகின்றனர்.

புகையிலைச் செய்கைக்குத் தேவையான முக்கியமான மூலப் பொருள் இல்லாமல் கைவிடப்பட்டிருந்த தோட்டக் காணிகளில் இம்முறை புகையிலை உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (201- 115)




# கல்விப் பெறுபேறுகள் உயர்வடைந்த போதும் மாணவரின் பழக்கவழக்கங்களில் அதிருப்தி

## கல்வி,பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் உரை

யாழ்ப்பாணம்,டிசெ.9

கல்விப் பெறுபேறுகள் உயர்வான நிலையில் உள்ள போதும் மாணவர்களின் பழக்க வழக்கங்கள் குறித்துப் பலரும் அதிருப்தி தெரிவித்து வருகின்றனர்.

எனவே, பாடசாலை மட்டங்களில் நடத்தப்படும் நிகழ்வுகள், விழாக்கள் மாணவர்களுக்கு ஒழுக்கவிழுமியங்களைப் போதிப்பதாக இருக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் வட மாகாண கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இடம்பெற்ற முத்தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இளம் சமூகத்தினரை வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களிடம் உள்ளது.

பாடசாலைகள் மற்றும் கல்விச் சாலைகளில் நடத்தப்படும் நிகழ்வுகள், விழாக்கள் மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகள் மூலம் மாணவர்களின் ஒழுக்க விழுமியங்கள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்.


எமது மொழியில் உள்ள நேசம், நேசிப்பு என்ற வார்த்தைகளுக்கு அர்த்தம் இல்லாமல் போய் விட்டது.

தனிமனிதர்களாக நாம் மாறி வருகிறோம். 'நேசம்', 'நேசிப்பு' என்பன எதிர்மறையாகப் போய் விட்டன. இது எமது சந்ததிக்கு ஆபத்தான விடயமாகும்.

எமது இளம் சமூகத்தினருக்கு ஒழுக்க விழுமியங்களைக் கற்றுக் கொடுப்பதற்காகவும் நாம் எமது கற்றல் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும்- என்றார்.

இந்த நிகழ்வில் கல்லூரி அதிபர் வி.கே.கணபதிப்பிள்ளை, பேராசிரியர் அ.சண்முகதாஸ், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி கே. பொன்னம்பலம், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் ஆகியோரும் உரையாற்றினர். (ம-14)

## வாழ்வளிப்பு...



அன்பளிப்பு: சுகவாழ்வுக்கான பயணம் நிறுவனத்தின் அனுசரணையுடன் மருத்துவ பரிசோதனை முகாம் இணுவில் கிழக்குப் பொது நூலகத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நிறுவனத்தின் தலைவர் ஜி.நக்கீரன் மாணவி ஒருவருக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்குகிறார். (204)

# குடும்பநல உத்தியோகத்தர் இடமாற்றம் ; சுதேச வைத்திய அமைச்சுக்கு மகஜர்

நவாலி,டிசெ.9

யாழ்.மாவட்டத்தில் நீண்ட காலமாகப் பணியாற்றி வந்த குடும்ப நல உத்தியோகத்தர்களின் இடமாற்றத்தை ஆட்சேபித்து அரச குடும்பநல சுகாதார சேவை உத்தியோகத்தர் சங்கம், வடக்கு கிழக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

குடும்பநல உத்தியோகத்தர்களின் இடமாற்றப்பட்டியல் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டதை ஆட்சேபித்தே இந்த மகஜர் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த மகஜரில் குடும்பநல உத்தியோகத்தர்களுக்குப் பல்வேறு அசௌரியங்களையும் பிரச்சினைகளையும் தோற்றுவிக்கக் கூடியதாக இடமாற்றம் செய்யப் பட்டுள்ளது என தெரிவிக்கப் பட்டுள்ளது. இவர்களில் பலருக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களில் இருப்பிடங்கள் அழிவுற்றுள்ள நிலையில் தற்போது மக்கள் மீள்குடியேறி வருகின்ற சந்தர்ப்பத்தில் இந்த இடங்களுக்குக் குடும்பச் [illegible] நல உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்துள்ளமை அவர்களை நிர்க்கதி நிலைக்குக் கொண்டு செல்கின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டுச் சபை கூடுகின்ற சந்தர்ப்பத்தில் எமது சங்கத்தின் பிரதிநிதியை யும் அழைப்பதன் மூலமாக அவர்களின் பிரச்சினைகளை முன்வைத்து சுமூகமான இட மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கு சாதகமான சூழ்நிலை கள் உருவாக்க முடியும் என்றும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநர், பொதுச்சேவை ஆணைக்குழு, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (204-100)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய நியமன நிபந்தனைக்கு மாறாக இடமாற்றம் செய்வது மனித உரிமை மீறல்

## கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம்

யாழ்ப்பாணம்,டிசெ.9

ஆசிரியர்களின் நியமன நிபந்தனைகளுக்கு மாறாக இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளது. இது ஆசிரியர்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாக அமைகின்றது எனச் சுட்டிக்காட்டி வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் வடமாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செய லாளர் த. மகாசிவம் இவ்வாறு குறிப்பிட்டுக் கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

நவம்பர் 30 ஆம் திகதியிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

மேலதிகமான ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும் போது மாவட்டத்துக்கு மாவட்டம் பின்பற்றப்பட்ட கொள்கைகள் வேறுபடுகிறது.

மாகாணத்துக்கென ஒரு பொதுவான மேலதிக ஆசிரியர் இடமாற்றக்கொள்கை உருவாக்கப்பட்டு அந்தத் திட்டத்தின் அடிப்படையில் மேலதிக ஆசிரியர்கள் இடமாற்றப்பட வேண்டும்.

வன்னியிலுள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு சட்ட ரீதியாகவும், நியமன நிபந்தனைகளை மீறாமலும் இடமாற்றங்களைச் செய்வதன் மூலமும், வேறு சட்டரீதியான நடைமுறைச் சாத்தியமான வழிமுறைகளைக் கடைப் பிடித்தும் மாகாண நிர்வாகம் இலக்கை அடையலாம்.

இந்த விடயம் தொடர்பாக தங்களுடன் திறந்த மனத்துடன் கலந்துரையாடிப் பிரச்சினைகளுக்கு சுமூகமானதும் நடைமுறைச் சாத்தியமானதுமான தீர்மானங்களை மேற்கொள்ள எமது சங்கம் எப்போதும் தயாராகவுள்ளது.

அதற்காகத் தங்கள் இருவரையும் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கும் தீர்மானங்களை இணைந்து மேற்கொள்வதற்குமாக நேரம் ஒதுக்கித் தரும்படி சங்கம் பணிவன்புடன் தங்களைக் கோருகிறது - என்றுள்ளது.

இடமாற்றம் பெறவுள்ள ஆசிரியர்கள் விவரம் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பாதிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள், இந்த விடயத்தில் தலை யிட்டு தமது அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாக்க இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நட வடிக்கை எடுக்கவேண்டும் எனச் சுட்டிக் காட்டி சங்கத்துக்கு விடுத்த கோரிக்கைகளே பொதுச் செயலாளரால் கடிதம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டது. (ம-14)

# பிறப்பு, இறப்பு பதிவு கணினிமயப்படுத்தலில் யாழ். மாவட்டம் முன்னணியில் திகழ்கிறது

## பதிவாளர் நாயகம் குணசேகர தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.9

இலங்கையைப் பொறுத்தவரை பிறப்பு, இறப்புப் பதிவுகளை கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகளில் யாழ்.மாவட்டம் முதன்மையாகத் திகழ்கின்றது என பதிவாளர் நாயகம் ஈ.எம்.குணசேகர தெரிவித்தார்.

பதிவாளர் நாயகம் ஈ.எம். குணசேகர மற்றும் மேலதிக பதிவாளர் நாயகம் ந.சதாசிவ ஐயர் ஆகியோருக்கான பாராட்டு விழா யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற போது அதில் வரவேற்பு ஏற்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இவ்வாறானதொரு நிகழ்வில் பங்கேற்றதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். கடந்த 30 வருடகாலமாக இவ்வாறானதொரு நிகழ்வைக் கொண்டாட முடியாமல் போய்விட்டது.

யுத்த காலங்களிலும் யாழ். மாவட்டத்தின் இறப்பு, பிறப்புப் பதிவுகள் அனைத்தும் சிறப்பாக நடந்தன. யுத்த காலத்திலும் நாங்கள் சாதி, மதம் பேதமின்றி பணிபுரிந்திருக்கின்றோம். நீங்கள் மக்களை மதித்து கடமை புரிந்ததனால்தான் இவ்வளவு காலமும் உங்களால் சிறப்பாக செயற்பட முடிந்திருக்கின்றது.

யாழ். மாவட்டத்தில் இறப்பு, பிறப்புப் பதிவுகளை கணினி மயப்படுத்தும் வேலைகளில் 80 வீதமானவை முடிவடைந்துள்ளன. இந்த மாவட்டம் தான் இவ்வாறான செயற்பாடுகளில் முன்னணியில் திகழ்கின்றது என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மேலதிக பதிவாளர் நாயகம் ந.சதாசிவ ஐயர்,

எம்மால் எதைச் செய்ய முடியுமோ அதை நாங்கள் மக்களுக்கு செய்ய வேண்டும். முடியாதது என்று ஒன்றில்லை. எங்களை நாடிவருகின்ற மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க வேண்டும் - என்றார். (த-15)

# சேவை நலன் பாராட்டுவிழா

கொடிகாமம்,டிசெ.9

வரணி மகாவித்தியாலயத்தில் ஆசிரியையாகக் கடமையாற்றி நேற்று புதன்கிழமையிலிருந்து ஓய்வுபெற்ற திருமதி திலகவதி இந்திரராசாவின் சேவை நலன் பாராட்டுவிழா நாளை வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திரு.ந.நவரட்ணராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலயப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் கலந்து கொள்வார். (204-122)

# சண்டிலிப்பாய் இந்துவின் நிறுவுனர் தின விழா

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுனர் தினவிழாவும், பரிசளிப்பு விழாவும், அமுதவிழா மலர் வெளியீடும் இன்று வியாழக்கிழமை காலை 9 மணியளவில் கல்லூரியின் அதிபர் கு.விமலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரமும், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கல்விக்கோட்டப் பணிப்பாளர் என்.கந்தசாமியும் கலந்து கொள்ளவுள்ளனர். வாழ்த்துரையை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் அதிபர் வ.ஸ்ரீகாந்தனும், அமுதவிழா சிறப்பு மலருக்கான வெளியீட்டுரையினை யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக ஆங்கிலத்துறைத் தலைவர் க.ஸ்ரீகணேசனும் நிகழ்த்தவுள்ளனர். நூலின் முதற்பிரதியை மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் சி.சிவனேஸ்வரன் பெற்றுக்கொள்ளவுள்ளார். (ம-9)

# நீடித்த சமாதானத்தை உறுதிப்படுத்த சங்கரி முன்வைக்கும் 5 அம்சக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.9

தேசிய ஒற்றுமையையும் நீடித்த சமாதானத்தையும் உறுதிப்படுத்த ஐந்து கோரிக்கைகளை ஜனாதிபதிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்த சங்கரி முன்வைத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் அனுப்பியுள்ள நீண்ட அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

* முதலாவதாக நாட்டின் தலைவர் என்ற முறையில் மக்கள் அனைவரையும் எதுவித பாரபட்சமின்றி சமமாகவும் நீதியாகவும் பாதுகாத்துச் செயல்பட வேண்டிய தார்மீக கடமை தங்களுக்கு உண்டு என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

* கடந்த பல நூற்றாண்டுக்கு மேல் வடபகுதி மக்கள் எவ்வாறு அடிமைகள் போல் நடத்தப்பட்டார்கள் என்பதை கவனத்தில் எடுத்துக் கொண்டு எதிர்காலத்தில் அதே நிலைமைக்கு அவர்கள் தள்ளப்படக் கூடாது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். வடபகுதியில் பெருமளவு படையினரைக் குவித்து, பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியாக இராணுவ முகாம்களை அமைப்பதும் கரையோரப் பகுதிகளில் கடற்படைத் தளங்களை அமைப்பதுமாகிய அரசின் முடிவே வடகிழக்குப் பகுதிகளில் வாழும் மக்களின் இன்றைய பெரும் கவலையாகும். விடுதலைப் புலிகள் எத்தகைய இராணுவ ஆட்சியை இம்மக்களுக்கு கடந்த காலத்தில் கொடுத்தார்களோ அதே ஆட்சி முறையினை அரச படையினரும் கையாளப் போகிறார்களோ? என்ற பீதி அவர்களை ஆள்கொண்டுள்ளது. பயங்கரவாதம் முற்றாக ஒடுக்கப்பட்டு விட்டது என்ற அரசின் கூற்று உண்மை எனின் இராணுவத்திற்கோ கடற்படையினருக்கோ வட கிழக்கில் தளம் அமைக்க வேண்டிய எதுவித தேவையும் இல்லை. இருப்பினும் தேவையைப் பொறுத்து இரண்டொரு முகாம்களை அங்கும் இங்கும் இயங்கவிட்டு படையினரை முகாம்களுக்குள்ளே முடக்கி வைக்கலாம்.

* நான், நம் நாட்டை பல தடவை சுற்றி வந்துள்ளேன். பல நூற்றாண்டுகளுக்கு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவிற்கு நாடு முழுவதும் தேவையான நிலம் பரவியுள்ளது. ஆகவே இராணுவத்தினரையும் வேறு பகுதியிலுள்ள மக்களையும், கடந்த யுத்த காலத்தில் மிகப்பாரிய கஷ்ரடங்களை அனுபவித்த வடகிழக்கு மக்கள் மத்தியில் குடியேற்ற நினைப்பது புத்திசாலித்தனமான செயலாக எனக்குத் தெரியவில்லை. இத்திட்டத்தை இந்த காலகட்டத்தில் அமுல்படுத்த முயற்சித்தால் அச்செயல் உள்ளூர் வாசிகளை குழப்பம் அடையச் செய்வதோடு தேசிய ஒற்றுமையை அடையத் தாங்கள் எடுக்கும் முயற்சியும் வெறும் பகல் கனவாகிவிடும் என்பதை என்னால் உறுதியாக கூறமுடியும். தமிழர்கள் காணி நிலத்திற்காக பேராசை கொண்டவர்கள் அல்லர். ஆனால் வடகிழக்கிற்கு வெளியே வாழும் மக்களுக்கு உண்மையில் காணி தேவைப்படின் வடகிழக்கு மக்கள் எதுவித தயக்கமும் இன்றி விட்டுக் கொடுப்பார்கள். பொதுவாக அவர்கள் எதிர்ப்பது எதுவெனில் குழப்பத்தை உண்டு பண்ணும் நோக்கோடு திட்டமிட்டு குடியேற்றுவதையே. ஆகவே தயவு செய்து குழப்பத்தை உண்டு பண்ணும் நோக்கோடு திட்டமிட்டுச் செயல்படும் குழுக்களின் திட்டத்தை தடுத்து விடவும். நாட்டில் சகஜ நிலை ஏற்படுத் தப்பட்டதன் பின்பு மக்கள் பெருந்தன்மையோடு செயற்படும் நிலை உருவாகும் போது இப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். தற்போது அனேக மக்கள் தமது உற்றார் உறவினர்களை இழந்து தவிப்பில் இருக்கும் போது அவர்களுக்கு எதனையும் சிந்தித்து செயலாற்றும்மனநிலை இல்லை.

* யுத்தம் முடிந்து பதினெட்டு மாதங்கள் முடிந்த நிலையிலும் கூட அவர்களில் அனேகரின் கூரையற்ற நிலையில் இருந்த வீடுகள் இன்றும் அதே நிலையில்தான் உள்ளன. வன்னிப்பகுதியில் ஒரு வீட்டுக்காவது கூரை அமைக்கப்படவில்லை. இராணுவத்தினர் தமக்கு வீடுகள் அமைப்பதிலேயே தீவிரமாக உள்ளனர். நல்லெண்ணச் செயலாக இவ்வீடுகளைப் பாரமெடுத்து வீட்டை இழந்து நிற்கும் குழந்தைகள் உள்ள குடும்பத்திற்கு அவர்களின் வீடுகள் அமைக்கப்படும் வரை தற்காலிகமான வீடுகளில் அவர்களை தங்க வையுங்கள். மழைக் காலம் ஆரம்பித்து உள்ளதால் அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் மீளக் குடியமர்த்தப்பட்ட மக்களின் நரக வாழ்க்கையும் ஆரம்பிக்கின்றது.

* வடக்கின் வசந்தம் பற்றிப் பிரமாதமாக பேசப்பட்டாலும் வன்னியின் அபிவிருத்திக்குத் தேவையான முக்கிய பெருந்தெருக்கள் எதிலும் இதுவரை கைவைக்கப்படவில்லை. வன்னிப் பகுதியில் உள்ள உள் வீதிகள் படுமோசமான நிலையில் உள்ளன. பல பாடசாலைகள் இதுவரை திருத்தப்படவில்லை. வறுமை காரணமாக பாடசாலைக்கு செல்வதை தவிர்த்து பிள்ளைகள் வீடு வீடாகச் சென்று வீசி எறியப்பட்ட இரும்புத்துண்டுகளைப் பொறுக்கி எடுத்து விற்று அரை வயிற்றுக் கஞ்சி குடிக்கிறார்கள். அவர்களின் முதல் தேவையாக அவர்களுக்கான பாடசாலையை அமைத்து அவர்களுக்கு உணவளித்து அவர்களின் ஏழைப் பெற்றோர்களின் பொருளாதாரத்தை வலுவடையச் செய்வதேயாகும்.

ஆகவே ஓர் உண்மையான தேசபக்தன் என்ற வகையில் இத்தகைய பிரசாரங்கள் தங்களின் இலக்கை அடைவதற்கு இடையூறாக இருக்கும் என நான் அஞ்சுகின்றேன். நிரந்தர சமாதானத்தை அடைய என்னால் குறிப்பிடப்பட்ட விடயங்களிலும் இது போன்ற வேறு விடயங்களிலும் நீங்கள் தனிப்பட்ட கவனத்தை செலுத்த வேண்டும். மேலும் நீங்கள் நீண்ட கால அரசியலில் பாராளுமன்ற உறுப்பினராகவும் பிரதம அமைச்சராகவும் இருந்து ஜனாதிபதியாகி இருப்பதால் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் என்ன என்பதையும் அவர்களின் பிரச்சினைகளுக்குத் திருப்தி அளிக்கக்கூடிய தீர்வு என்னவென்பதையும் அறிவீர்கள்.

நான் திரும்பத் திரும்ப கூறிவருவது போல் 13 ஆவது சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தினாலும் கூட எதிர்காலத்தில் அமையும் ஒரு நாடாளுமன்றம் அதனை மாற்றி அமைக்கவும் கூடும். ஆகவே தான் நான், சிறுபான்மை மக்களுக்குத் திருப்தி அளிக்கக் கூடிய ஒரு தீர்வாக இந்திய அரசியல் சாசனத்தை ஒத்த முறைமையே பொருத்தமானதெனக் கூறிவருகின்றேன். அத்தகைய தீர்வு ஆளும் கட்சி, எதிர்கட்சிகளின் தலைவர்களுக்கும் புத்தி ஜீவிகளுக்கும் சமயத் தலைவர்களுக்கும் புலம் பெயர்ந்த மக்களுக்கும் ஏற்புடையதாக இருக்கும் என நம்புகின்றேன். இந்திய முறையிலான ஒரு தீர்வை அமுல்படுத்துவதன் மூலம் நீண்ட கால சமாதானத்தையும் ஐக்கியத்தையும் மிக விரைவாக அடைய முடியும்.

சிறுபான்மை மக்களுக்கு ஏற்புடையதான ஒரு தீர்வை முன்வைத்து அது ஏற்புடையதாக இருப்பின் மக்கள் வன்முறையினைத் தூக்கி எறிந்து விட்டு நீங்கள் விரும்பும் தேசிய ஒற்றுமையையும் நிரந்தர சமாதானத்தையும் அடைய உங்களுக்கு அமோகமான முறையில் ஆதரவை வழங்குவார்கள் - என்றுள்ளது. (ஜ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வவுனியா நகரில் நடமாடித் திரிகின்ற பிச்சைக்காரர்களுக்கு புனர்வாழ்வுத் திட்டம்

வவுனியா,டிசெ.9

வவுனியா நகர்ப்புறத்தில் தற்போது பிச்சையெடுப்பவர்களின் தொகை அதிகரித்துக் காணப்படுவதால் அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் திட்டமொன்று ஆரம்பிக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக வவுனியா அரசாங்க அதிபரின் உத்தரவுக்கமைய வவுனியாப் பிரதேச செயலர் க.சிவபாதசுந்தரன் தலைமையில் கடந்த வாரம் விசேட கூட்டமொன்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கருத்துரை வழங்கிய பிரதேச செயலர்:

''பஸ் நிலையம் மற்றும் கடைத் தொகுதிக்குள் பல எண்ணிக்கையில் பிச்சைக் காரர்கள் நடமாடுவதுடன் நகரத்தையும் அசுத்தப்படுத்தி வருகின்றனர். அத்துடன் அன்றாட தேவைகளுக்காக நகரத்துக்கு வரும் மக்களுக்குப் பெரும் இடையூறுகளையும் இவர்கள் விளைவிக்கின்றனர். எனவே முதற்கட்டமாகப் பொலிஸாரின் உதவியுடன் இவர்கள் அனைவரையும் நகரசபை மைதானத்திற்குக் கொண்டு வரவுள்ளோம். பின்னர் இவர்களை வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதித்துத் தேவையான சிகிச்சைகளை வழங்கவுள்ளோம். இதன் பின்னர் இவர்கள் முதியோர் இல்லங்கள் மற்றும் பொது இல்லங்களில் அனுமதிக்கப்படுவார்கள்'' என்று கூறினார்.

இந்தக் கூட்டத்தில் வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, முதியோர் இல்லங்கள், ஆனந்த இல்லங்களின் பொறுப்பதிகாரிகள், வவுனியா நகரசபைத் தலைவர், சுகாதார வைத்திய அதிகாரி, அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டு இது தொடர்பாகத் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். (க-501)

# கிளிநொச்சி மத்திய கல்லூரியில் மாணவர்கள் கௌரவிப்பு

கிளிநொச்சி, டிசெ.9

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இருந்து 2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த மாணவர்களையும், 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் கௌரவிக்கும் முகமாக சான்றிதழ்கள் மற்றும் பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் த.குருகுலராஜா கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் கிளிநொச்சி மத்திய கல்லூரியின் அதிபரும், கிளிநொச்சிக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளருமான க.இரத்தினகுமார், ஆரம்பக்கல்விக்கான கிளிநொச்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். விருந்தினர்களாக ஓய்வு பெற்ற கல்லூரியின் அதிபர் நா.சோதிநாதன், கிளிநொச்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களான பொ.விஜயநாதன், திருமதி வசந்தா சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்த ஆண்டுடன் சேர்த்து சித்தி பெற்ற 52 மாணவர்களும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 85 மாணவர்களுமாக 137 மாணவர்கள் இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(க-405)

# வடக்கின் துரித மீள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுப்பு

கொடிகாமம்,டிசெ.9

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் பல அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலேயே இந்த அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன. மன்னார் மாவட்டத்தில் மறிச்சுக்கட்டி, இரணை இலுப்பைக்குளம், பெரியமடு ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், வெளிநோயாளர் பிரிவுகள் என்பன புனரமைக்கப்படவுள்ளன. கண்டல், கோவில்குளம் ஆகிய இடங்களில் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்க அரிசி ஆலை, களஞ்சியங்கள் என்பன புனரமைக்கப்படவுள்ளன. வவுனியா மாவட்டத்தில் மகாகச்சிக் கொட்டிய குளம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. முல்லைத் தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டானில் உள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம், முள்ளியவளை, ஒட்டுசுட்டான் பிரதேசங்களில் உணவு மற்றும் நெற் களஞ்சியங்கள் புனரமைக்கப் படவுள்ளன. (க-122)




# பெண்கள், சிறுவருக்கு எதிரான வன்முறை வவுனியா மாவட்டத்தில் அதிகரிப்பு

வவுனியா,டிசெ.9

வவுனியா மாவட்டத்தில் பெண்கள், சிறுவர்களுக்கு எதிராக நடைபெற்றுவரும் வன்முறைகள் தொடர்பாகப் பல முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்து வருவதாக வவுனியா பொலிஸ் நிலையத்தின் பெண்கள், சிறுவர்கள் விசாரணைப் பிரிவு அதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா கற்பகபுரம் பகுதியில் பொதுமக்கள் கலந்து கொண்ட, சமூகப் பெண்கள் விழிப்புணர்வுச் செயற்றிட்டமொன்றில் உரை நிகழ்த்திய போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது:

பெண்கள் அதிகளவில் வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகின்றனர். இதனால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து தமக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தருமாறு கோருகின்றனர். ஆனால் இவர்களிடம் விசாரணை செய்யும் போது உரிய திருமணப் பதிவோ அல்லது அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளின் பிறப்புப் பதிவோ இல்லையென்பது தெரியவருகின்றது.

தற்போது அதிகரித்துக் காணப்படும் கைத்தொலைபேசிகளின் பாவனை காரணமாக இளவயது மாணவர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகிறார்கள். பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் நடவடிக்கைகளை அக்கறையுடன் அவதானிக்க வேண்டும். அத்துடன் பாடசாலை மாணவர்கள் மத்தியில் தவறான கைத்தொலைபேசிப் பாவனை அதிகரித்துள்ளது. இதனால் தேவையற்ற பிரச்சினைகள் மற்றும் குழு மோதல்கள் ஏற்படுகின்றன என்று கூறினார்.

இக்கலந்துரையாடலில் கற்பகபுரம் கிராம அதிகாரி, பிரதேச செயலக பெண்கள் நலன் அபிவிருத்தி உத்தியோகத்தர், சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த உள சமூகப் பணியாளர்கள் மற்றும் பலர் கருத்துரைகளை வழங்கினர். (க-501)

# டெங்கு ஒழிப்பு

பளை,டிசெ.9

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சோரன்பற்றுக் கிராமத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த வாரம் டெங்கு ஒழிப்பு வாரமாகப் பிரகடனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இச்சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இச் சிரமதானப் பணிகளில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை ஊழியர்களும் சுகாதார சேவைத் திணைக்களத்தினரும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். (க-313-311)

## இந்த நிலை என்று மாறும்.....?



காலமறிந்து உதவி:மழையினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி பன்னங்கண்டி மக்களுக்கு 'மண் சுமந்த மேனியர்' அமைப்பின் சார்பில் உதவிப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் கிளி.மத்திய கல்லூரிக்கு நல்ல பெறுபேறு

கிளிநொச்சி,டிசெ.9

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளிவந்துள்ள நிலையில் கிளிநொச்சி மத்திய கல்லூரி, மாவட்ட மட்டத்தில் முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்றுள்ளது.

இந்தக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் கணித பாடப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதல் நான்கு மற்றும் ஆறாம், ஏழாம் இடங்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர். உயிரியல் விஞ்ஞான பாடப் பிரிவிலும் மாவட்ட மட்டத்தில் இரண்டாம், மூன்றாம், ஐந்தாம், ஆறாம் இடங்களையும் பெற்றுள்ளனர்.

கணித பாடப் பிரிவு - (மாவட்ட மட்ட நிலை)

கதிர்காமநாதன் மகிந்தன் - 3ஏ-1, அன்பழகன் கிருஷ்ணானந்தன் - ஏபிசி-2, குலசேகரம் சிந்துஜன்- 2பிசி-3, மகாதேவன் அபிராமி -பி2சி-4, தியாகராஜா ரமணன்-பி2சி-6, இராஜேந்திரன் அனுஷா-3சி-7.

உயிரியல் விஞ்ஞான பாடப் பிரிவு

கனகராஜா சஞ்சீவன் - ஏ2பி-2, பன்முகம் சயந்தன்-ஏ2பி-3, செல்வரத்தினம் சிவகணேசன்-ஏ2சி-5, ஜெகநாதன் யசோதினி-ஏபிசி-6. (க-405)

# தற்காலிக வீட்டுத் திட்டம்

பளை,டிசெ.9

பளை நகரத்தின் பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட சோரன்பற்றுக் கிராமத்தைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கு இந்தியாவின் நிதியுதவியுடன் தற்காலிக வீட்டுத் திட்டங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

தற்போது தறப்பாள் கொட்டகைகளில் தற்காலிகமாக குடியமர்த்தப்பட்ட இக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகிறார்கள்.

இந்தியாவின் நிதியுதவியுடன் வழங்கப்படும் இத் தற்காலிக வீட்டுத் திட்டம் இவர்களுக்கு ஆறுதலைத் தருமென எதிர்பார்க்கப்படுகிறது.

(க-313-311)

# மின்சார வேலைகள் தடைப்பட்டுள்ளன

பளை,டிசெ.9

பளை நகரில் நடைபெற்று வரும் மின்சாரத் திருத்தப் பணிகள் கடந்த சில நாள்களாகப் பெய்த மழையினால் தடைப்பட்டுள்ளது.

எனினும் தைமாதத் தொடக்கத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதான இடங்களுக்கு மின்சாரம் கிடைக்கக் கூடிய வகையில் திருத்தப்பணிகள் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது பெருந்தெருக்களில் மின்சாரத் திருத்தப்பணிகள் பூர்த்தியாகி வருகின்றன. இவற்றின் மூலம் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படவு[illegible] பிரதேசத்திலுள்ள மக்[illegible]. (க-313-311)

# பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 2393 குடும்பங்கள் மீள்குடியமர்வு

பளை,டிசெ.9

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் 2393 குடும்பங்களைச் சேர்ந்த 7826 அங்கத்தவர்கள் இதுவரைக்கும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கான தற்காலிகக் குடிமனைகள் மற்றும் அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் உட்பட வெளிநாட்டு நிறுவனங்களும் உதவிவருகின்றன.

மீள்குடியேற்றம் செய்யப்படாமல் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் 72 குடும்பங்களும் தைமாதத்திற்கு முன்னர் மீள்குடியேற்றம் செய்யப்படுவார்களென பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் ரி. முகுந்தன் தெரிவித்துள்ளார்.(க-313-311)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம்

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனமானது தொழில்சார் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சிக்கான அமைச்சின் கீழ் செயற்படும் அரச நிறுவனமாகும். சர்வதேச தரத்திலான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டங்களை இந்நிறுவனம் வழங்குகின்றது. கைத்தொழில் விஞ்ஞான அமைச்சின் மேற்பார்வையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையுடன் 1968 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்நிறுவனம் கடந்த 42 ஆண்டுகளாகச் செயலாற்றுகின்றது.

தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனத்தினராகிய நாம் ஏனைய பகுதியில் உள்ளோரைப் போல வடபிராந்திய மக்களும் வர்த்தக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கற்கைநெறிகளின் உண்மையான பலாபலன்களை அனுபவிக்க வேண்டுமெனக் கருதுகின்றோம். நாம் ஏற்கனவே இத்துறைகளில் மிக உன்னத தராதரத்துடன் சேவைகளை வழங்கியும் வருகின்றோம். தற்போது அதே பெறுமதிமிக்க கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க வட பகுதி மாணவர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்ய யாழ்ப்பாணத்தில் காலடியெடுத்து வைத்துள்ளோம்.

**யாழ் மாணவர்கள் அரவணைக்கும் தேசிய வியாபார முகாமைத்துவ நிறுவனம்**

நாம் யாழ்ப்பாண மாணவர்களை எம் நிலையத்தில் வர்த்தக கல்வியின் உண்மையான அனுபவத்தை பெறும்படி அன்புரிமையுடன் அழைக்கிறோம். யாழ்ப்பாண கலாசார விழுமியங்களை முற்றாக மதிக்கும் நாம் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வர்த்தகம் தொடர்பான ஓர் புதிய பாதையில் உங்களை வழிநடத்திச் செல்வோம்.

பெற்றோர்களே! உங்களின் பிள்ளைகளின் மேம்பாட்டிற்கு கல்வியின் தரம் இன்றியமையாதது. நீங்கள் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலக் கல்வி பற்றி சரியான முடிவினை எடுக்க உரிய தருணம் இது! ஒரு கற்கை நெறியை தெரிவு செய்வதில் அதன் பெறுமதி, தராதரம் போன்றவற்றை கருத்திற் கொள்வது இன்றியமையாதது.

மேற்குறிப்பிட்ட விடயங்களை கருத்திற் கொண்டு தேசிய வியாபார முகாமைத்துவநிறுவனம் யாழ்ப்பாணத்தில் மிக நவீனமான பிராந்திய நிலையத்தை அமைத்துள்ளது. இதையொத்த நிலையங்கள் காலி, கண்டி மற்றும் குருநாகல்போன்றவற்றில்கொழும்பிலுள்ள தலைமை நிலையத்தின் நேரடி மேற்பார்வையில் இயங்கி வருகின்றன.

**இலக்கு**

மிக உயர்ந்த தரத்திலான முகாமைத்துவ மொழி மற்றும் தகவல் தொழில்நுட்ப கல்வியினை பாடசாலையை விட்டு விலகியோருக்கும் அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் துறைகளில் பணிபுரிவோருக்கு வழங்குவதே எமது இலக்காகும். மேலும் யாழ்ப்பாண மாணவர்களுக்கு உயர் கல்விக்கான நவீன வசதிகளை வழங்குவதும் பல்வேறு தொழிற் துறைகளில் பணியாற்றுவதற்கான அடிப்படைத் தகைமைகளை வழங்குவதும் எமது நிறுவனத்தைப் பற்றி நல்லெண்ணத்தை வடபிராந்தியத்தில் கட்டி எழுப்புவது கூட எமது நோக்கங்களில் உள்ளடங்கும்.

**கட்டமைப்பு வசதிகள்**

யாழ் பிராந்திய நிலையமானது 350 ஆசனங்களைக் கொண்ட 4 பூரண வசதிகளுடன் கூடிய விரிவுரை மண்டபங்களைக் கொண்டுள்ளது. மேலும் கணனி ஆய்வுகூடம், நூலகம், சுய கற்றலுக்கான இடவசதி, நிகழ்ச்சித் திட்ட அலுவலகம் போன்றவையும் இந்நிலையத்தில் அமைந்துள்ளன. ஒரு வருடத்தில் இவற்றைப் பயன்படுத்தி சுமார் 2000 மாணவர்களை பயிற்றுவிக்க முடியும். (த)

# கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பயணிகளின் நத்தார் பொருள் கொள்வனவுக்கு விசேட பரிசுகள்

நத்தார் பண்டிகையை முன்னிட்டு கட்டுநாயக்காவில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் புதுப்பொலிவு பெறுகிறது. அங்குள்ள விற்பனை நிலையங்களில் விதம் விதமான பொருள்கள் குவிக்கப்பட்டுள்ளன.




குறிப்பாக வெளிநாடுகளிலிருந்து வரும் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்து இழுத்து அவர்களுக்குப் பொருட்களை வாங்குவதற்கான தூண்டுதலை ஏற்படுத்தவே இந்த ஏற்பாடு.

பொருள்களைக் கொள்வனவு செய்வதென்றால் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தான் அது நடைபெற வேண்டும் என்று உல்லாசப் பயணிகள் தீர்மானிக் கும்படியான நிலைமையை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே காரியங்கள் நடைபெறுகின்றன.

விமான நிலையப் பொருள் கொள்வனவு மூலம் அங்குள்ள வர்த்தக நிலையங்கள் ஆதாயம் அடைவதோடு நாட்டுக்கு அந்நியச் செலாவணிச் சம்பாத்தியமும் கிடைக்கும்.

விமானப் பயணிகளைக் கவர்வதற்காக விமான நிலையக் கடைகளில் பொருள்களை வாங்குபவர்களுக்கு பரிசுத் திட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு பிரயாணி 10 அமெரிக்க டொலருக்குப் பொருள்களை வாங்கினால் கூட அவர் பரிசுத் திட்டத்தில் சேர்ந்து கொள்ளலாம்.

பொருட்களைக் கொள்வனவு செய்பவர்களில் அதிஷ்டசாலிகள் சீட்டிழுப்பின் மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். அவர்களுக்கு விசேட பரிசுகள் வழங்கப்படும்.

## சேவை...



மகிழ்ச்சி: ஹற்றன் நஷனல் வங்கியின் சாவகச்சேரி கிளையின் முதலாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு கிளை முகாமையாளர் க.நிரஞ்சன் கேக் வெட்டுகிறார். அருகில் வடபிராந்திய சிரேஷ்ட முகாமையாளர் க.ஜெயராஜசிங்கம் உட்பட வங்கி உத்தியோகத்தர்கள் உள்ளனர்.

(த 207)

# 'ஹட்ச்' அபிஷேகம் மீள்நிரப்பும் திருவிழாவில் SUV கார் ஒன்றை வெல்லும் வாய்ப்பு

'ஹட்ச்' அபிஷேகம் மீள்நிரப்பும் திருவிழாவை ஊக்குவிக்கும் செயற்றிட்டத்தில் வெற்றி பெற்ற பலர் தமது பரிசில்களைக் கொழும்பிலுள்ள தலைமையகத்தில் வைத்து அண்மையில் பெற்றுக்கொண்டனர்.




'ஹட்ச்' அபிஷேகம் மீள்நிரப்பும் திருவிழாவை ஊக்குவிக்கும் செயற்றிட்டத்தில் பக்ஸ் இயந்திரமொன்றை முன்னர் வென்றெடுத்த கொழும்பு மட்டக்குளியிலேனியாம் கொம்மின் முத்துலிங்கம் பரமேஸ்வரன் தனக்கான பரிசினை பொது முகாமையாளர் (நிதி) திருமதி பிரியேனாவிடமிருந்து பெற்றுக்கொள்கிறார்.

'ஹட்ச்' வாடிக்கையாளர்கள் 160 இற்கும் அதிகமானோர் செப்ரெம்பர் மாதப் போட்டியில் பெறுமதிவாய்ந்த பரிசுகளை வென்றெடுத்ததுடன் சிலர் தமது பரிசுகளை நிறுவனத்தில் அண்மையில் பெற்றுக் கொண்டனர்.

அநுராதபுரம், பாணந்துறை, நீர்கொழும்பு, தெமட்டக் கொடை, கோட்டே மற்றும் கொழும்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 'ஹட்ச்' பாவனையாளர்கள் வெற்றி பெற்றவர்களில் அடங்குகின்றனர். குறித்த வெற்றியாளர்களுக்கான தட்டையான (பிளாட் ஸ்கிறீன்) தொலைக் காட்சிகள், கேஸ் குக்கர்கள், கையடக்க தொலைபேசிகள் மற்றும் பாங்கொக் செல்வதற்காக இரண்டு விமான டிக்கெட்டுகள் மூன்று இரவுகள் தங்குவதற்கான வசதிகள் உட்பட இன்னும் பல பரிசில்கள் 'ஹட்ச்' பிரதான அலுவலகத்தின் பொதுமுகாமையாளர் (நிதி) திருமதி பிரியேனா குணசேகரவினால் வழங்கப்பட்டன.

நிறுவனத்தின் விற்பனைப் பிரதிநிதிகளை இனங்காண்பதற்காக 'ஹட்ச்' அபிஷேகம் மீள்நிரப்பும் திருவிழா ஊக்குவிக்கப்பட்டதாகவும் பாவனையாளர்களும் விற்பனைப் பிரதிநிதிகளும் பெருமளவிலான நன்மைகளை அனுபவிக்கின்றனர் என்றும் திட்டம் தொடர்பில் பல தரப்பிலிருந்து சாதகமான பதில்கள் கிடைக்கின்றன என்றும் பொது முகாமையாளர் சஞ்சிய செனரத் கூறுகிறார்.

பாணந்துறையைச் சேர்ந்த தச்சுத் தொழிலில் ஈடுபடும் டபிள்யூ ஏ.பி.வின்சன்ட் பெர்ணான்டோ பிளாட் ஸ்கிறீன் தொலைக்காட்சியொன்றை வென்றெடுத்துள்ளார்.

அநுராதபுரத்தைச் சேர்ந்த சிசிர குமார ஏக்கநாயக்கவும், கோட்டேயைச் சேர்ந்த குமு தினி நவோதயாவும் ஒவ்வொரு தங்க நாணயங்களை வென்றெடுத்தவர்களாவர்.

பாங்கொக் சுற்றுலாவுக் கான இரண்டுவிமானடிக்கெட்டுகளை வென்றெடுத்தவர் அங் கொடை நியூலிங்கொம்மின் உரிமையாளரான டி.என்.எஸ்.ஜயசிங்க ஆவார்.

மற்றுமொரு விநியோக பிரதிநிதியான அமல் சிசிர குமார ஆற்றிய சேவைக்காக லாப்டொப் கணினியொன்றை வென்றெடுத்தார்.

இப்போட்டி 2010 செப்ரெம்பர் 1ஆம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரை நடை பெறுகின்றது. 200 ரூபா மீள்நிரப்பு செய்வதன் மூலம் அனைவரும் எஞ்சியுள்ள காலத்தில் இந்தப் போட்டியில் பங்குபெற முடியும். இவர்களில் வெற்றிபெறும் அதிஷ்ட சாலிக்கு புத்தம் புதிய SUV கார் ஒன்றை வெல்வதற்கான வாய்ப்பு உள்ளது.

# செலிங்கோ லைஃபின் 64 சேவையாளர்களுக்கு சிறந்த செயற்பாட்டுக்கான சர்வதேச தர விருது

செலிங்கோ லைஃப் நிறுவனத்தின் விற்பனைப் பிரதிநிதிகளாகச் சேவையாற்றி வரும் 64 பேருக்கு ஆயுள் காப்புறுதி சந்தைப் படுத்தல் மற்றும் ஆராய்ச்சி சங்கத்தால் (LIMRA) சர்வதேச தர விருது (IQA), மற்றும் சர்வதேச தரமுகாமைத்துவ விருது (IQMA) என்பன வழங்கி அவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

IQA விருது ஆயுள் காப்புறுதித்துறையில் தலைசிறந்த செயற்பாட்டுக்காகவும், மிகச் சிறந்த கொள்கைகளின் அறிமுகத்திற்காகவும் வழங்கப்படுகின்றது. செலிங்கோ லைஃப்பின் எட்டு முகாமையாளர்களுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

IQMA என்பது வெற்றிகரமான செயற்பாடு மற்றும் தலைமைத்துவ ஆற்றல் என்பனவற்றுக்காக முகாமையாளர்களுக்கு வழங்கப்படும் விருதாகும். கம்பனியின் 40 பிரிவுத் தலைவர்களுக்கும், 16 கிளைத் தலைவர்களுக்கும் இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.




இந்த விருதுகள் குறித்து கருத்து வெளியிட்ட செலிங்கோ லைஃப்பின் முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் பிரதம நிறை வேற்று அதிகாரி ஆர்.ரெங்கநாதன், கம்பனி தொழில்சார்துறையின் மட்டம், செயற்பாடு என்பனவற்றைப் பேணுவதற்காகத் தொடர்ச்சியாக விற்பனைத்துறைப் பிரதிநிதிகளுக்கு அளித்து வரும் பயிற்சி மற்றும் சிறந்த சேவைத்தரத்தைப் பேணுவதற்காக எடுத்து வரும் முயற்சி என்பனவற்றுக்குச் சான்றாக இந்த விருதுகள் அமைந்துள்ளன'' என்றார்.

''விற்பனை ஆலோசகர்களினதும், மேற்பார்வையாளர்களினதும் எண்ணிக்கையை நாம் அதிகரிக்க எண்ணியுள்ளோம். எதிர் காலத்தில் அவர்களும் இந்த விருதுகளைப் பெறக்கூடியதாக இருக்கும்'' என்று அவர் மேலும் கூறினார்.

செலிங்கோ லைஃப்பின் சில விற்பனை முகவர்கள், ஆறாவது தடவையாகத் தொடர்ந்து இந்த விருதுகளை வென்றுள்ளனர் என்றும் அவர் தகவல் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம் பெயர்ந்த மக்களை மிரட்டி ஆர்ப்பாட்டத்திற்கு ஆள் திரட்டல்

யுத்தக் குற்ற விசாரணைகள் தொடர்பான பிரச்சினையில் நாடாளுமன்றிலும் கருத்து யுத்தம் ஒன்று மேடையேறியது. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் சர்ச்சையில் குதித்தனர்.

நாடாளுமன்றம் நேற்றுக் முன்தினம் காலை சபாநாயகர் சமல் ராஜ பக்ஷ தலைமையில் கூடியது. வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஐ.தே.கவின் கொழும்பு மாவட்ட உறுப்பினர் ரவி கருணாநாயக்க., ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை தொடர் பாகக் கல்வி அமைச்சரிடம் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

நாட்டில் உள்ள சகல பாடசாலைகளிலும் ஆங்கிலப் பாடத்தை போதிக்கும் ஆசிரியர்கள் எத்தனைப் பேர் இருக்கின்றார்கள் என்று கேட்டதோடு, இரண்டாயிரம் ஆசிரியர்களைக்கொரியாவுக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. என அறிகின்றோம் என்றும் ரவி எம்.பி. சுட்டிக்காட்டினார்.

### ஆங்கில ஆசிரியர்கள் பற்றாக்குறை இல்லை

நாடெங்கும் உள்ள பாடசாலைகளில் 2,513 ஆங்கில ஆசிரியர்கள் இருக்கின்றனர். இவர்களுக்குக் கொடுப்பனவாக 4 கோடி ரூபா வழங்கப்படுகின்றது. எந்த ஒரு பாடசாலையிலும் ஆங்கில ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை இல்லை என்று கல்வி அமைச்சர் பதிலளித்தார்.

ஐயா, நீங்கள் கொழும்பில் உள்ள ஆனந்த, நாலந்த பாடசாலைகளை வைத்துப் பதில் சொல்ல வேண்டாம். கிராமிய பாடசாலைகளையும் பாருங்கள் என்றார் ரவி எம்.பி.

அத்தோடு நின்றுவிடவில்லை, கொரியாவுக்கு ஆங்கில ஆசிரியர்கள் இரண்டாயிரம் பேரை அனுப்பப் போகின்றீர்களாமே என்று அவர் கேட்டார்.

இல்லை, இல்லை அப்படியானதொரு திட்டம் கிடையாது. ஆங்கில ஆசிரியர்கள் கொரியாவுக்கு அனுப்பப்பட மாட்டார்கள் என்று கல்வி அமைச்சர் உறுதியளித்தார்.

### பொங்கி எழுந்தார் சபை முதல்வர்

கேள்வி நேரம் முடிந்த பின் சபை முதல்வரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா கையில் பத்திரிகையொன்றுடன் எழுந்தார். எடுத்த எடுப்பிலேயே எதிர்க்கட்சி உறுப்பினர் கரு ஜயசூர்ய மீது சீறிப்பாய்ந்தார்.

எங்கள் நாட்டில் எந்தவிதமான போர்க்குற்றமும் இடம் பெறவில்லை. போர்க்குற்ற விசாரணைக்கு அவசியம் இல்லை என்று அரசு ஏற்கனவே பதில் அளித்துவிட்டது.

இப்படியான நிலையில் இவ் விடயத்தைக் கிண்டி விட்டு, நாட்டுப் பிரிவினை வாதிகளுக்கு கரு ஜயசூரிய துணை போகின்றார். இது மாபெரும் தேசத்துரோகம் என்றும் சாடியதுடன் நாட்டைக் காட்டிக் கொடுப்பவன் என்றும் குற்றம் சுமத்தினார் நிமல் சிறிபால.

இதனைத் தொடர்ந்து கரு ஜயசூரியவுக்குத் தன்னிலை விளக்கமளிக்கச் சபாநாயகர் வாய்ப்பளித்தார். அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா காரசாரமாகப் பொழிந்து தள்ளியபோது மிகவும் அமைதியாக இருந்த ஆளும் கட்சி உறுப் பினர்கள் , கரு ஜயசூரிய பேச எழுந்தவுடன் துள்ளிக் குதித் தனர். தேசத் துரோகம் புரிந் தோரைப் பேச அனுமதிக்கக் கூடாது என்று கூச்சலிட ஆரம் பித்தனர். இதனால் இரு தரப் பினருக்குமிடையில் சர்ச்சை ஏற்பட்டது .

### சபாநாயகரின் எச்சரிக்கை

ஐயா இந்த சபையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு உறுப்பினராக இருக்கின்றேன். எனது கருத்துக்களை வெளியிடுவதற்கு எனக்கு சுதந்திரமுண்டு. முதலில் நான் பேசுவதற்கு இவர்களை இடையூறு விளைவிக்க வேண்டாம் என்று கூறுங்கள் என்று வேண்டுகோள் ஒன்றை விடுத்தார் கரு.

ஆளும் கட்சி உறுப்பினர்களின் அட்டகாசத்தினால் ஆத்திரமடைந்த சபாநாயகர் மிகவும் கடுமையான தொனியில் ஆளும் தரப்பினருக்கு எச்சரிக்கை விடுத்தார். இச் சபையில் அமைதியை ஏற்படுத்த சபாநாயகர் பெரிதும் சிரமப்பட வேண்டியதாக இருந் தது.

### செய்திகள் என்னுடையவை தலைப்பு எனதல்ல - கரு

ஐயா இவர்கள் இந்தப் பத்திரிக்கைச் செய்தியைப் பார்த்து விட்டு இங்கே துள்ளிக் குதிக் கின்றார்கள். இந்தச் செய்தியை அவர்கள் நன்றாக வாசித்தார் களா என்பது சந்தேகமாக இருக் கின்றது. எந்த ஒரு இடத்திலும் போர்க்குற்ற விசாரணை தொடர் பாக குறிப் பிடப்படவில்லை என்று பத்திரிகையைத் தூக்கிக் காட்டினார் கரு.

அப்போது கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்ன பத்திரிக்கையில் இருக்கின்றது என்று அவர் ஒரு பத்திரிக் கையை தூக்கிக் காட்டினார்.

இவ்வேளையில் உறுப்பினர்களின் பேச்சுக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் என்று அமைச்சருக்குப் பதிலளித்தார் சபாநாயகர்.

ஐயா இவர்களுக்கு ஆங்கிலத்தைப் புரிந்து கொள்ள முடிய வில்லை. செய்தியின் தலைப்பைப் பார்த்துவிட்டுக் குதிக்கின்றார்கள். செய்திதான் என்னுடையது. தலைப்பு பத்திரிகையுடையது எனச் சுட்டிக்காட்டினார் கரு.

### நிராகரிக்கப்பட்டது அஸ்வரின் ஒழுங்குப்பிரச்சினை

இந்த விளக்கம் முடிந்த பின் ஆளும் கட்சி உறுப்பினர் ஏ.எச்.எம். அஸ்வர், ஒழுங்குப் பிரச்சினை என்று எழுந்தார். அதே வேளை, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் எழுந்தார்.

இவ்விடயம் தொடர்பாக எவரும் ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப முடியாது. இதனை ஒரு விவாதமாக இடமளிக்க முடியாது என்று கூறி நிராகரித்து விட்டார் சபாநாயகர்.

என்றாலும் ரணில் விக்கிரமசிங்க தனது நிலைப்பாட்டை விளக்க வாய்ப்பளிக்க வேண்டும். காரணம் சபை முதல்வர் தனது கூற்றின்போது என்னுடைய பெயரையும் குறிப் பிட்டுள்ளார். எனவே நான் அதற்கு விளக்கம் அளிக்க இடமளிக்க இடைவெளி வேண்டும் என்று கேட் டுக்கொண்டார் ரணில்.

### யார் தேசத்துரோகி?

ரணில் விகிரமசிங்கவுக்குப் பேச அனுமதி வழங்கப்பட்ட

**சபையில் கேட்டவை**

போது, நாட்டைக் காட்டிக் கொடுத்தவர்கள் தேசகத்துரோகிகள் என ஆளும்தரப்பினர் கூச்சல் இட்டனர். அப்போது யார் தேசத்துரோகி யார் காட்டிக் கொடுப்பவர் என்று விளக்கம் அளித்தார் ரணில்.

நாட்டைக் காப்பாற்றிய முன்னாள் படைத்தளபதி சரத்பொன்சேகாவை சிறையில் அடைத்து வைத்துள்ளீர்கள். ராஜீவ் காந்தியைக் கொலை செய்த கே.பி.யை பாதுகாத்து வருகின்றனர். இதிலிருந்து யார் துரோகிகள், யார் காட்டிக் கொடுப்பவர் என்பது இப்போது புரிகின்றதல்லவா என்று பதிலடி கொடுத்தார் ரணில் விக்கிரமசிங்க.

ரணில் விக்கிரமசிங்கவின் இக்கூற்று ஆளும் தரப்பினரை வாயடைக்கச் செய்துவிட்டது.

### அகதிகளை மிரட்டி ஆர்ப்பாட்டம்

இன்று நாட்டில் எல்லா இடங்களிலும் பெரும் மழை வெள்ளம். மக்கள் இருக்க இடமின்றி அவதிப்படுகின்றனர். இப்படியான ஒரு நிலையில் பல வருடங்களாக அகதிகளாக அல்லல்பட்டு இப்பொழுது மீள்குடியேற்றப்பட்ட தமிழ் மக்களை இராணுவத்தினர் மிரட்டி ஆர்ப்பாட்டம் செய்ய அழைத்து வந்துள்ளனர். அகதிகளை மிரட்டி ஆர்ப்பாட்டம் நடத்தி அரசியல் இலாபம் தேடுகின்றனர். ஆனால், அவர்களுக்கு உதவ முன்வரவில்லை என்று குற்றம் சுமத்தினார் யாழ். மாவட்ட த.தே.கூ. உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

### வன விலங்குக்கு ஒரு லட்சம் ஏக்கர் மக்களுக்கு ஒரு அங்குலமும் இல்லை

வன்னி மாவட்ட த.தே. கூட்டமைப்பு உறுப்பினர் வினோநோகராதலிங்கம் ஆக்க பூர்வமான விடயங்களை முன்வைத்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் கூடியிருந்த ஆயிரம் ஏக்கர் காணிகளை இராணுவத்தினர் சுவீகரித்துள்ளனர். மேலும் வனவிலங்குகள் பாதுகாப்புக்காக ஒரு லட்சம் ஏக்கர் காணிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆனால், பாதிக்கப்பட்ட மக்களைச் சொந்த இடங்களில் குடியமர்த்த எந்த நடவடிக்கையும் இல்லை என்று குற்றம் சுமத்திய வினோநோகராதலிங்கம், இன்று இராணுவம், சிவில்நிர்வாகம், பொலிஸ், நீதித்துறை அனைத்தையும் தம் வசப்படுத்தியுள்ளது.

குடும்ப விவகாரம் முதல் காணித் தகராறுகள் வரை இராணுவத்தினரின் தலையீடுகள் ஏற்பட்டுள்ளன. இதனால், மக்கள் இன்னும் பீதியுடனேயே வாழ்கின்றனர் என்று சுட்டிக்காட்டினார் வினோ.

### வெள்ளைக் கொடி விவகாரம் அரசியல் சூழ்ச்சி

ஜனநாயக தேசியக் கூட்டணி உறுப்பினரான அனுரகுமார திஸாநாயக்க, இன்று சரத்பொன்சேகாவுக்கு எதிரான வெள்ளைக்கொடி வழக்கு அரசியலாக்கப்பட்டுள்ளது.

அப்படி ஒரு சம்பவம் இடம் பெறவில்லை. படையினர் எவரும் யுத்தக் குற்றச்செயலில் ஈடுபடவில்லை என்று சரத் பொன்சேகா மறுக்கின்றார்.

ஆனால், சரத்பொன்சேகா அப்படித்தான் கூறினார் என்று நிரூபிக்க முயல்கின்றது அரசு. சரத்பொன்சேகா கூறியது உண்மை என நிரூபிக்கப்பட்டால் அது உண்மையாகிவிடாதா?

இது நாட்டிற்கும் நமக்கும் நல்லதாக அமையுமா? என்றும் கேள்வியெழுப்பினார் அனுர குமார திஸாநாயக்க.

### கூட்டமைப்பின் கூற்றை அங்கீகரித்தார் பிரதி அமைச்சர் முரளிதரன்

மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் ஆக்கபூர்வமான விடயங்களை முன்வைத்தார். மீள்குடியேற்றம் தொடர்பாக தமது அமைச்சின் கடந்த கால நடவடிக்கைகளையும், எதிர்காலச் செயல் திட்டங்களையும் தெளிவுபடுத்தினார் பிரதி அமைச்சர் முரளிதரன்.

அதேவேளை, வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், விபரீதங்கள், மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திகள் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் குறிப்பாக அண்ணர் மாவை சேனாதிராஜா, சுரேஷ், வினோ ஆகியோர் முன்வைத்தவை உண்மையானவை.

அப்பிரதேச மக்களுக்கு அவர்களின் சேவை அத்தியாவசியமானது. அப்பகுதி மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக த.தே.கூட்டமைப்பினர் எம்முடன் இணைந்து செயற்பட வரவேண்டும் என அன்புடன் வரவேற்கின்றேன் என முரளிதரன் அழைப்பு விடுத்தார்.

### நாடாளுமன்றில் சுவடிகள் கூடம்

ஆளும் கட்சி உறுப்பினரான ஏ.எச்.எம். அஸ்வர் நாடாளுமன்றத்தில் சுவடிகள் கூடம் ஒன்றை அமைக்க வேண்டும். இது நாடாளுமன்றத்துக்கு வருகை தரும் பாடசாலை மாணவர்களுக்கும் பயன் உள்ளதாக அமையும் என்றும் குறிப்பிட்டார்.

நான் நாடாளுமன்ற விவகார அமைச்சராக இருந்தபோதே இந்த ஆலோசனையை முன் வைத்தேன். இன்று அமைச்சராக இருக்கும் சுமேதா ஜயசிங்க இதனை நிறைவேற்ற வேண்டும் என்று அஸ்வர் கோரிக்கை விடுத்தார்.

### லண்டன் ஆர்ப்பாட்டம் தமிழர்களுக்கே பாதிப்பு

பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் ஒரு துணிச்சலான கேள்வியை எழுப்பினார். அதாவது, லண்டனிலும் பரிஸிலும் பின்லேடனின் படங்களைத் தூக்கிக்கொண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினால் அந்நாட்டு அரசுகள் அனுமதிக்குமா அல்லது பார்த்துக்கொண்டு சும்மா இருக்குமா? என்றும் கேள்வி எழுப்பினர்.

உதயன் சபைச் செய்தியாளர்
இரா.புத்திரசிகாமணி

அதேவேளை, லண்டனில் ஜனாதிபதிக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் தமிழ்க் கைதிகளின் விடுதலை, சரணடைந்தவர்களின் விடுதலை மற்றும் மீள்குடியேற்றம் என்பனவற்றைக் கேள்விக்குறியாக்கியுள்ளது என்றும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்ற அமர்வு காலை வேளையில் சற்றுச் சூடுபிடித்தது. பின் படிப்படியாக மந்த கதிக்குச் சென்றது. எனினும், மாலையில் போக்குவரத்து அமைச்சு தொடர்பான விவாதம் ஆளும் தரப்புக்குக் கலகலப்பாக இருந்தது காரணம் நாமல் ராஜபக்ஷ மாலையிலேயே சபைக்கு வந்தார்.

## மீளாய்வுச் செயலமர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 9

சேவை முன்பயிற்சியின் மீளாய்வுச் செயலமர்வு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 3 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதிவரை நடைபெற்ற சேவை முன் பயிற்சியில் பங்கேற்ற அனைத்து ஆசிரியர்களையும் இந்த மீளாய்வுச் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (ற)

## வாழ்க்கை அத்தாட்சி சான்றிதழ் விண்ணப்பங்கள் கோரல்

தென்மராட்சி, டிசெ. 9

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறுவோர்களின் அடுத்த ஆண்டுக்குரிய வாழ்க்கை அத்தாட்சிச் சான்றிதழ் பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

டிசெம்பர் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்களுடன் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து தமது பிரிவு கிராம அலுவலரின் சிபார்சுடன் எதிர்வரும் ஜனவரி மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையில் நேரடியாகக் கையளிக்குமாறும் அல்லது தபாலில் கிடைக்குமாறு அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விண்ணப்பம் அனுப்பிவைக்கத் தவறும் பட்சத்தில் பெப்ரவரி மாதத்திலிருந்து ஓய்வூதியம் நிறுத்தி வைக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (201-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.குடாநாட்டு பாடசாலைகளின் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், டிசெ.9

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ.(உயர்தர) பரீட்சையின் முடிவுகள் நேற்று முன்தினம் இணையத்தில் வெளியாகின.

இந்தவகையில் பாடசாலை அதிபர்களால் அனுப்பி வைக்கப்பட்ட சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களை உதயன் தொடர்ச்சியாக வெளியிடவுள்ளது. ஒரு தொகுதி மாணவர் விவரம் வருமாறு:

**நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்**

**வர்த்தகம்:**

அம்பிகாநிதி கோகுலன்- 3ஏ, சிவகணேசமூர்த்தி பவிதா- 3ஏ, சி.சந்துஜன்- 2ஏசி, பாலேந்திரா கார்த்திகா- 2பிசி, அழகரட்ணம் பிரசாந்தினி- 2பிசி, பாலசுப்பிரமணியம் பவிதா-ஏ2சி, சிறீபாலசுந்தரம் யுவேதினி- ஏ2சி.

**உயிரியல்:**

விக்னராஜா அரவிந்தன்-ஏ2பி, உருத்திரசிவகணேசமூர்த்தி பிரணவதர்ஷன்- ஏ2சி, கிருஷ்ணானந்தசெல்வம் அபர்ணா- ஏபிசி.

**கணிதம்:**

சிவஞானசுந்தரம் சிந்துஜா- ஏ2பி, செல்வரட்ணம் அருளினி- ஏபிசி, தனபாலசிங்கம் ஆரணியா- ஏபிசி, பஞ்சலிங்கம் பிரசாத்- ஏ2சி, மேரிஜோசப்தாசன் றோஜர்றூவின்ஸ்- 2பிசி, விமலராஜா பிரசன்னா- 2பிசி.

**கலை:**

சூசைதாசன் சாரங்கவாணி- 2ஏபி, சிவராஜசிங்கம் சிவசங்கர்- ஏபிசி, தெய்வேந்திரம் முகுந்தன்- 2ஏபி, செல்வரட்ணம் சக்தியா- ஏ2பி, சிவப்பிரகாசம் துவாரகன்- ஏபிசி.

**வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

**கணிதம்:**

சிவகுமாரன் சுமங்கலி-3ஏ, கருணாகரன் அனிதா- 3ஏ, அன்ரன் யோகராஜா அனற்நிஷாந்தா- 3ஏ, பேரின்பநாயகம் மதுரதி- 3ஏ, திருவாசகர் காஞ்சனா- 2ஏபி, விமலச்சந்திரன் யசோதா- 2ஏபி, சிவபாலன் மதுரா- 3ஏ, திருக்கேதீஸ்வரன் லச்சுவினி- 2ஏபி, சச்சிதானந்தம் சுமணா- 2ஏபி, பாலகிருஷ்ணன் நிர்விகலா- 2ஏபி.

**உயிரியல்:**

அருணகிரிநாதன் பகீரதி- 3ஏ, பாலசுப்பிரமணியம் ரேகா-3ஏ, சுந்தரம் தாரணி- 3ஏ,பாலசுப்பிரமணியம் ரேணுகா- 2ஏபி, அருந்தவவிநாயகமூர்த்தி சுபாங்கி- 2ஏபி, சரா புவனேஸ்வரன் துவாரகா- 2ஏபி, ஞானரட்ணம் பவித்திரா- 2ஏபி, கதிர்காமலிங்கம் சுவர்ணாங்கி- 2ஏபி, வாமசிவன் நிஷாந்திகா-3ஏ, சண்முகலிங்கம் சிவாஜினி- ஏ2பி, முருகானந்தம் சாத்விகா- ஏ2பி, ருக்மணிகாந்தன் கம்சத்வனி- 2ஏபி, தங்கராஜா லக்சிகா- ஏ2பி.

**வர்த்தகம்:**

மரியதாஸ் லக்ஸ்ரெலா- 3ஏ, கதிர்காமத்தம்பி நிவேதா- 3ஏ, அருட்சோதி கஜாந்தினி- 2ஏபி, அருமைத்துரை ஜான்சிகா-2ஏபி, வெற்றிவேல்சிவனன் தயாளினி- 2ஏபி, சிவகுமார் மதுஜா- 2ஏபி, திருச்செல்வம் நிஷானி- 2ஏபி, கிருஷ்ணதாசன் டயர்னி- ஏ2பி, கிருஷ்ணன் ஆர்த்திகா- ஏ2பி, விமலேந்திரன் கங்கா- ஏ2பி, கந்தசாமி ஆரணி- ஏ2பி, பத்மநாதன் நிரோஷியா- 3பி, சுந்தரமூர்த்தி ஆரணி- 3பி.

**கலை:**

வேலாயுதம் சதானந்தி- 2ஏபி, விவேகானந்தன் சாமினி- ஏ2பி, புவனேந்திரராஜா தேனுகா- ஏ2பி, குபேந்திரன் நிரோஷினி-ஏ2பி, கனகரட்ணம் கனகதுர்க்கா- ஏ2பி, ரவிக்குமார் துஷ்யந்தி- ஏபிசி, நாதன் சுபத்திரா- ஏபிசி, பாலசுப்பிரமணியம் கேமாஷினி- 2பிசி, சூரியகுமார் கௌசிகா- ஏபிசி, முத்துக்குமார் மேடோன்ஆன்சியா- 3பி, தங்கராஜா நிஷாந்தினி- ஏபிசி, சிற்றம்பலம் எக்ஸ்ஷனா- 2ஏபி.

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

**கணிதம்:**

சின்னக்கோன் சிந்துஜன்- 3ஏ, பரமசோதி விஸ்ணுகாந்தன்- 2ஏபி, குமாரசாமி அபிராம்-2ஏபி, சிவகுமாரன் வசந்- ஏ2பி, கோபாலகிருஷ்ணன் சுகந்தன்- ஏ2பி, பாலகிருஸ்ணன் கஜானன்- ஏ2பி, குலசிங்கம் விந்துஜா- ஏபிசி, தர்மகுலசிங்கம் உதயபவன்- ஏபிசி, வைகுந்தவாசன் கோகுலன்- பி2சி, தர்மகுலசிங்கம் தர்ஷன்- பி2சி, கணேசன் சரவணபவன்- பி2சி, சண்முகராஜா விதுசா- பிசிஎஸ், குமாரசாமி ராகவன்- பிசிஎஸ்.

**விஞ்ஞானம்:**

சிவகுருநாதன் கஜானன்- 2ஏபி, வைத்திலிங்கம் ஜீவேந்திரன்- 2பிசி, லோகேஸ்வரன் சிறிநிகேதன்- பி2சி, தவராசா பார்த்தீபன்- பி2சி, ஜீவானந்தம் நிவேதிகா - பிசிஎஸ், லோகேஸ்வரன் சாந்திலேகா-பிசிஎஸ், ரவீந்திரன் குயின்ரன்- பிசிஎஸ்.

**வர்த்தகம்:**

சண்முகராஜா கிரிதரன்- 3ஏ, குணபாலசிங்கம் சுஜாதா- 3ஏ, மகேந்திரலிங்கம் சுஜீபன்- 3ஏ, நித்தியானந்தம் டிலக்ஷி- 2ஏபி, சிவஞானசுந்தரம் நிமலதீபன்- 2ஏபி, பாலசுப்பிரமணியம் தாரணி- 2ஏசி, அழகரட்ணம் கௌரிகா- 2ஏசி, மரியதாஸ் டொறீற்றா சர்மி- 2ஏசி, தர்மகுலசிங்கம் கலீசன்- ஏ2பி, நடராஜா கபிலாநந்- ஏ2பி, சிவலிங்கம் கிருஷிகா- 3பி, புலேந்திரன் சிவரூபா - 2பிசி.

சிறிகாந்தன் சிறிநாத்-ஏபிசி, தளையசிங்கம் சசிரூபன்- ஏபிசி, தபேந்திரன் அகில்-ஏபிசி, நாகராஜா சுகந்தினி- ஏபிசி.

**கலை:**

இராஜசிங்கம் பிரபாஜினி-2ஏபி, பாலசிங்கம் ரெனீசன்-2ஏபி,தவக்குமார் விசாந்தினி-ஏ2பி, கைலைநாதன் வர்சிகா-ஏ2பி, நவரட்ணம் விந்துஜா- ஏ2பி, கிருபானந்தம் பிரசாந்தினி-ஏ2பி, நவரட்ணம் தினுபா-ஏ2சி, தயாளநேசன் தக்ஷனா- ஏ2சி, பரமேஸ்வரன் சேயோன்- ஏபிசி.

கோபினி தேவசீலன்-ஏபிசி, குகநேசன் ஜிந்துசா-ஏபிசி, கதிர்காமசுந்தரம் யானுகா- ஏபிசி, உருத்திரகுமார் லதீபா- ஏபிசி, கதிர்காமநாதன் நிரோஜா-ஏபிசி, சோதிலிங்கம் நிவேஜா-ஏபிசி, சுந்தரமூர்த்தி சுகன்யா-ஏபிசி, வரதராஜா வோசிகா- ஏபிசி, சுப்பிரமணியம் ரேணுகா-ஏபிசி, இராஜவரோதயம் ரமேசினி-2பிசி, தவயோகராஜா துளசிகா-2பிசி.

**சாவகச்சேரி இந்துக்கல்லூரி**

**கணிதம்:**

ஸ்ரீகரன் யசோதரன்-3ஏ, இராஜரத்தினம் பிரதீசன்-2ஏபி, ஜெயகணேசன் ஜெயதர்சினி -2ஏபி, குலேந்திரன் சுஜந்தன் ஏ2பி, மகாசிவம் மாதங்கி-ஏ2பி, செல்வநாயகம் ஜெகதீபன்-3பி, திருநாவுக்கரசு துசாந்தன்-ஏபிசி, குணபாலசிங்கம் கஸ்தூரி-ஏபிசி, அருட்பிரகாசம் கஜானன்- ஏபிசி, சின்னத்துரை சோபிதன்-ஏபிசி, கனகரத்தினம் சோபிதா -2பிசி, பொன்னம்பலம் ஜெனோத்- ஏபிசி .

**உயிரியல்:**

சிறிமுருகதாஸ் விசாகன்-3ஏ, இராஜலிங்கம் மாதங்கி -2ஏபி, சரவணமுத்து சபேசன்-ஏ2பி, முத்துலிங்கம் சுமன்-2ஏசி, மகேஸ்வரன் ஞானகரன்-ஏ2பி, சனஜன் டிலோஜன்- ஏபிசி, குமாரவேல்ராஜா கௌதமி -ஏபிசி.

**வர்த்தகம்:**

தம்பையா நிரோஜினி -3ஏ, திருச்செல்வம் ஜெகத்- 3ஏ, இந்திரபவன் சுபைதன்-ஏ2பி, தங்கவேல் ஜெரிசித்தா -2ஏசி, பரமேஸ்வரன் சிந்துயா - 2ஏசி, தனபாலசிங்கம் நிரோஜிதா- ஏபிசி, சிவலோகநாதன் அஜந்தினி -2ஏசி.

**கலை:**

லோகேஸ்வர சர்மா மயூரி -3ஏ, நித்தியானந்தன் கீர்த்தனா- 2ஏபி, நாகேந்திரன் லக்சிகா-2ஏசி, மகாதேவா ஆரணியா -3ஏ, கிருஷ்ணசாமி சுகிர்த்தனா 2ஏபி, மகாராசா தனுசாலினி - 2ஏபி, துரைநாதன் டிலக்ஸனா -ஏ2பி, குணராசா ஜெயசாமினி -2ஏபி, ஜெயக்குமார் கயந்தினி -2ஏபி, சிவானந்தம் சிவானி -ஏ2பி.

சிவகுமாரன் சரண்யா -ஏபிசி, கணேஸ்வரன் ஜசிதரன்-3பி, மகேஸ்வரன் நிரோஜன்- 2ஏசி, சிவலிங்கராசா வேணுமதி- 2ஏசி, ஆறுமுகராஜா சுகந்தன் - 3பி, கனகலிங்கம் கரிசங்கர்- ஏபிசி, சிவசுப்பிரமணியம் மலரவன்-3பி, பரமசாமி தர்ஜித்திரா- ஏபிசி, சிவராசா நிவானி-3பி, சிவகுமார் தெய்வகரன்- 2பிசி, யோகராசா ஜனார்த்தனன்- ஏ2பி, கருணாகரன் தனுஷா -ஏபிசி, ஆனந்தராஜா கஜந்தினி-ஏபிசி.

பாண்டியன் பவித்திரா-2ஏசி, வீரசிங்கம் விஜயரூபி - ஏபிசி, சர்மிலன் தபோதினி ஏ2சி, சடாச்சரம் சஜீவன் 3பி, சுகுமாரன் தர்சிகா 2பிசி, நிமலமூர்த்தி நிருபன்- ஏபிஎஸ்.

(வளரும்)




**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநர் சபை உறுப்புரிமை**

**விண்ணப்பம் கோரல்- 2011**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநர் சபை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்யவேண்டும்

1. அ) 31.12.2010இல் 21 வயதுக்கு மேற்பட்டவராகவும்
ஆ) இந்து மதத்தைச் சார்ந்தவராகவும்
இ) நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநராகவும்
ஈ) இலங்கை குடியரசில் வழமையாகவே வசிப்பவராகவும் இருப்பதுடன்

2. அ) நான்கு கால நித்திய பூசையில் ஏதாவதொன்றின் உபயகாரராக இருக்குமிடத்து

அல்லது

ஆ) நைமித்திய பூசையொன்றோ, உற்சவமொன்றோ, மகோற்சவமொன்றோ ஒரு குடும்பத்தினால் அல்லது வழிபடுநர் பிரிவு அல்லது வகுப்பு ஒன்றினால் நடத்தப்படுமாயின் அக்குடும்பத்தின்/ பிரிவின்/ வகுப்பின் வயது வந்த ஒருவரை நியமிக்கவும்.

அல்லது

இ) 2.அ, ஆ வில் குறிப்பிடப்பட்ட பூசைகளில் ஏதாவதொன்றின் உபயகாரராக இருக்குமிடத்து வருடாந்த சந்தாவாக ரூபா பத்து (10/-) செலுத்துமிடத்தும்

அல்லது

ஈ) ஒருவர் தனது விண்ணப்பத்துடன் பொருளாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு என்னும் பெயருக்கு வருடாந்த சந்தாவாக ஐம்பது ரூபாவினை (50/-) காசுக் கட்டளையாகவோ, அஞ்சற் கட்டளையாகவோ இணைத்திருந்தவிடத்தும்

அத்துடன்

உ) முகாமைத்திட்டத்தில் குறிப்பிட்டபடி 1ஆவது அட்டவணையைப் பூர்த்தி செய்து எழுத்து மூல விண்ணப்பம் ஒன்றினை மேற்கொண்டு 31.12.2010 பிற்பகல் 5 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக

செயலாளர்,

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு எனும் முகவரிக்குத் தபாலிலோ அல்லது ஆலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தபாற்பெட்டியில் நேரடியாகவோ செலுத்த இயலும்.

ஊ) அவர் தீயொழுக்க நடத்தையின் பாற்பட்ட குற்றமொன்றிற்காக எந்தவொரு நீதி மன்றத்திலாவது குற்றத் தீர்ப்பளிக்கப்படாதவராகவும்

எ) வேதனமோ அல்லது மற்றைய கொடுப்பனவோ பெறும் கோயில் ஊழியராகவோ அல்லது குருக்களாகவோ இல்லாதவிடத்தும்

ஏ) கோயிலோடு இலாபமீட்டும் தொழில் முயற்சிகளையிட்டு ஒப்பந்தங்கள் இல்லாதவராய் இருக்கும் இடத்தும் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்குத் தகுதியுடையவராவார்.

3. வழபடுநர் சபையின் உறுப்பினர் ஒருவர் வருடாந்த சந்தாவை 31.12.2010இற்கிடையில் செலுத்துதல் வேண்டும். சந்தாவுடன் முகாமைத்திட்டத்தின் 2ஆவது அட்டவணையிற் காணப்படும் படிவத்தில் தமது உறுப்புரிமைக்குரிய தகைமைகளைத் தாம் தொடர்ந்தும் பெற்றிருப்பதாக உறுப்பினரால் அளிக்கப்படும் உறுதிமொழி இணைக்கப்படவேண்டும்.

குறிப்பு: மேலதிக விபரங்களைப்பெற விரும்புவோர் ஆலய நிர்வாகத்தினைப் பார்வையிடவும், அட்டவணை 1, 2 ஆகியவற்றை ஆலய தகவல் பலகையில்

செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு.

(107041)



**1ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

சுரேந்திரன்- துஸ்யந்தி தம்பதியரின் செல்வப்புதல்வி **அபிஷனா** தனது முதலாவது பிறந்தநாளை இன்று (09.12.2010) வியாழக்கிழமை கனடாவில் உள்ள அவரது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தை, அன்ரிமார், அக்கா, தங்கை, மச்சான், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் மீனாட்சி அம்மன் அருள்பெற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்க என்று வாழ்த்துகின்றனர்.

**உமாமகேஸ்வரன்**
(அம்மப்பா- அமுது).

சாரதா வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

09 - 12 - 2010

(107008)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசு வழங்கிய உழவு இயந்திரங்களை விவசாய சம்மேளனங்களுக்கு வழங்க ஏற்பாடு

சண்டிலிப்பாய்,டிசெ.9

இந்திய அரசால் வழங்கப்பட்டுள்ள நான்கு சில்லு உழவு இயந்திரங்கள் யாழ்.மாவட்டத்திலுள்ள விவசாய சம்மேளனங்களுக்குப் பகிர்ந்து வழங்கப்படவுள்ளன.

இவற்றில் மீளக்குடியேறிய விவசாயிகள், விடுவிக்கப்பட்ட உயர் பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியேறிய விவசாயிகள், அதிகளவான நிலப்பரப்பில் விவசாயம் செய்யும் விவசாயிகள் உள்ளடங்கிய விவசாய சம்மேளனங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் உழவு இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் விவசாயப் போதனாசிரியர்கள் மூலம் விவசாய சம்மேளனங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. போரால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தொடர்ந்து விவசாயத்தில் ஈடுபடுவதற்காகவும் அவர்களின் வாழ்வாதாரத்தை வளம்படுத்துவதற்காகவும் இந்திய அரசு 100 நான்கு சில்லு உழவு இயந்திரங்களை அண்மையில் யாழ்ப்பாணத்தில் வைத்து வழங்கியது.

யாழ். மாவட்டத்தில் சுமார் 250 இற்கும் மேற்பட்ட விவசாய சம்மேளனங்கள் இயங்கி வருகின்ற போதிலும் சகல சம்மேளனங்களுக்கும் உழவு இயந்திரம் வழங்க முடியாத காரணத்தினால் புதிய நடைமுறையைப் பின்பற்ற விவசாயத் திணைக்களம் முன் வந்துள்ளது.

விவசாய சம்மேளனங்களுக்கு நான்கு சில்லு உழவு இயந்திரம் வழங்குவதற்கான விண்ணப்பப் படிவம் என்ற தலைப்பிலான படிவத்தில் 14 விடயங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவத்தில் கோரப்பட்ட விடயங்களாவன:-

விவசாய சம்மேளனங்களின் பெயர், கமநல சேவை நிலையப் பிரிவு, பிரதேச செயலர் பிரிவு, விவசாயிகளின் விவரம் (முழு நேரம், பகுதி நேரம், வன்னியிலிருந்து மீளக்குடியேறியோர்), அதிகார எல்லைப் பரப்பு விவரம் (மீள்குடியேறிய விவசாயிகள் வசிக்கின்ற பகுதி, அண்மையில் விடுவிக்கப்பட்ட உயர் பாதுகாப்பு வலயம், சாதாரணம்), காணி விவரம் (நெற்காணி, மேட்டுக்காணி), மீள்குடியேறிய விவசாயிகளால் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் விஸ்தீரணம் (நெற்காணி,மேட்டுக்காணி), அண்மையில் விடுவிக்கப்பட்ட காணி விவரம் விஸ்தீரணம் (நெற்காணி, மேட்டுக்காணி), பயிர்ச்செய்கை விவரம் (காலபோகம், இடைப்போகம். சிறுபோகம்), பயிர்ச்செய்கைச் சுட்டி (நெற்காணி, மேட்டுக்காணி), பல்லாண்டு பயிர்களின் விவரம் விஸ்தீரணம் (பழப்பயிர், தென்னை), வாகனங்கள் தரிப்பிட வசதி, ஏனைய நிறுவனங்களிடமிருந்து ஏற்கனவே பெறப்பட்ட இயந்திரங்கள், உபகரணங்கள் ஆகியவற்றின் விவரம், பதிவேடுகள் ஆகிய 14 விடயங்கள் கோரப்பட்டுள்ளன.

(201-115)

## மானிய உரம் விநியோகம்

தென்மராட்சி,டிசெ.9

மட்டுவில் சந்திரபுரம் கமக்கார அமைப்பைச் சேர்ந்த நெற்செய்கையாளர்களுக்கான மூன்றாம் கட்ட மானிய உரம் விநியோகம் எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாக்கிழமை காலை 8.30 மணிக்கு கைதடி விவசாய விரிவாக்க நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

முதலாம் கட்ட மானிய உர விநியோகப் படிவத்தில் கையொப்பமிட்டு உரம் பெற்றவர்களைத் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமூகமளிக்குமாறு அமைப்பின் தலைவர் வ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார்.

(204-207)




## மின் விளக்குகள் ஔிராமையால் இருளில் மூழ்கும் வீதிகள்

கொழும்புத்துறை,டிசெ.9

சுண்டிக்குளி, கொழும்புத்துறைப் பகுதிகளில் பெரும்பாலான வீதிகள் இரவில் மின் விளக்குகள் ஔிராமையால் இருளில் மூழ்கிக் காணப்படுவதுடன் விபத்துக்கள் ஏற்படும் அபாயமும் காணப்படுகின்றது.

வீதிகளின் மின் கம்பங்களில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள போதிலும், பெரும்பாலான விளக்குகள் ஔிராது பழுதடைந்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

வீதிகள் மழையால் சேதமடைந்துள்ள நிலையில் இரவில் வெளிச்சம் இன்றியும் உள்ளதால் பயணிகள் விபத்துக்களை எதிர் நோக்குவதாகவும் திருடர்களுக்குச் சாதமாக அமைவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

(204-135)

### வெளியீடு....




அறிவூட்டல்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியற் துறை முதுநிலை விரிவுரையாளர் சி.விஜயகுமார் எழுதிய 'பருவநிலை மற்றும் நுண்பாகப் பொருளியல் கோட்பாடுகள்' என்னும் நூல் வெளியீடு யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் என்.ஞானக்குமரன் சிறப்புப் பிரதியை பேராசிரியர் செ.கிருஸ்ணராஜாவுக்கு வழங்குகிறார். மேடையில் நிதி முகாமைத்துவத் துறைத் தலைவர் பேராசிரியர் மா.நடராஜசுந்தரம், முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடப்பீடாதிபதி பேராசிரியர் கே.தேவராஜா மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருக்கின்றனர்.

(201-319)

## போத்தலில் அடைக்கப்பட்ட கள் குடாநாட்டில் தற்போது விற்பனை

சண்டிலிப்பாய்,டிசெ.9

குடாநாட்டில் பனங்கள் சீசன் முடிவடைந்ததைத் தொடர்ந்து, தற்பொழுது போத்தலில் அடைக்கப்பட்ட பனங்கள் விற்பனைக்கு வந்துள்ளது.

கள்ளுத் தவறணைகளில் ஒரு போத்தல் பனங்கள் 60 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

பனங்கள் சீசன் தை மாதத்திலிருந்து ஆரம்பமாகி புரட்டாதி, ஐப்பசி மாதம் வரை நீடித்திருக்கும்.

அக்காலப் பகுதியில் கள்ளுத் தவறணைகளில் தேவையான அளவு பெற்றுக் கொள்ளலாம்.

பனங்கள் சீசன் முடிவடைந்த காலப்பகுதியில் விற்பனை செய்வதற்காக, யாழ். மாவட்டத்திலுள்ள சில தெங்கு, பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் பனங்கள் அதிகமாகக் கிடைக்கும் காலப் பகுதியில் தேவையான பனங்களைப் போத்தல்களில் அடைத்துக் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பது வழக்கம்.

தற்பொழுது பனங்கள் சீசன் முடிவடைந்ததினால் கள்ளுத் தவறணைகளில் சொரி கள்ளுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தவறணைக்கு வரும் சொற்ப கள்ளைப் பெறுவதற்கு காத்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

மதுப் பிரியர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையிலும் கள்ளுத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையிலும் தற்பொழுது கள்ளுத் தவறணைகளில் போத்தல் கள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

(ம-115)

## சுதுமலை வடக்குப் பகுதி வெள்ளக் காடாகியது ஆலயத்துக்கு அடியார்கள் வரமுடியாத நிலை

சண்டிலிப்பாய் டிச.9

சுதுமலையிலிருந்து மானிப்பாய்க் குளத்திற்குச் செல்லும் கொத்தலாவளை வெள்ள வாய்க்கால் சீரின்மையால் மழை வெள்ளம் மானிப்பாய்க் குளத்திற்கு வடிந்தோடிச் செல்ல முடியாமல் சுதுமலை அம்மன் ஆலயத்தைச் சுற்றியும் நெல் வயல்களிலும் தேங்கி நிற்கின்றது. இதனால் ஆலயத்திற்கு அடியார்கள் வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் நெல் வயல்களும் அழிந்து போகும் நிலையிலுள்ளது.

சுதுமலை வடக்கிலுள்ள நெல் வயல்களையும் அப்பகுதியைச் சுற்றி வசிக்கும் மக்களையும் வெள்ள அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக சுமார் 40 வருடங்களுக்கு முன் சுதுமலை ஆலயதத்தின் வடக்குப் பகுதியில் வெட்டப்பட்ட கொத்தலாவளை வெள்ள வாய்க்கால் குடியிருப்புக்களின் ஊடாக மானிப்பாய் குளத்தைச் சென்றடைகின்றது.

நான்கு திசைகளிலிருந்தும் சுதுமலைக் குளத்தை வந்தடையும் மழை வெள்ளம் இந்த வாய்க்கால் மூலம் மானிப்பாய் குளத்தைச் சென்றடையக் கூடிய வகையில் அமையாததால் வருடாவருடம் சுதுமலையிலுள்ள நெற்காணிகள் அழிவது மட்டுமல்ல அப்பகுதியில் தாழ்ந்த இடங்களில் வசிக்கும் மக்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இது மட்டுமன்றி ஆலயத்தைச் சுற்றி வெள்ளம் நிற்பதால் அடியார்களும் ஆலயத்திற்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் சம்பந்தப்பட்ட திணைக்களத்தினால் பெருந்தொகையான பணத்தைச் செலவு செய்து வாய்க்கால் ஆழமாக்கப்பட்ட போதிலும் மழை வெள்ளம வாய்க்கால் வழியே ஓடாமல் வயல் வெளியில் தேங்கி நிற்கின்றது.

இந்த நிலை குறித்து கவலையும் அதிருப்தியுமடைந்துள்ள இந்தப் பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனறு தெரிவித்துள்ளனர்.

(201-115)

## வடமாகாணசபை அலுவலகங்களின் ஜனவரி யாழ்ப்பாணத்துக்கு வருகை

### உடமைகளைக் கொண்டு வர ஏற்பாடு


யாழ்ப்பாணம்,டிசெ.9

திருகோணமலையில் இயங்கும் வடக்கு மாகாண சபையின் அலுவலகங்கள் ஜனவரி மாதம் யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளதால், திணைக்களப் பொருள்களுடன் அவற்றில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் உடைமைகளும் அரச செல வில் யாழ்ப்பாணம் கொண்டு வரப்படவுள்ளன.

இது தொடர்பான சுற்று நிருபம் மாகாணப் பொது நிர்வாக அமைச்சினால் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அமைச்சுக்கள், திணைக்களங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு மேற்படி சுற்று நிருபம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(201-207)

### சேவைக்குப் பரிசு...



கௌரவிப்பு: இலங்கைப் போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலை முகாமையாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற கே.சி.கந்தசாமியின் சேவைநலன் பாராட்டு விழாவும் மணி விழாவும் கடந்த புதன்கிழமை காரைநகர் சாலையில் இடம் பெற்றது. கந்தசாமி தம்பதியினருக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் நினைவுப் பரிசில் வழங்குகிறார்.

(201-250)

## கொழும்புத்துறையில் மீள்குடியேறிய மக்கள் வெள்ளத்தால் பாதிப்பு

கொழும்புத்துறை,டிசெ.9

கொழும்புத்துறை மணியந்தோட்டத்தில் மீள்குடியேறிய குடிமனைகள் வெள்ளத்தால் சூழப்பட்டு இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த சில நாள்களாக தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும்மழையால் இக்கிராமத்தில் பெரும்பாலான வீடுகளுக்குள் வெள்ளநீர் புகுந்துள்ளதைக் காணமுடிகிறது.

பாதுகாப்பற்ற வீடுகளை தனியே விட்டு வெளியேற முடியாத நிலையில் நூற்றுக் கணக்கான குடும்பங்கள் உணவு தயாரிக்கவும், உறங்கவும் முடியாது பல அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

தமது நிர்கதியான நிலையை இதுவரை எந்த அதிகாரிகளும் கண்டு கொள்ளாமல் இருப்பது கவலையளிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மணற்பாங்கான இக்கிராமத்தில் நீர் கடலுக்குள் வழிந்தோடக் கூடிய கால்வாய் வசதிகள் எதுவும் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை கிணறுகளுக்குள் வெளிநீர் உட்புகுந்து நீர் மாசடைந்துள்ளமையால் குடி[illegible] நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(204-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
இறை வழிபாடுகளில் நாட்டம் செல்லும். எதேச்சையாக நடக்கும் சில நிகழ்ச்சிகளால் மகிழ்ச்சி அடைவீர்கள். உங்களின் நலனில் அக்கறை கொண்ட ஒருவரை அறிந்து கொள்வீர்கள். உறவினர்கள் கேட்ட உதவியைச் செய்ய மனமில்லாமல் கையை விரிக்கலாம். கலைஞர்கள் நினைத்தது நடக்காமல் தள்ளிப் போகலாம்.

**இடபம்:**
வீண் பேச்சுக்களால் சிலருடன் மனஸ்தாபம் ஏற்படலாம். மற்றவர்கள் செய்த தவறு ஒன்றுக்கு நீங்கள் பொறுப்பேற்கலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் நீங்கள் அவதிகளுக்கு ஆளாகலாம். தடை, தாமதங்களால் எரிச்சல் அடையலாம். சிலரிடம் வாக்குக் கொடுத்து விட்டு அதைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கலாம்.

**மிதுனம்:**
பிரிந்திருந்த குடும்ப உறுப்பினர்கள் மீண்டும் ஒன்று சேருவர். உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களைப் பெறலாம். புதிய முதலீடுகள் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். உங்களின் யோசனைகளுக்கு நண்பர்கள் மத்தியில் வரவேற்பு இருக்கும். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வரலாம்.

**கடகம்:**
அதிக வேலைகளைச் செய்ய நேரிட்டாலும் அதனால் ஆதாயம் பெறுவீர்கள். சிலரிடம் கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றுவீர்கள். உடன் பிறப்புக்கள் மூலம் மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி கிட்டும். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம்.

**சிங்கம்:**
உங்கள் வீட்டுக்கு இதுவரை வராத உறவினர் ஒருவர் திடீரென வரலாம். திறமை, புத்திசாலித்தனம் வெளிப்படும். பெண்கள் வகையில் உருவான பிரச்சினைகள் தீர்வுக்கு வரும். போட்டிகள், எதிர்ப்புகளைச் சந்திக்கலாம். தொழில் ரீதியான விடயங்களில் மிகுந்த கவனமாக செயற்பட வேண்டும். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில காரியங்களைச் செய்வீர்கள்

**கன்னி:**
வழக்கமான பணிகளில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். உறவினர்கள் மத்தியில் உங்களின் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் கண்டிப்பிற்கு ஆளாகலாம். சொந்த விடயங்களைப் பற்றி மற்றவர்களிடம் விவாதிக்க வேண்டாம். நண்பர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம்

**துலாம்:**
கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய விடயங்களை துவங்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. விவசாயிகள் விளைபொருள்கள் விற்பனையால் லாபம் பெறுவர். தயக்கம் இல்லாமல் சில விஷயங்களில் தைரியமாக முடிவு எடுப்பீர்கள். அடுக்கடுக்காக பல வேலைகளை திட்டமிட்டு செய்வீர்கள்.

**விருச்சிகம்:**
செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க வேண்டிய நாள். ஆரம்பத்தில் சில வேலைகளில் தயக்கம் காட்டி விட்டு, பின்னர் விறுவிறுப்பாக செயற்படுவீர்கள். நீண்ட நாள்களாக தள்ளிவைத்த வெளியூர் பயணம் செல்லலாம். அரசு தொடர்பான காரியங்களில் நினைத்தது நடப்பது கடினமே. அலைச்சல் உண்டு.

**தனுசு:**
கணவன் மனைவி இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். சில விடயங்களை கடும் பிரயத்தனம் மேற் கொண்டு முடிப்பீர்கள். மாணவர்கள் ஆசிரியர்களின் கண்டிப்பற்கு ஆளாகலாம். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். மலைபோல வந்த பிரச்சினை ஒன்று பனிபோல விலகி விடும். வேல் வழிபாடு வெற்றி தரும்.

**மகரம்:**
வீண் பழிகளைச் சந்திக்காமல் இருக்க விழிப்புணர்வு அவசியம். குடும்பத்திற்கு தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். பண விவகாரம் தொடர்பாக முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். பல நாள்களாக தொலை பேசியில் பேசிக் கொண்டிருந்த ஒருவரை நேரில் சந்திக்கலாம். வாக்குவாதங்களில் ஈடுபடலாம்.

**கும்பம்:**
எந்த விடயத்திலும் மற்றவர்கள் பாராட்டும் வகையில் செயற்பட நினைப்பீர்கள். உறவினர்களால் கலகலப்பான, சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். பொலிஸ் தொடர்பான பணியில் இருப்போருக்கு வருமானம் அதிகரிக்கும். நட்பு வட்டம் விரிவடையும். எதிர்ப்புகள், போட்டிகள் விலகும்

**மீனம்:**
மற்றவர்கள் செய்த சில வேலைகளை நீங்கள் செய்ததாக காட்டிக் கொள்வீர்கள். தந்தை தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பெண்கள் கணவரின் அன்பைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். உடல் உபாதைகள் நீங்கி உற்சாகம், தெம்பு பெறுவீர்கள். சங்கட காலத்தில் உதவி செய்த ஒருவருக்கு பதில் உதவி செய்வீர்கள்.

# தனியார் வைத்தியசாலைகள் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும்

## அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு

கொழும்பு, டிச. 9

தனியார் வைத்தியசாலைகள் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன திங்களன்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

வரவு-செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையில் இலவச சுகாதாரம் நல்ல நிலையில் உள்ளது. எமது வைத்தியர்கள் சிகிச்சைகள் மூலம் பல புதுமைகளை நிகழ்த்துகின்றனர். அவர்கள் பாராட்டுக்குரியவர்கள். தேசத்தின் மரியாதையை அவர்களுக்குச் செலுத்தவேண்டும்.

எமது சுகாதாரத்தை தரமானதாக வைத்துக் கொள்வதே எமது நோக்கம். அந்த இலக்கை அடைவதற்காக எமது அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர்.

ஔடத ஒழுங்குபடுத்தல் சபை ஒன்று அடுத்த வருட நடுப்பகுதியில் அமைக்கப்படும். அதற்காக சட்டமூலம் ஒன்றைக் கொண்டு வருவேன். தனியார் வைத்தியசாலைகளும் தரமான சேவைகளை வழங்கவேண்டும். அதற்கான தனியார் வைத்தியசாலைகள் சட்டம் திருத் தப்பட வேண்டும்.

மருந்துப் பொருள்கள் தொடர்பான ஊழல் மோசடிகளுக்கு நான் இடங்கொடுக்கமாட்டேன். இவ்வாறான மோசடிகளை எதிர்க்கட்சிகளும் சுட்டிக்காட்ட வேண்டும்.

டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைக்கு எதிர்க்கட்சி வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றி. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவின்படி கரு ஜயசூரியவின் தலைமையில் ஐ.தே.கட்சியினரின் டெங்கு நுளம்புகளை ஒழிக்கும் நடவடிக்கை இடம் பெற்றது. இது உண்மையில் வரவேற்கத்தக்கது.

இலங்கை மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் இப்போது 46 வகையான மருந்துப் பொருள்களை உற்பத்தி செய்கின்றது. அவற்றை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

மாகாணங்களில் சுகாதாரம் தரமானதாக இருக்க வேண்டும் என்பதற்காக மாகாண செயலாளர்களுக்கென்று அதிகாரங்கள் சிலவற்றை எழுத்துமூலம் வழங்கியுள்ளோம் - என்றார். (சி)

# வாழைக்குலைகள் விலை வீழ்ச்சி

கோப்பாய், டிசெ.9

நீர்வேலி வாழைக்குலை சந்தையில் வாழைக்குலைகளுக்கான கேள்வி குறைவடைந்ததால் சகல இனவாழைக் குலைகளின் விலைகளும் பெருவீழ்ச்சிகண்டுள்ளன.

தற்போது வாழைக்குலைகள் அனைத்தும் குலையாகவே சுமார் 30-120 ரூபா வரை கொள்வனவு செய்யப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அதனையடுத்து வாழைக்குலைகள் பலவற்றை சந்தைப்படுத்த முடியாமல் சந்தையிலேயே கைவிட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. தென்னிலங்கைப் பிரதேச வியாபாரிகளின் வருகை குறைவடைந்தமையும் தற்போதைய காலநிலையினால் உள்ளூர் நுகர்ச்சி குறைவடைந்தமை மற்றும் அதிக நிலப்பரப்பில் மேற்கொள்ளப்படும் வாழைச் செய்கை போன்றவற்றினாலும் இந்தவிலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (201-7)

# குற்றவாளியின் தீர்ப்பு

முற்காலத்தில் ஓர் அரசருடைய தர்பாரில் நால்வர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. நால்வரும் அரண்மனை ஊழியர்கள். கஜானாவில் இருந்து பொற்காசுகளைத் திருடிச் சமமாகப் பங்கிட்டுக் கொண்டனர். அரசர் வழக்கைக் கவனமாக விசாரித்து நால்வரும் குற்றவாளிகள் என்று அறிவித்தார். ஆனால் தண்டனையை நால்வருக்கும் ஒரே மாதிரி விதிக்கவில்லை.

முதல் குற்றவாளியை உற்றுப் பார்த்து விட்டு "நீ.... நீ... இப்படிச் செய்வாய் என்று நான் நினைக்கவே இல்லை. என்முன் நிற்காதே போய்விடு" என்று வெளியே மட்டும் அனுப்பினார்.

இரண்டாவது குற்றவாளி மன்னிப்புக் கோரினான். "அரண்மனையில் இருக்கிற எல்லோரின் கால்களிலும் தனித்தனியாக விழுந்து வணங்கு. கால்களைத் தொட்டு கண்களில் ஒத்திக்கொள்" என்று விசித்திரமான தண்டனையை வழங்கினார்.

"மூன்றாவது குற்றவாளியை உற்று நோக்கினார். உன்னை நாடு கடத்தி இருக்கிறேன் ஓராண்டுக்குப் பிறகு என் அனுமதி பெற்று நாட்டுக்குள் வரவேண்டும் ஓடிப்போ" என்றார்.

நான்காவது குற்றவாளியின் பக்கமே திரும்பிப் பாராது "இவனைச் சிறையில் அடையுங்கள். ஆயுள் தண்டனை விதிக்கிறேன்" என்று தீர்ப்பளித்தார். மக்களும் அமைச்சர்களும் இந்தத் தீர்ப்பை மனதார ஒப்புக் கொள்ள முடியாமல் தமக்குள் பேசிக் கொண்டனர். அரசர் அநீதி இழைப்பதாக வருந்தினர். ஆனால் யாரும் எதிர்த்துப் பேசவில்லை.

மறுநாள் காலை சபை கூடியதும் மூத்த அமைச்சர் மன்னரிடம் பணிவுடன் மக்கள் கருத்தையும் பிற அமைச்சர் அபிப்பிராயத்தையும் தயங்கிச் சொன்னார். அரசே நால்வரும் ஒரே தவறுதான் செய்துள்ளார்கள் திருட்டு திருடிய தொகையையும் நான்காகப் பிரித்துக்கொண்டு சம அளவு அனுபவித்திருக்கிறார்கள். எனவே தண்டனை நால்வருக்கும் சமமாக ஒரே மாதிரியாகத்தான் இருக்க வேண்டும். தாங்கள் ஒருவனுக்கு ஆயுள் தண்டனை வழங்கி அதிக பட்ச தண்டனை கொடுத்து விட்டு ஒருவனைத் தண்டிக்காது பேசி மட்டும் அனுப்பி விட்டீர்கள் இது நியாயம் ஆகாது என்று நாங்கள் கருதுகின்றோம் என்றார்.



"அரசர் சிரித்துக் கொண்டே அப்படியா? நாம் தண்டித்த நால்வரும் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மாலை நேரத்துக்குள் அறிந்து வந்து சபையில் செல்லும்" என்று அமைச்சருக்கு ஆணை பிறப்பித்தார்.

மாலை நேரம் வாடிய முகத்துடன் அமைச்சர் சபைக்குத் திரும்பினார் அரசே! நீங்கள் தண்டிக்காது நீ... நீ... இப்படிச் செய்வாய் என்று நினைக்கவே இல்லை என்று விடுவித்த முதல் குற்றவாளி தங்கள் நம்பிக்கையை இழந்து விட்ட அவமானம் தாங்காமல் போகிற வழியிலேயே தற்கொலை செய்து கொண்டான். ஆனால் ஆயுள் தண்டனை விதித்த கைதியோ சிறைக்குப் போகும் வழியில் பிற காவலர்களுக்கு லஞ்சம் கொடுத்து தப்பி யோடி விட்டான். மறுபடியும் தேடி அவனைச் சிறையில் அடைத்திருக்கிறார்கள். அவ்வேளை வெட்கமில்லாமல் இந்தச் சிறைவாசம் எனக்கு ஓய்வு மாதிரி பத்தே நாளில் வெளியே வந்து அரண்மனையிலேயே வேலைக்குச் சேருவேன் என்று பெருமை அடித்துக் கொள்கிறான்.

காலைத் தொட்டு வணங்கிச் சென்றவன் மன அவமானம் அடைந்து துறவியாகி விட்டான். நாடு கடத்தப்பட்டவன் தன் தவறுக்கு வெட்கப்பட்டு மாறிவிட்டான். தன் தேசப்பற்றை நிரூபிக்கும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காட்டில் இருக்கிறான். கையில் தங்கள் படத்தைப் பச்சை குத்தி இருக்கிறான் என்றார்.

"பார்த்தீர்களா? நான் யாரைத் தண்டிக்காமல் விட்டதாக நினைத்தீர்களோ அவனே அதிக பட்சமாகத் தண்டிக்கப்படுகின்றான். மானஸ்தன் என் அவநம்பிக்கையைத் தாங்க மாட்டாதவன். ஓர் ஊசி கூட அவனைக் கொல்லப் போதுமானது. ஆனால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவனைக் கொல்ல கடப்பார் கூட போதாது குற்றங்களைப் பொறுத்த தண்டனை நீதியா? குற்றவாளிகளைப் பொறுத்துத் தண்டணை என்பது நீதியா? யோசியுங்கள்" என்றார் அரசர்.

நீதியின் தீர்ப்பு முக்கியமல்ல, அத்தீர்ப்பைப் பற்றிய குற்றவாளியின்தீர்ப்பே தண்டனையை நிரூபிக்கிறது. இந்த அரசின் தீர்ப்பைப் போலவே ஆண்டவன் தீர்ப்பும் வித்தியாசம் வித்தியாசமாக இருக்கிறது. அதன் ஆழத்தையும், நுட்பத்தையும் புரிந்து கொள்ளாத அசடுகள் கடவுளின் நீதியைச் சந்தேகிக்கின்றனர். என்னசெய்ய? [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றினார் கிருஷ்ணா


கிருஷ்ணா

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவின் இலங்கைப் பயணம் நிறைவடைந்து விட்டது. பேச்சுக்கள், ஒப்பந்தங்கள், திறப்பு விழாக்கள், அடிக்கல் நாட்டு விழாக்கள் எனப் பலவிதமான நிகழ்வுகளை நிறைவு செய்துவிட்டு அவர் விமானமேறிவிட்டார். எனினும்அவரின் பயணத்தின் போது தமிழ் மக்களால் மிகவும் எதிர்பார்க்கப் பட்ட நிகழ்வுகள் மட்டும் நடைபெறவில்லை.

### எதிர்பார்ப்புக்கள்

இந்தப் பயணத்தின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் அவர் சந்தித்துப் பேசுவதற்கு முன்னரே திட்டமிடப்பட்டிருந்தது. அதையடுத்து இடம் பெறும் செய்தியாளர் சந்திப்பில் இனப் பிரச்சினை தொடர்பாக சில நம்பிக்கைக் குரிய கருத்துக்கள் வெளியிடப்படும் எனத் தமிழ் மக்கள் எதிர்பார்த்தனர்.

ஏற்கனவே, இலங்கைக்கான இந்தியத் தூதவர் அசோக் கே.காந்தா, இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியா இலங்கைக்கு அழுத்தங்கள் எதையும் கொடுக்காது எனவும் பயனுள்ள ஆலோசனைகளையே வழங்க முடியும் எனவும் தெரிவித்திருந்தார். எனினும் இந்தியாவின் பயனுள்ள ஆலோசனைகளுக்கு காத்திரத் தன்மை ஒன்றுண்டு என்றே தமிழ் மக்கள் எதிர்பார்த்தனர்.

மேலும் இந்திய வெளியுறவு அமைசரின் பயணத்தின் முன்பாகத் தமிழக முதல்வர், இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாகவும் இடம்பெயர்ந்தோரின் மீள்குடியமர்வு தொடர்பாகவும் இந்தியப் பிரதமருக்குக் கடிதம் ஒன்றையும் எழுதியிருந்தார். இதற்குப் பதிலளித்த இந்தியப் பிரதமர், பயனுள்ள வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவித்திருந்தார். இதுவும் தமிழ் மக்களுக்கு மேலும் சில நம்பிக்கைகளை ஊட்டியிருந்தன. எனவே, கிருஷ்ணாவின் இலங்கைப் பயணத்தின் போது இனப்பிரச்சினை தீர்வை நோக்கிய நகர்வுகள் தொடர்பாக ஒரு சிறு துளியாவது தென்படும் என எதிர்பார்க்கப் பட்டது.

### ஏமாற்றங்கள்

அவர் இங்கு வந்த பின்பு - இலங்கை அரச தரப்பினருடன் பேச்சு நடத்தி ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பின்பு - இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில், காலவரையறைக்குட்பட்ட சுமூகப் பேச்சு மூலம் திட்டமிட்ட முறையில் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப் படும் எனத் தான் நம்புகிறார் என்று தெரிவித்தார். அதன்போது குறுக்கிட்ட இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ''அபிவிருத்தி புனர்வாழ்வு என்பவற்றுக்கே முன்னுரிமை அளிக்கப்படும்'' என்றார். இது தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கு விழுந்த முதலாவது அடி.

## சந்திரசேகர ஆசாத்

அடுத்து எஸ்.எம்.கிருஷ்ணா யாழ்ப் பாணத்தில் இந்தியத் துணைத் தூதரகத் தைத் திறந்து வைத்துப் பேசுகையில், ''அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத் தச் சட்டத்தின் அடிப்படையில் முன்வைக் கப்படும் அர்த்தமுள்ள தீர்வுப் பொதி மூலம் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண முடியும்'' என்று தான் நம்பு வதாகத் தெரிவித்தார்.

உயர் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் வடக்கு-கிழக்குப் பிரிக்கப்பட்டு, 18 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலமும் உள்ளூராட்சிச் சபைகள் சட்டத்தின் மூலமும் மாகாண சபையின் அதிகாரங்கள்


இந்தியா ஏதாவது பெற்றுத்தரும் என்ற நம்பிக்கை பலருக்கு உண்டு: அமைச்சர் கிருஷ்ணா யாழ்ப்பாணம் வந்த போது பொட்டிட்டு வரவேற்கப்படுகிறார்.

> தீர்வு தொடர்பாக முயற்சிகள் எடுக்கப்படும் போதெல்லாம், தமிழ் மக்கள் சார்பில் செயற்படுவது போன்ற தோற்றத்தில் அமைச்சர் டக்ளஸ், அரசின் நோக்கங்களை நிறைவேற்றி, தீர்வைப் பின்தள்ளும் ஒரு கருவியாகச் செயற்பட்டு வருகிறார்

பறிக்கப்பட்ட நிலையில், 13ஆவது திருத் தச் சட்டத்தின் அடிப்படையில் அமையக் கூடிய ஓர் அதிகாரப் பகிர்வு எப்படிப்பட் டதாக இருக்கும் என நாம் சொல்லித் தான் தெரியவேண்டும் என்பதில்லை. இது தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கு விழுந்த இரண்டாவது அடி.

இந்திய வெளிவிவகார அமைச்சர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தையும் தனித்தனியாகச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கியிருந்தார். அது முதலில் ஒத்தி வைக்கப்பட்டுப் பின் இரத்துச் செய்யப் பட்டுவிட்டது. இது தமிழ் மக்களின் எதிர் பார்ப்புக்கு விழுந்த மூன்றாவது அடி.

ஏற்கனவே தமிழ் மக்களின் எதிர் பார்ப்புக்கு விழுந்த இரண்டு அடிகளின் அடிப்படையில் மூன்றாவது அடி திட்ட மிட்டு நடத்தப்பட்டதா? அல்லது தவிர்க்க முடியாதபடி ஏற்பட்டதா? என்ற சந்தேகத் தையும் இலகுவில் புறந்தள்ளிவிட முடியாது.

### சந்தேகம் தந்த சந்திப்பு

ஏற்கனவே, நிகழ்ச்சி நிரலில் சேர்க் கப்பட்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினருடான சந்திப்பு திட்டமிட்டே இரத் துச் செய்யப்பட்டுள்ளது என நம்புமள வுக்குப் பல சம்பவங்கள் நடந்தேறிய மையை அவதானிக்க முடிகிறது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு வர இருந்த வேளையில், தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் ஜனாதிபதியைச் சந்தித் துப் பேசினர். இரண்டரை மணி நேரம் இடம்பெற்ற இச்சந்திப்பில் இனப்பிரச் சினை தொடர்பாகவும் மீளக்குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பாகவும் பேசப்பட்டதாகத் தெரி விக்கப்பட்டது.

இந்தப் பேச்சுக்களில் கலந்து கொண்ட தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தைச் சேர்ந்த எம்.கே.சிவாஜிலிங்கம், ''அரச பலத்தின் உச்சியில் நிற்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பார் என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது'' என்று தெரிவித்தார். மேலும் அரங்கத் தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை களுக்கு ஜனாதிபதி திட்டவட்டமான பதில் எதையும் தெரிவிக்கவில்லை என் றும், அவர் அளித்த பதில்கள் இனவாதம் கலந்ததாக இருந்தன என்றும் கூறியிருந்தார்.

இது தொடர்பாக வீ.ஆனந்தசங்கரியோ, சித்தார்த்தனோ, ரெலோவைச் சேர்ந்த வர்களோ, ஏனையோரோ எவ்வித கருத்தை யும் வெளியிடவில்லை. ஆனால் அமைச் சர் டக்ளஸ் தேவானந்தா லண்டன் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் இச்சந் திப்பு தனக்கு மிகவும் திருப்தியளித்தது என்று கூறியிருந்தார்.

இந்திய வெளியுறவு அமைச்சர் இங்கு வருவதற்கு ஒரு நாள்கள் முன்பாக அவ சர அவசரமாக இப்படி ஒரு சந்திப்பு ஏன் ஏற்பாடு செய்யப்பட்டது என்ற கேள்வி பலரிடமும் எழுந்துள்ளது.

### டக்ளஸின் விளக்கம்

இந்தச் சந்திப்புத் தொடர்பாக, இந் திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவையும் பக்கத்தில் வைத்துக் கொண்டு, அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா அவர்கள் ஆற்றிய உரை மிகவும் கவனத்திற்குரியது. ''ஜனாதிபதியுடன் அரங்கம் நடத்திய பேச்சு திருப்திகரமா கவும் நம்பிக்கை மிக்கதாகவும் முன் னேற்றகரமாகவும் இருந்தன'' என்று தனது உரையில் குறிப்பிட்ட அவர், ''யாருடன் பேசி மக்களின் பிரச்சினைக் குத் தீர்வு காண முடியுமோ அவர்களுடன் பேசி நாங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். கட்டங் கட்டமாக எல்லாப் பிரச் சினைகளுக்கும் தீர்வு காணப்படும்; அவ் வாறே அரசியல் உரிமைப் பிரச்சினைக்கும் நாம் தீர்வு காணமுடியும்'' என்றும் தெரிவித்தார்.

எம்.கே.சிவாஜிலிங்கம் வெளியிட்ட திருப்தியீனமான கருத்துக்கு நேர்மாறான வையாக அமைச்சரின் கருத்துக்கள் உள்ளன என்பதை நாம் இங்கு அவதா னிக்க வேண்டும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உரையில், ''இனப்பிரச்சினைக்கான தீர்வை நான் ஜனாதிபதியுடன் பேசி எட்டுவேன்'' என்ற தொனியும் இந்த விடயத்தில் இந்தியத் தலையீடு தேவை யில்லை என்ற ஒரு செய்தியும் மறைமுக மாக இருப்பதாகத் தோன்றுகின்றது.

அதாவது, இனப்பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் தலையீடு அவசியமற்றது என்ற தொனி இங்கு ஒலிக்கிறது. இந்தச் செய்தி ஜனாதிபதியால் அமைச்சர் டக் ளஸுக்குச் சொல்லப்பட்டு, கிருஷ்ணா வுக்கு உணர்த்தப்பட்டதாகக் கொள்ள வும் இடமுண்டு.

இந்திய வெளிவிவகார அமைச்சர் முன்னிலையில் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சி னைக்குத் தன்னால் தீர்வு காண முடியும் எனக் கூறியிருப்பது இந்தியத் தரப்பு மட்டுமன்றி இனப்பிரச்சினைத் தீர்வுக் குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்களிப்பும் தேவையற்றது என்பதை யும் மறைமுகமாக உணர்த்துவதாக அமைந்துள்ளது.

### பின்னணியில் டக்ளஸ்

இந்தப் பின்னணியில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான இந் திய வெளியுறவு அமைச்சரின் சந்திப்பு திட்டமிட்டுத் தவிர்க்கப்பட்டதா என்ற சந்தேகம் எழுகிறது.

இவ்விடயத்தில் சில விடயங்கள் அரச தரப்பால் திட்டமிட்டு வெகு லாவகமாகக் கையாளப்பட்டுள்ளன என்றும் இதில் டக்ளஸ் தேவானந்தா பிரதான பங்காளி யாகச் செயற்பட்டுள்ளார் என்றும் எண் ணத் தோன்றுகிறது.

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தைச் சேர்ந்த சிவாஜிலிங்கத்துக்கு எள்ளளவும் திருப்தி தராத ஒரு பேச்சு எப்படி டக்ள ஸுக்கு மிக மிக நம்பிக்கையூட்டுவதாக அமைந்தது? என்று யதார்த்தமாக எழும் கேள்விக்கான பதிலே இந்தச் சந்தேகம்.

இறுதி நேரத்தில் அமைச்சர் தேவா னந்தா ஓடோடிச் சென்று இந்திய வெளி யுறவு அமைச்சரை விமான நிலையத் தில் சந்தித்தார் என அக்கட்சியின் செய் திக் குறிப்பு ஒன்று பின்னர் தெரிவித் திருந்தது. அப்போது தமிழ்த் தரப்பினரைச் சந்திக்க முடியாமல் போனமைக்கு கிரு ஷ்ணா வருத்தம் தெரிவித்தார் என்றும் அந்தச் செய்திக் குறிப்புக் கூறியது. இவை அனைத்தையும் ஒரு நாடகத்தின் அடுத் தடுத்த கட்டங்களாகவே நோக்க வேண்டும்.

இந்தியா செல்வதற்கு பல மாதங் களுக்கு முன்னர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்து ஜனாதி பதி பேச்சுகள் நடத்தி இருந்தார். அது திருப்திகரமாக அமையவில்லை என அவர்கள் தெரிவித்திருந்தனர். அதன் பின்பு ஜனாதிபதியைச் சந்தித்த ஈ.பி.டி.பியினர் தமது சந்திப்பு திருப்தியாக அமைந்தது எனவும் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு மேலாக அதிகாரங்கள் பகிரப்படும் என்றும் தமக்கு வாக்குறுதி வழங்கப்பட்ட தாகவும் அமைச்சர் தேவானந்தா தெரி வித் திருந்தமையும் நினைவிருக்கின்றது.

### இலங்கையின் சாணக்கியம்

இவை எல்லாவற்றையும் கூட்டிக் கழித் துப் பார்க்கும் போது, இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக முயற்சிகள் மேற்கொள் ளப்படும் போதெல்லாம், தமிழ் மக்கள் சார்பில் செயற்படுவது போன்ற தோற்றத் தில் அமைச்சர் தேவானந்தா அரசின் நோக் கங்களை நிறைவேற்றி இனப்பிரச்சி னைத் தீர்வைப் பின்தள்ளும் ஒரு கருவி யாகவேபயன்படுத்தப்பட்டுவருகிறார் என்பது புலனாகின்றது. (18 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இளையோரிடத்தில் 'எய்ட்ஸ்' பற்றிய விழிப்புணர்வு...

## இருக்கிறது

இன்றைய காலகட்டத்தில் கல்வி கற்காதவர்கள் எவருமே இல்லை. இவர்கள் மத்தியில் எய்ட்ஸ் நோய் பற்றிய அறிவு தகவல் தொழில்நுட்பத்தின் காரணமாகப் பல்கிப் பெருகியுள்ளது.

யாழ். மண்ணின் கலை, கலாசார விழுமியங்களையும், பாரம்பரிய நடைமுறைகளாலும் தங்களுடைய சமயம் மீது அதிகம் பற்றுள்ளமையினாலும், எமது மூதாதையினரின் வழிகளைப் பின்பற்றுவதனாலும் இவர்களுடைய எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பாலும் எய்ட்ஸ் நோயின் தாக்கம் பற்றித் தொளிவாக அறிந்து வைத்துள்ளனர்.

மேலும் ஏ-9 பாதை திறக்கப்பட்டதால் தென்னிலங்கை வாழ் மக்களும், எமது புலம்பெயர் உறவுகளும் இங்கு வந்து செல்கின்றனர். இவர்களுடன் பழகும்போது எமது இளையவர்கள் சுகாதார நடைமுறைகளை ஒழுங்காகவே கடைப்பிடித்துப் பழகுகின்றனர். எனவே எய்ட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வு எம்மி த்தே உண்டு என்பதே எனது வாதம்.

ஞான.சுகிர்தா
தென்மராட்சி




## இல்லை

இலங்கையில் அதிகமான எய்ட்ஸ் நோயாளிகள் இனம் காணப்பட்ட மாவட்டங்களில் யாழ்ப்பாணம் இரண்டாம் இடத்தினைப் பெறுகின்றது. சமூக, பண்பாட்டு, கலாசார ரீதியில் முக்கியத்துவம் பெறும் யாழ்ப்பாணம் இவ்வாறான பாலியல் நோய்களால் அதிகளவில் பாதிப்புற்று வரும் நிலையானது எமது இளையோர் சமூகத்தின் விழிப்புணர்வற்ற தன்மையினையே சுட்டிக்காட்டுவதாக அமைகின்றது.

பாடசாலை மாணவர்கள் முதல் வீட்டிலிருக்கும் பெண்கள் வரையிலான அனைவருக்கும் பாலியல் தொடர்புகள் மூலம் ஏற்படுகின்ற எய்ட்ஸ் நோய் பற்றிய போதிய விழிப்புணர்வு காணப்படுவதில்லை. இந்நிலை நகர மக்கள் தொடக்கம் கிராமமக்கள் வரையும் காணப்படுகின்றது.

இளையோர் சமூகம் உணர்வுகளிற்கு அடிமையாகி , விளையாட்டாக இளம் வயது முதல் பாலியல் நடத்தைகளில் ஈடுபட்டு பிறகாலத்தில் எய்ட்ஸ் நோய்க்கு ஆளாகி வாழ்வை அழிக்கின்றனர்.

எமது சமூகத்தை பொறுத்தவரையில் பாலியல் சார்ந்த விடயங்களைப் பெற்றோர் பிள்ளைகளுடனோ, மாணவர்கள், ஆசிரியர்களுடனோ கலந்துரையாட முடியாத ஒரு மர்மமான விடயமாகவே இன்று வரை கருதப்பட்டு வருகின்றது.

தவறான பாலியல் தொடர்புகள், அவற்றினால் ஏற்படும் விளைவுகளை, எய்ட்ஸ் தொடர்பான அறிவின்மை, எய்ட்ஸ் தொடர்பான அறிவின்மை, எய்ட்ஸிலிருந்து எம்மை எவ்வாறு பாதுகாப்பது போன்ற விடயங்களில் இளையோரிடம் போதுமான விழிப்புணர்வின்மையே காரணங்களாகும்.

அனோஜா சிறிமகாதேவன்
கோயில் வீதி, நல்லூர்

## மூன்றெழுத்தில் உள்ள மூச்சு

இயற்கை அன்னை பெற்றெடுத்த இந்த உலகில் ''உயிர்'' என்ற மூன்றெழுத்தோடு ''உடல்'' என்ற மூன்றெழுத்தில் உருவாகும் ஒரு குழந்தை அம்மா, அப்பா என்ற ''மழலை'' பேசுவதும் மூன்றெழுத்துத்தான்.

ஐந்து வயதானதும் '' கல்வி'' என்ற மூன்றெழுத்தைக் கற்று ''அறிவு'' என்ற மூன்றெழுத்தில் தேர்ச்சியடைகிறான்.

வாலிபப் பருவம் வந்ததும் ''இளமை'' என்ற மூன்றெழுத்தில் தன் ''திறமை'' என்ற மூன்றெழுத்தைக் காட்டி ''தொழில்'' என்ற மூன்றெழுத்தை அடைகிறான்.

காளைப் பருவம் வந்ததும் ''காதல்'' என்ற மூன்றெழுத்துக்கு ''உயிர்'' கொடுக்க ''மனைவி'' என்ற மூன்றெழுத்தை வாழ்க்கைத் துணையாக அடைந்து ''சுகம்'' என்ற மூன்றெழுத்தை அனுபவிக்கிறான்.

பின்னர் ''பிள்ளை'' என்ற மூன்றெழுத்திற்கும் ''அப்பா'' என்றும் மூன்றெழுத்தால் அதிபதியாகின்றான். ''கவலை'' என்ற மூன்றெழுத்தையும் கற்கின்றான்.

காலம் வந்ததும் ''வயது'' என்ற மூன்றெழுத்து அதிகரித்து ''முதுமை'' என்ற மூன்றெழுத்து முத்தியடைந்து முடிவில் ''உயிர்'' என்ற மூன்றெழுத்து ''உடல்'' என்ற மூன்றெழுத்தை விட்டுப் பிரிந்து ''பிணம்'' என்ற மூன்றெழுத்தாக்கி ''சுடலை என்ற மூன்றெழுத்தில் ''உரம்'' என்ற மூன்றெழுத்தாகின்றான்.

ஜி.நிதர்சனா
யா/வைத்தீஸ்வரக் கல்லூரி

## முள்ளம்பன்றி மீன்

பசுபிக் பெருங்கடலில் ஆழமான பகுதியில்தான் இந்த முள்ளம்பன்றி மீன்கள் அதிகம் காணப்படும்.

இதில் கத்தி போன்ற கூர்மையான முட்கள் உடல் முழுவதும் காணப்படும். முள்ளம்பன்றி மீன் தனது எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள உடலில் உள்ள முட்களை சிலிர்த்து எதிரிகளைப் பழிவாங்கும்.

எதிரிகளிடமிருந்து தப்பிச் செல்ல முடியாத போது தன்னுடைய உடலை பலூன் போன்று உப்பிக் கொண்டு நீர்மட்டத்துக்கு மேலே வந்து மிதக்கும். இதன்போது தான் மனிதனின் வலைக்குள் மாட்டிக்கொள்ளும்.


இந்த முள்ளம் பன்றி மீனின் உடலில் ''டெட்ரோ ஓடோன் டான்சின்'' என்ற விஷப் பொருள் உள்ளது.

இதை அறியாமல் இந்த மீனைச் சாப்பிட்டு ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கணக்கானோர் இறக்கின்றனராம்.

முள்ளம்பன்றி போல் இதற்கு அதிகம் முட்கள் இருப்பதால் முள்ளம்பன்றி மீன் என்று அழைக்கபடுகின்றது.


கு.நிஷா

## இறைவனுக்கு ஒரு கடிதம்



நீயின்றி அணுவும் அசையாது
அன்புடையோனே!
அன்புடன் உறவாடும்- தூய
நட்பை தந்துவிடு!
ஏமாற்றுக்காரரை- அடியோடு
குழி தோண்டிப் புதைத்திடு!
பொறுமை உலகினைப்
படைத்திடு! என்னை
மண்ணாகப் படைத்திருந்தால்
மனமகிழ்ந்திருப்பேன்
மனிதனாகப் படைத்து விட்டாய்
அதனால்.......
மறு ஜென்மத்தில்
இன்பமாய் வாழ- விரைவில்
புதிய உலகைப் படைத்திடு
இம்மடலுக்கு பதிலாக....!

ப.ரௌத்திரி
பருத்தித்துறை.




## வௌவால்

தரையில் வாழும் எந்த விலங்குகளை விடவும் வௌவால்கள் அதிகூடிய செவிப்புலன் கொண்டவை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

வௌவால்களின் கிரகிக்கும் சக்தி மனிதனின் கிரகிக்கும் சக்தியை விடவும் அதிகமானது. அதாவது மனிதனின் கிரகிக்கும் சக்தி 20 Kh வரை. வௌவால்களின் கிரகிக்கும் சக்தி 20 - 80 Kh ஆகும்.

க.விது

## விவாதமேடை

இருக்கிறது | இன்றைய இளையோரிடம் எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு..... | இல்லை

இளைய சமூகத்தின் விவாதத் திறனுக்குக் களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே இன்றைய இளையோரிடம் எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வு இருக்கிறதா? இல்லையா? என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

## போராடு...

விதி வரைந்த சாலையில்
நீ என்ன
நாம் எல்லோருமே
தாழ்த்தப்பட்டவர்கள்தான்!
கொஞ்சம்
நின்று போராடித்தான்
பார்ப்போமே!
தொடங்கவே இல்லை
அதற்குள்
முடிவு என்றால்....?

வைதேகி.தி





## இளைஞர்கள் வட்டம் வாக்குச்சீட்டு

இன்றைய இளையோரிடம் எய்ட்ஸ்
பற்றிய விழிப்புணர்வு...

இருக்கிறது ☐ இல்லை ☐

பெயர் :-..............................
முகவரி :-..............................
:-..............................
அடையாள அட்டை இல:..............................

உங்கள் தீர்ப்புகளை 25.12.2010 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இவ் வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும்,
பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும்
'இளைஞர்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது.
இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், ஏதாவது
சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள
படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..............................
முகவரி :-..............................
:-..............................
.............. ..............................
திகதி கையொப்பம்

'இளைஞர்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவரங்கால் நடராச ராமலிங்க சுவாமி ஆலயம்



(சென்றவாரத் தொடர்ச்சி)

"ஆவரங்கால் நடராச ராமலிங்க சுவாமி ஆலயத்தின் அமைவிடத்துக்கு உள்ள சிறப்பு இலங்கையின் வேறு எந்த சிவன் கோயிலுக்கும் இல்லை. காசிக்கும் சுடுகாட்டுக்கும் எவ்வளவு நெருக்கமான தொடர்பும் சிறப்பும் உள்ளதோ அத்தகைய சிறப்பு இங்கேயும் உண்டு. ஆலயத்தின் மூலஸ்தானம் சுடுகாட்டை (சுடலையை) நோக்கிய வண்ணம் உள்ளது. ஆலயத்துக்கு அண்மித்த தூரத்தில் எந்த விதமான மறைப்பும் இல்லாமல் ஆவரங்கால் இந்து மயானம் உள்ளது" என ஆலயத்தின் பிரதம குரு வேதக்குட்டிக்குருக்கள் நடராஜக் குருக்கள் தெரிவித்தார்.

ஆலயத்தின் பதிவிலக்கம் HA/5/JA-82

ஆலயத்து உரிய நிலமாக 96 பரப்புக் காணி ஆலயத்தோடு இணைந்த நிலையில் உள்ளது. ஆலயம் தொடர்பாக யாழ். மாவட்ட நீதி மன்றத்தின் 1964 ஆம் ஆண்டு I.-20ஆம் இலக்க வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் 43 பேர் உரிமையாளர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.




இந்த உரிமையாளர்களின் சம்மதத்துடன் தெரிவு செய்யப்பட்ட 5 பேர் கொண்ட ஆலயதர்ம பரிபாலன சபை ஆலயத்தை நிர்வகித்து வருகின்றது. முதலாவது தர்ம பரிபாலன சபையில் கந்தையா சின்னத்தம்பி-தலைவர், அம்பலவாணர் தில்லைநாதன்-பொருளாளர், தர்மலிங்கம் கனகசபை-பொருளாளர், சரவணமுத்து சுப்பிரமணியம்-உறுப்பினர், தம்பிராசா துரைராஜசிங்கம் -உறுப்பினர் 1977 ஆம் ஆண்டு தலைவராக சரவணமுத்து சோமசுந்தரம் தெரிவுசெய்யப்பட்டார். தற்பொழுது ஆலய தர்மபரிபாலான சபையின் தலைவராக அ.தில்லைநாதனும், செயலாளராக க.இராசதுரையும், பொருளாளராக நீ.மயில்வாகனமும் செயற்பட்டுவருகின்றனர்.

காலத்துக்குக் காலம் ஆலயத்தின் திருப்பணி தொடர்பான கருமங்களை மேற்கொள்வதற்கு தெரிவு செய்யப்படும் திருப்பணிச் சபைகளில் தருமபரிபாலன சபையில் இடம்பெற்றுள்ள ஐந்து பேரும் உள்ளடக்கப்படுவதோடு, தலைவர் பதவியும் மற்றும் முக்கியமான நிர்வாக பதவியையும் தருமபரிபாலன சபைக்கு வழங்குவதன் மூலம் ஆலயத்தின் திருப்பணி வேலைகள் உரிய முறையில் நிறைவுபெற்று வருகின்றன. ஆலயத்தின் முழுமையான திருப்பணி வேலைத்திட்டங்களை திருப்பணிச்சபையினரும் தர்மபரிபாலன சபையினரும் இணைந்த நிலையில் மேற்கொண்டு வருகின்றனர்.

சுண்ணாம்புக் கலவையினால் நிர்மாணிக்கப்பட்ட ஆரம்பகால ஆலயம் இடிபாடுகளுக்கு உட்பட்டு சேதமடைந்த நிலையில் இருந்தமையினால் ஆலயத்தை முழுமையாகப் புனரமைப்புச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. இந்த வகையில் முதலாவது திருப்பணிச் சபை 1977 ஆம் ஆண்டு தெரிவு செய்யப் பட்டது. விதானையார் ச.சோமசுந்தரம் தலைமையில் செயற்பட்ட இத் திருப்பணிச் சபையில் க.சின்னத்துரை- செயலாளர் ஆ.கா.பஞ்சாட்சரம் - பொருளாளர் மற்றும் 27 உறுப்பினர்களும் கொண்டு திருப்பணிச்சபை உள்ளூர், அயலூர் அடியவர்களின் நிதி உதவியுடனும் புலம்பெயர்ந்து வாழும் உறவுகளின் நிதி உதவியுடனும் ஆலயம் முழுமையான புனருத்தாரணம் செய்யப்பட்டு புதுக்கோயிலாக 1982 ஆம் ஆண்டு மகாகுப்பாபிஷேகம் நடைபெற்றது.

புதிய சித்திரத்தேர் செய்வதற்காக இரண்டாவது திருப்பணிச்சபை தெரிவு செய்யப்பட்டு விதானையார் ச.சோமசுந்தரம் தலைமையில் செயற்பட்டு 20 லட்சம் ரூபா செலவில் புதிய சிந்திரத்தேர் செய்யப்பட்டு 27.06.1995 ஆம் திகதி வெள்ளோட்டம் விடப்பட்டது.

1995 இடப்பெயர்வை அடுத்து சேதமடைந்த ஆலயம் மற்றும் தேர்க்கொட்டகை என்பன திருத்தி அமைக்கப்பட்டு 26.06.1998 இல் மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இராஜகோபுரம் அமைப்பதற்கு 2003 ஆம் ஆண்டு அடித்தளம் இடப்பட்டு 60 லட்சம் ரூபா செலவில் அழகான மிக உயரமான 7 வாசல் கொண்ட இராஜ கோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் மகா மண்டபத்தை முற்றாக மாற்றி வில்லுமண்டபம் அமைப்பதற்கான ஆரம்ப திருப்பணி வேலை 2009 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 65லட்சம் ரூபா உத்தேச செலவில் நிர்மாணப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அத்துடன் ஆலயத்தின் உட்பிரகாரத்திலும் திருப்பணி வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தினசரி மூன்று கால நித்திய பூசை நடைபெறுவதுடன் சிவன் திருவிழா ஆனி உத்தரத்தில் தீர்தோற்சவம் நடைபெறக்கூடிய வகையில் 10 தினங்கள் நடைபெறுகின்றன. அம்மன் வாசல் திருவிழா ஆடிப்பூரத்தில் தீர்த்தத் திருவிழா நடைபெறக் கூடியதாக 10தினங்கள் நடைபெறுகின்றன.

விசேடமாக இந்துத் தெய்வங்களுக்கான உற்சவங்களான திருவெம்பாவை, கந்தசஷ்டி, நவராத்திரி, சிவராத்திரி, பெருங்கதை, கௌரிகாப்பு, வரலட்சுமி,




நாயன்மார் குருபூஜை உள்ளிட்ட 72 உற்சவங்கள் ஆண்டு தோறும் சிறப்பாக நடைபெறுகின்றன. சிறப்பாக கிரகதோஷ நிவர்த்திக்கு புகழ்பெற்ற ஆலயமாகவும் இருப்பதால் யாழ்.குடாநாட்டின் சகல பகுதியில் இருந்தும் அடியார்கள் வந்து வழிபடுவது உண்டு.

ஆலயத்தின் பூர்வீக பூசகர்களான காசி கங்கா பட்டர் வழிவந்த பூசகர் சந்ததியை சேர்த பிரதிஷ்டா வித்தகர் வேதக்குட்டி நடராஜக் குருக்களும் அவரது ஏக புத்திரன் ந.யோகானந்தேஸ்வரக் குருக்களும் ஆலயக் கிரியைகளை சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர்.

ஆலயமும் ஆலயத்தின் மேற்திசையில் சிவசக்தி மணிமண்டபமும் அழகுற அமைந்து வலி.கிழக்குக்கு அணி செய்கின்றன. (முற்றும்)

# வலி. கிழக்கு ஆயுள் வேத பாதுகாப்புச் சபை

பாரம்பரியமான சித்த மருத்துவத்துறையை மக்கள் மத்தியில் பிரபல்யப் படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டதே வலி.கிழக்கு ஆயுள்வேத பாதுகாப்புச் சபையாகும்.

இந்த ஆயுள்வேத பாதுகாப்புச்சபைச் செயற்பாடுகள் வலி.கிழக்கில் 27.08 2009 இல் கோப்பாய் பிரதேச செயலகத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இதன் ஆரம்பகாலத்தில் 25 உறுப்பினர்களுடன் தொடங்கிய இச்சபையில் தற்போது 29 உறுப்பினர்களுடன் அதன் செயற்திட்டங்களைச் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது.

தற்போது இச்சபையின் தலைவராக Dr.V.அனவரதன் (BSMS, Mphil), செயலாளராக Dr.T.விஜயகுமார் (BSMS) ,பொருளாளராக Dr.P.சுரேசன் (BSMS) உள்ளிட்ட 12 பேர் உள்ளடங்கிய ஆயுள்வேத மருத்துவர்களைக் கொண்ட செயற்குழுவாக பல்வேறு சிறப்புச் செயற்திட்டங்களை இப்பிரதேசத்தில் முன்னெடுத்து வருகின்றனர். இவர்களின் இந்தச் செயற்திட்டங்களுக்குப் பிரதான அனுசரணையாளராக வலி.கிழக்குப் பிரதேச சபையினர் உறுதுணையாக இருப்பதுடன், வலி.கிழக்கு பிரதேச செயலகப் பிரிவினரும் அவ்வப்போது உதவிகள் புரிந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு கீழாக பிரதேச சபையின் ஐந்து உபபணிமனைகளில் இரண்டு சித்தமருத்துவ பட்டதாரி மருத்துவர்கள் சுழற்சி முறையில் தொடர் சேவை புரிவதால் பெருமளவு பயனாளிகள் பயனடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் மருத்துவர் பற்றாக்குறையால் பல இடர்கள் இம்மருத்தகங்களுக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக நோயாளர்கள் பலர் இவற்றை நாடுவது குறைவாக இருந்தது.

ஆனால் ஆயுள்வேத பாதுகாப்புச் சபை உருவாக்கப்பட்ட பின்பு இப்பிரதேசத்தில் வசிக்கும் சகலதர ஆயுள்வேத மருத்துவர்களையும் ஒன்றிணைந்து ஓர் ஒருங்கிணைந்த சேவை வழங்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

இதனடிப்படையில் நடமாடும் ஆயுள்வேத மருத்துவமுகாமின் செயற்பாடு வலி.கிழக்குப் பிரதேச சபையின் பூரண அனுசரனையுடனும் வலி.கிழக்கு பிரதேச செயலகத்தின் அனுசரனையுடனும் இலவச மருத்துவ முகாமாகச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த இலவச சேவையில் வாதரவத்தையில் நடத்தப்பட்ட முதலாவது இலவச மருத்துவ முகாமில் சுமார் 400 இற்கும் மேற்பட்டோர் பயன் பெற்ற துடன் 600இற்கும் மேற்பட்டோருக்கு இலவச சத்துணவு மூலிகைச் கஞ்சி வழங்கப்பட்டது.

இரண்டாவது இலவச மருத்துவ முகாம் புத்தூர் கலைமதி சனசமூக நிலையத்தில் நடைபெற்றபோது 300இற்கும் மேற்பட்டோர். பயன்பெற்றனர். 400 வரையானோருக்கு இலவச சத்துணவுக் கஞ்சி வழங்கப்பட்டது. 3ஆவது முகாம் உரும்பிராய் செல்வபுரம் பகுதியில் நடத்தப்பட்ட போது 400 வரையானோர் சிகிச்சை பெற்றதோடு 600 வரையானோருக்கு மூலிகைக்கஞ்சியும் வழங்கப்பட்டது. தொடர்ந்தும் இச்சபையின் [illegible] சேவை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த ஆயுள் வேத பாதுகாப்புச் சபையின் ஏற்பாட்டில் மருத்துவர்களுக்கான சிறப்புக் கருத்தரங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

"உள நலம் பேணல்" என்ற தலைப்பில் சாந்திகம் உளநலபயிற்று விப்பாளர் Dr.V.அனவரதனும், "சித்த மருத்துவ மூலிகைகள் இனங்காணல்" என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி விவியன் சத்தியசீலன் அவர்களும் செயல்திறன் பயிற்சிப் பட்டறையை நடத்தினர்.

இதன் பயனாக இவ்விடயம் சமூகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

பாடசாலைகளில் மூலிகைத்தோட்டம் அமைத்தல், பாடசாலை மாணவர்களிடையே சுதேச மருத்துவத்தின் சிறப்புத் தன்மை பற்றிய விழிப்புணர்வுச் செயற்பாடு போன்றவற்றை எதிர்வரும் ஆண்டிலிருந்து முன்னெடுக்கப்பவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இப்பிரதேசத்தில் ஆயுள்வேத இல்லம் { கெலவெத கெதர அமைப்பதற்குரிய தலா ரூபா 10,000 } இருவருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டு அது மேலும் விரிவுபடுத்தப்படவுள்ளது.

அத்துடன் இப்பிரதேசத்தில் 25 வருடங்களுக்கு மேற்பட்ட தொடர் சேவை புரியும் 14 சிரேஷ்ட ஆயுள்வேத மருத்துவர்கள் ஆயுள்வேதத் திணைக்களத்தால் கௌரவிக்கப்படவுள்ளனர். தகுதி இருந்தும் பதிவு செய்யப்படாமல் இருந்த பரம்பரை ஆயுள்வேத மருத்துவர்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த வலி.கிழக்கு ஆயுள்வேத பாதுகாப்புச் சபையானது யாழ். குடாநாட்டில் ஒரு முன்னோடி ஆயுள்வேத பாதுகாப்புச் சபையாகத் தனது செயற்பாடுகளை விரிவாக்கம் செய்து வருகிறது. இந்த சபையை நிறுவியதில் ஆயுள்வேத திணைக்கள ஆணையாளர் திருமதி றமணி குணவர்த்தனா, அப்போதைய சுதேச மருத்துவ அமைச்சர் திஸ்ஸ கரலியவத்த, வடமாகாண சுதேச மருத்துவ மாகாணப் பணிப்பாளர் திருமதி S.துரைரட்ணம் மற்றும் ஆயுள்வேத பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி ஆகியோர்களின் பங்கு அளப்பரியது.

இந்த ஆயுள்வேத பாதுகாப்புச் சபைக்கு நிதி வழங்கலில் உள்ள பற்றாக் குறை காரணமாகப் பல செயற்பாடுகளை முன்னெடுப்பதில் தாமதம் ஏற்படுவதாகவும் எதிர்வரும் காலங்களில் பல்வேறு முன்மொழிவுகளூடாக நிதியைப் பெறுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது. அந்த வகையில் "மூலிகைப்பானம்" என்ற சிறப்பு ஔடதத்தை சகலருக்கும் ஒரு நிவாரண விலையில் கிடைக்க வழி செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு இந்த ஆயுள்வேத பாதுகாப்புச் சபையானது யுனானி அக்குபஞ்சர் (கொரியா) ஆகியவற்றின் மருத்துவ முறைகளையும் பின்பற்றி வலி.கிழக்கு பிரதேசமக்களுக்கு சேவை புரிந்து வருவது போற்றப் [illegible]. இதற்காக வலி.கிழக்கு பிரதேச மக்கள் இச்சபையின் [illegible]ற்கு பேராதரவு நல்கிவருவது துலாம்பரமாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பார்வையற்ற, பார்வைக்குறைபாடுடைய மாணவர்களுக்கான வாழ்வக அனுமதி -2011

எதிர்வரும் 2011 ஆம் ஆண்டில் பார்வையற்ற, பார்வைக்குறை பாடுடைய மாணவர்களை வாழ்வகத்தில் இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்குமிடம், உணவு, கல்வி வசதிகள் ஏனைய வசதிகள் யாவும் முற்றிலும் இலவசமாகவே வழங்கப்படும். பார்வையற்ற பிள்ளைகளும் ஏனைய பிள்ளைகளுக்குச் சம மாகக் கல்வியில் முன்னேறக்கூடிய வகையில் உரியவாய்ப்பு, வசதிகள் வழிகாட்டல்கள் வழங்கப்படும்.

பார்வையற்ற, பார்வைகுறைபாடுடைய பிள்ளைகளைக் கொண்டுள்ள பெற்றோர்கள் எவரும் பிள்ளை பற்றிய விவரங்களுடன் எதிர்வரும் 30.12.2010 இற்குப் பிந்தாமல் தலைவர், விழிப்புல வலுவிழந் தோர் வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரியுடன் கடிதம் மூலமாகவோ அன்றி நேரிலோ தொடர்பு கொள்ளவும். மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடவசதி உள்ளதால் உங்கள் விண்ணப்பங்களை முடிந்தவரை விரைவாக அனுப்பிவைப்பது பயன்மிக்கதாயமையும்.

(சி/573438) தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.

## ஏமாற்றினார்...

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாவற்றுக்கும் மேலாக, இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா இலங்கையில் தங்கியிருந்த போதே பாகிஸ்தான் ஜனாதிபதியும் கொழும்புக்கு வருகை தந்திருந்தார். அவரை இலங்கை ஜனாதிபதி விமான நிலையத்துக்கே நேரில் சென்று வரவேற்றிருந்தார். இவையும் கூடக் கவனத்திற்கு உரியவை. இந்தியாவுக்கும் இவை மகிழ்ச்சியளிக்கும் விடயங்களாக இருக்க முடியாது.

அதேவேளையில் வடபகுதிக்கும் இந்தியாவுக்குமுள்ள பூர்வீகத் தொடர்பு கள் பற்றி எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாகக் கடும் கண்டனங்களைத் தெரிவித்து தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி விடுத்த அறிக்கையையும் இந்தியாவோ தமிழ் மக்களோ அலட்சியப்படுத்திவிட முடியாது. அதற்கு அரச தரப்பைச் சேர்ந்தவர்களின் பின்னணி இல்லையெனவும் கூறிவிட முடியாது.

எப்படியிருப்பினும் இந்திய வெளி விவகார அமைச்சரின் இலங்கைப் பயணம் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் பெரும் ஏமாற்றத்தையே கொடுத்துள்ளது. அதேவேளையில் இந்தியாவைப் பொறுத்த வரையிலும் அது திருப்திகரமாக அமைந்ததா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



### வீடு வாடகைக்குத் தேவை

இருவர் கொண்ட குடும்பத்துக்கு மாநகரசபை எல்லைக்குள் வாடகைக்கு வீடு தேவை.

தொடர்பு: 0770724810

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான No. 1 பிறிமா புறொயிலர் குஞ்சுகள் நியாயமான விலையில் 09.12.2010 காலை விநியோகிக்கப்படும்.
முன்பதிவு செய்யவும்.
(பின்பு 100 வீதம் இறைச்சிக்கோழிகள் திருப்பி வாங்கப்படும்)
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்,
021 222 6944

### மஹஜன ஸம்பத / மஹஜன சம்பத / Mahajana Sampatha

07.12.2010

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2328

வெற்றி எழுத்து: W — வெற்றி எண்கள்: 9 5 7 5 7 7

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | W 9 5 7 5 7 7 | ரூபா.14,708,328/= | பரிசு - |
| 1 பரிசுகள் | 9 5 7 5 7 7 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | 5 7 5 7 7 | ரூபா. 100,000/= | பரிசுகள் 14 |
| 3 பரிசுகள் | 7 5 7 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் 121 |
| 4 பரிசுகள் | 5 7 7 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1146 |
| 5 பரிசுகள் | 7 7 | ரூபா. 100/= | பரிசுகள் 11576 |
| 6 பரிசுகள் | 7 | ரூபா. 20/= | பரிசுகள் 114126 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | |
|---|---|---|---|
| 7 பரிசுகள் | 9 5 7 5 7 | ரூபா. 10,000/= | பரிசுகள் 14 |
| 8 பரிசுகள் | 9 5 7 5 | ரூபா. 1,000/= | பரிசுகள் 116 |
| 9 பரிசுகள் | 9 5 7 | ரூபா. 100/= | பரிசுகள் 1185 |
| 10 பரிசுகள் | 9 5 | ரூபா. 50/= | பரிசுகள் 11389 |
| 11 பரிசுகள் | W | ரூபா. 20/= | பரிசுகள் 45704 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 11,054,150.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு Rs. 15,460,750.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுக்கு வந்தது 10 . 10 . 1932



விண்ணுக்குச் சென்றது 01 . 12 . 2008

### அமரர் செல்லையா வேலாயுதபிள்ளை

(ஓய்வுபெற்ற பிராந்திய முகாமையாளர், அம்பாந்தோட்டை, ஆனைவிழுந்தான்)

திதி: கார்த்திகை பூர்வபட்ஷ சதுர்த்தி

அப்பா!.....அம்மப்பா!
ஆண்டிரண்டு முடிந்துவிட்டது
நீங்கள் மறைந்து....
ஆலமரமாய் நீங்களிருக்க
அதன் நிழலில் நாங்கள் இருந்தோம்
ஆசானாய் நீங்களிருக்க உங்கள்
அறிவுரையில் நாம் வாழ்ந்தோம்
உயர் பணிகள் செய்த போது உவகையுற்று
நாம் மகிழ்ந்தோம்
அப்பாவாய், அம்மப்பாவாய் நீங்களிருக்க உங்கள்
அன்பில் நாம் திளைத்தோம்
ஆனால் இன்றோ... ஏதுமில்லை
உங்களின் ஆத்மா எங்களோடு இருக்கட்டும்

'திருவதிகை', வேலணை, அளவெட்டி.

என்றும் உங்கள் நினைவில்:
அன்பு மகளும், ஆசைப் பேரன்களும்.



## குரு நாகலை மாநகரத்தில் உயர்வான ஒரு தொழில்

30 வருட காலமாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஆடைகள் ஏற்றுமதி செய்யும் முதன்மையான கூட்டு நிறுவனமொன்றான ஜினதாஸ கூட்டு நிறுவனத்தின் குரு நாகலை ஜினதாஸ பெனட் (தனியார்) நிறுவனத்துடன் கைகோர்க்க உங்களுக்கும் ஒரு அரிய வாய்ப்பு...

- மெசின் ஒப்பரேடர்
- தரக்கட்டுப்பாட்டாளர் (கொலிடி கொன்ரோலர்)
- உதவியாளர்கள்

பயிற்சியற்ற உங்களுக்கு வருமானத்துடன் கூடிய பயிற்சிக்கான வாய்ப்பு...



உங்களுக்கேயான...

- அனைத்து வசதிகளுடனான விடுதி
- இலவச காலை உணவு
- சலுகை விலையில் பகல் மற்றும் இரவு உணவு

உங்களது திறமை மற்றும் தகுதியின் அடிப்படையில் அரசு அங்கீகரித்த சம்பளத்தை விடவும் கூடுதலாக உழைக்கும் வாய்ப்பு மற்றும் தொழிலில் பதவி உயர்வு வழங்கப்படும்.

வியாபாரத்தை விரிவுபடுத்தும் போது, உங்களது பிரதேசத்திற்கும் தொழிற்சாலையை பரப்பும் நோக்குடன் **11 டிசம்பர் 2010ம் திகதி க்ரீன் க்ராஸ், இல: 33, ஆசிர்வாதம் ஒழுங்கை, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்** என்ற இடத்தில் நடைபெறும் ஆள்சேர்க்கும் பாசறைக்கு, குறைந்தது ஆண்டு 8 சித்தியடைந்த வயது 16க்கு மேலான உங்களை அழைக்கிறோம்.

அன்றைய தினம் உங்கள் பெற்றோர்களுடன் வந்து, சரியான பாதையை அறிந்து, உயர்வான தொழிலுடன் கூடிய பாதுகாப்பானதொரு எதிர்காலத்திற்கு எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்.

### ஜினதாஸ பெனட் (தனியார்) நிறுவனம்

நீர்கொழும்பு வீதி, உஹுமீய, குரு நாகலை.
தொலைபேசி: 037- 5262031/2

தொழிற்சாலை முகாமையாளர்: 0777-426796 மனிதவள முகாமையாளர்: 0777-426780
E-mail: opportunities@jinadasa.com


## மூன்றாம் ஆண்டு இதய அஞ்சலி



மண் மகிழ: 11.03.1951


கண் நெகிழ: 13.12.2007

திதி: கார்த்திகை பூர்வபட்ஷ துர்த்தி

### அமரர் சபாரத்தினம் கனகசபாபதி

(குட்டி விதானையார்)
(முன்னாள் கிராம சேவையாளர், காரைகிழக்கு மூ/42)

அதிகாலை தானெழுந்து ஐங்கரன்
பாதம் பணிந்து - நித்தம்
எம் முத்தம் நீங்கள் வந்து
அன்பு வார்த்தை பேசி- ஆசை
முத்தம் தான் பொழிந்த உங்கள்
அன்பு முகம் காணாது- காலமது
உருண்டோடி விட்டதுவே மூன்றாண்டுகள்!



மூன்று ஆண்டுகளென்ன? முந்நூறு ஆண்டுகளானாலும்
எழுதாத கவிதையாய் அழியாத ஓவியமாய்- என்றும்
எங்கள் மனதில் நிறைந்தேயிருக்கும் - உங்கள்
நினைவுகள் மனக்கண் முன் வருகையிலே
தாங்கமுடியாது ரணமாய் வலிக்கிறதே- இன்றுவரை
ஏற்கமுடியவில்லை உங்கள் இழப்பதனை
எம் இனிய சொக்கா மாமாவே! - உங்கள்
ஆத்மா சாந்தி பெற ஐயனாரை வேண்டுகின்றோம்

மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
நீலிப்பந்தனை,
காரைநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிவிரிச்சான் காட்டுக்குள் அதிசக்திவாய்ந்த குண்டுகள்

## பொலிஸார் தீவிர விசாரணை

மட்டக்களப்பு, டிசெ. 9

மட்டக்களப்பு பண்டிவிரிச்சான் காட்டுப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தயாரிக்கப்பட்ட அதிசக்தி வாய்ந்த குண்டுகளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை விசேட பொலிஸ் அதிரடிப்படை இப் பிரதேசத்தில் மேற்கொண்ட திடீர் தேடுதல் நடவடிக்கையின் போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளன.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுகள் -07, டெட்டனேட்டர் -67, மி.மீ.60ரக மோட்டார் குண்டுகள் - 13,மி.மீற்றர் ரக குண்டுகள் 300 ஆகிய வையே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)




# நாவற்குடாவில் பூட்டிய வீட்டில் திருட்டு; சந்தேகநபர் கைது

மட்டக்களப்பு, டிசெ. 9

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குடா பகுதியில் பூட்டியிருந்த வீட்டை உடைத்து தளபாடங்கள் உட்படப் பெருமளவிலான பொருள்கள் திருடப் பட்டமை தொடர்பாக சந்தேக நபரொருவர் காத்தான்குடி பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார் என பொலிஸ் நிலையக்குற்றத்தடுப்புப் பொறுப்பதிகாரி காமினி ஜெயவர்த்தன தெரிவித்தார்.

நாவற்குடாவிலுள்ள வீட்டைப் பூட்டிவிட்டுச் சென்ற வீட்டு உரிமையாளர் தாம் ஒரு மாதத்தின் பின்னர் வந்து திறந்து பார்த்தபோது வீட்டிலிருந்த அலுமாரி, தொட்டில், தொலைக்காட்சிப்பெட்டி உட்பட தளபாடங்கள் திருடப் பட்டிருந்தமையைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளார்.

காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் இவர் செய்த முறைப்பாட்டையடுத்து குற்றத் தடுப்புப் பொறுப்பதிகாரி காமினி ஜெயவர்த்தன தலைமையிலான பொலிஸ் குழுவினர் சந்தேக நபரைக் கைதுசெய்துள்ளனர்.

அத்துடன் திருடப் பட்ட பொருள்களையும் மீட்டுள்ளனர். மற்றொரு சந்தேக நபரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட நபர் மட்டக்களப்பு நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார். காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ)

# மட்டக்களப்பு நகரில் பொது நூலகம் கிழக்கு முதலமைச்சர் அடிக்கல் நட்டார்

மட்டக்களப்பு, டிசெ. 9

200 மில்லியன் ரூபா செலவில் மட்டக்களப்பு நகரில் நிர்மாணிக்கப்படவுள்ள நவீன வசதிகளுடனான பொது நூலகத்துக்கான அடிக்கல்லை கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் நட்டுவைத்தார். மட்டக்களப்பு மாநகர சபையின் வேண்டுகோளின் பேரில் இந்நூலகம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

மாநகர மேயர் திருமதி சிவகீதா பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் முதலமைச்சர் சந்திரகாந்தன் உரை நிகழ்த்துகையில்,

இந்நூலகம் 2012ஆம் ஆண்டு மக்களது பாவனைக்கு விடப்பட வேண்டும். அதற்கிடையில் முற்று[illegible]தாகப் பூர்த்தி செய்யப்பட [illegible]ண்டும். அதற்கு அனைத்து [illegible]காரிகளும் ஒத்துழைக்க வே[illegible] அத்தோடு எமது நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதற்கான பூரண ஒத்துழைப்பை வழங்குவார் - என்றார்.

மட்டக்களப்பின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களும், பிரதி மேயர், மாகாண[illegible] கட்டடங்கள் திணைக்கள[illegible] பணிப்பாளர், முதலமைச்சரி[illegible] செயலாளர், பிரதேச செயல[illegible]ர் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ)

# மனிதனை உன்னத இடத்துக்கு வாசிப்பு இட்டுச் செல்கிறது

## திருமலை நகரசபைத் தலைவர் உரை

திருகோணமலை, டிசெ. 9

இந்த உலகில் மனிதனை உன்னத இடத்திற்குக் கொண்டு செல்வது வாசிப்பு. ஆனால் இன்று வாசிப்பு பழக்கம் மிகவும் மந்த நிலையிலேயே உள்ளது. வாசிப்பின் மகத்துவத்தை உணர்த்துவதற்கும் வாசிப்பை ஊக்குவிப்பதற்காகவுமே இலங்கை அரசும் வாசிப்பு மாதத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இவ்வாறு திருகோணமலை நகரசபைத் தலைவர் க.செல்வராஜா, திருகோணமலை நகராட்சி மன்றப் பொது நூலகத்தின் வாசிப்பு மாத பரிசளிப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். நகரசபை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு இவ்விழா நடைபெற்றது.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நல்ல நல்ல நூல்களைத் தேடிக் கற்கவேண்டும். கணினி மூலமும் வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தலாம். ஆனால் நூலகம் சென்று புத்தகங்களைத் தேடிப் படிப்பது போன்று அமையாது. திருவள்ளுவர் எந்த பல்கலைக்கழகத்திற்கும் சென்று படிக்கவில்லை. வாசிப்பு பழக்கத்தின் மூலம்தான் காலத்தால் அழியாத திருக்குறளைத் தந்தார்.

அதுபோன்று தமிழக முதல்வர் கருணா நிதியும் எந்தப் பல்கலைக்கழகத்திற்கும் செல்லவில்லை. வாசிப்பின் மூலமே அரிய பல நூல்களை எழுதியுள்ளார். இவர்களைப் போல் பலர் உள்ளனர். இன்று எங்களின் வளர்ச்சி கல்வியில்தான் தங்கியுள்ளது - என்றார்.

இப்பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராக கிழக்கு மாகாணப் பிரதம செயலாளர் வே.பொ.பாலசிங்கம் கலந்து கொண்டார். பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (எ)

# தோட்டத் தாய்மார்களின் தாய்ப்பாலில் விஷம்

## ஆய்வில் திடுக்கிடும் தகவல்

கண்டி, டிசெ. 9

பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் மேற்கொண்ட ஆய்வின் படி, ஊவா மாகாண ஹல்துமுல்ல பிரதேசத்திலுள்ள பெண் தோட்டத் தாய்மார்களின் பாலில் கொடிய விஷங்களில் ஒன்றான 'பெரகொட்' இரசாயனம் கலந்திருந்தது என்று திடுக்கிடும் தகவல் ஒன்றை சுற்றாடல் மற்றும் மண்ணியல் ஆய்வாளரான கலாநிதி பி.ஐ.யாப்பா தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை மாலை சர்வதேச இரசாயன பீடைகொல்லி எதிர்ப்பு தினம் தொடர்பாக கண்டி அனிவத்தையிலுள்ள கெண்டியன் ரிக் ரீட் சுற்றுலா விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சப்ரகமுவ பல்கலைக்கழக விரிவுரையாளரும், ஆராய்ச்சி அதிகாரியும், பேராதனைப் பல்கலைக்கழக விவசாய கற்கை நெறிகளுக்கான விரிவுரையாளருமான கலாநிதி யாப்பா மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'பெரகொட்' என்ற இரசாயனப் பதார்த்தம் கொடிய நஞ்சாகும். இதனை உட்கொண்டால் மாற்று முறிவு கிடையாது. மரணமே இறுதி விளைவு. அதனைத் தயாரிக்கும் நாடுகளே அதன் பாவனைக்கு தடைவிதித்துள்ளன. இதன் தயாரிப்பு நிறுவனமான சின்ஜெண்டா நிறுவனத்தின் தலைமையகம் சுவிஸ் நாட்டில் உள்ளது. அங்கு பெரகொட் பீடைகொல்லி பாவிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

1964 இன் பின்னர் இலங்கையில் இரசாயனக் களைகொல்லிகள், பீடை கொல்லிகள், இரசாயனப் பசளை, இரசாயனக் கிருமிநாசனிகள் என்பன பாவனைக்கு வந்தன.

இதன் விளைவாக இந்த இரசாயனங்கள் மிகக் குறைந்த அளவில் தொடர்ச்சியாக எமது உடம்பில் சேகரிக்கப்பட்டு புற்று நோய், சிறுநீரக நோய், பாக்கின்சன் என்ற நரம்பு நோய், கண்வியாதி, தோல்வியாதி போன்ற பல நோய்களுக்குக் காரணமாக அமைகின்றன. இந்த கெரகொட் இரசாயனம் உணவில் சேர்வதன் காரணமாக வருடம் 5,000 பேர் இறக்கின்றனர். ஆனால் டெங்கு போன்ற நோய்களினால் வருடம் 350 பேரே இறந்துள்ளனர். எனவே டெங்கை விடக் கொடூரமானது இந்த 'பெரகொட்' இரசாயனம்.

பெரகொட் மண்ணுடன் சேர்ந்தால் எக் காரணம் கொண்டும் அது அழியமாட்டாது. மண்ணின் அகத்துறுஞ்சும் தன்மை, வடிதிறன் என்பன குறைகின்றன. இதனால் மண் பாதிப்படைகிறது.

எதிர்காலத்தில் இது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். இலங்கையில் மூன்று வருட இடைவெளியில் இதன் பாவனையை முற்றாக ஒழிப்பதாகக் கூறிய கால எல்லை முடிவடைந்த போதும் புதுப் புதுப் பெயர்களில் இது விதைந்துரைக்கப்பட்ட செறிவிலும் அதிகமானதாக திறந்த சந்தைக்கு வந்துள்ளது - இவ்வாறு யாப்பா தெரிவித்தார்.

# தொழிலாளர்களின் நலன்பேணும் ஷரத்துகள் கூட்டு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்

## ம. தொ. மு. பொதுச்செயலாளர் வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 9

தோட்ட நிர்வாகங்களினால் குற்றவாளிகளாக்கப்படும் தொழிலாளர்கள் மூன்று விதமான தண்டனைகளைப் பெற்று தமது வாழ்வை சீரழித்துக் கொள்ளும் நிலை துர்ப்பாக்கியமானது - என்று மலையக தொழிலாளர் முன்னணியின் பொதுச் செயலாளர் க.சுப்பிரமணியம் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

கூட்டு ஒப்பந்தம் சம்பளப் பிரச்சினையை மையப்படுத்தியே கையொப்பம் இடப்படுகின்றது. ஆனால், தொழிலாளி ஒருவர் நிர்வாகத்தினால் சுமத்தப்படும் குற்றங்களுக்காக மூன்றுக்கும் மேற்பட்ட தண்டனைகளை அனுபவித்து தனது தொழிலையும் இழக்கும் நிலையைத் தடுக்கும் ஷரத்துகள் இதில் கவனத்தில் எடுக்கப்படுவது இல்லை.

உதாரணமாக மரம் ஒன்றினை வெட்டினார் எனக் கூறப்படும் தொழிலாளிக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படுகின்றது.

நிர்வாகம் இவர்களை வேலையிலிருந்தும் நிறுத்தி விடுகின்றது. அது சம்பந்தமாக தொழில் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டால் மாவட்ட நீதிமன்றில் வழக்கு இருக்கும் நிலையில் இது பூரணமாகப் பயன் தருவதும் இல்லை. இதற்கும் மேலதிகமாக நிர்வாகம் நியமிக்கும் விசாரணை குழுவும் இவர்களை விசாரித்து தண்டனை வழங்கும்.

இக்காலப்பகுதிகளில் தமது தொழிலையும் இழந்து, தண்டப் பணமும் செலுத்தி, வழக்குகள் முடிந்ததும் அவர்கள் நிரந்தரமாக தொழிலை இழந்து வீதிக்கே வந்து விடுகின்றனர்.

எனவே,தொழிலாளர்களின் நலனுக்காக செய்யப்படுவதாகக் கூறப்படும் இந்த கூட்டு ஒப்பந்தத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படா[illegible]ல் இருப்பதற்கேற்ப சரத்துகள் இணைக்கப்பட வேண்டும் - இவ்வாறு சுப்பிரமணியம் குறிப்பிட்டுள்ளார். (எ)




# கண்டி, பதுளை, கேகாலை மாவட்டங்கள் எச்சரிக்கை வலயங்களாகப் பிரகடனம்

கண்டி, டிசெ. 9

பெய்துவரும் பெருமழை காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள கண்டி, பதுளை, கேகாலை மாவட்டங்கள் எச்சரிக்கை வலயங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன என தேசிய கட்டட நிர்மாண ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பதுளை மாவட்டத்தில் ஹல்துமுல்ல, மக்கொட, கஹாகல்ல, அப்புத்தளை, பண்டாரவளை ஆகிய பகுதிகளில் வெள்ள அரிப்பும், மண்சரிவுகளும் ஏற்படுவதற்கான வாய்ப்புண்டு. அவ்வாறே பெரகல வீதியிலும் மண்சரிவுகள் ஏற்படலாம் - என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் புவியியல் அதிகாரி திருமதி.குமாரி வீரசிங்க தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்தில் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மண்சரிவுகளும், பாறைகள் சரிவும் ஏற்பட்டுள்ளதுடன் மேலும் ஏற்படுவதற்கான அபாயம் நிலவுகின்றது. கண்டி, மகியங்கனை வீதியில் பாதைகள் தாழிறங்குவதற்கான அபாயம் உண்டு. மண் சரிவுகள் ஏற்படவும் கூடும்.

நுவரெலியா, கொண்டிஎல்ல பிரதேசத்தில் பாதுகாப்பற்ற பகுதிகளில் இருந்த 50 குடும்பங்கள் அப்புறப்படுத்தப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் குடியேற்றப்பட்டுள்ளன. புஸ்ஸ பகுதியிலும் வெள்ள அரிப்பு ஏற்படும் சாத்தியமுண்டு.

கேகாலை மாவட்டத்தில் தெரணியகல மற்றும் புளத்கொஹூபிட்டிய பகுதிகளும் அபாயகரமான பகுதிகளாக இனம் காணப்பட்டுள்ளன.

இதற்கிடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வரை மாத்தளை மாவட்டத்தில் பத்து வீடுகள் நீரில் மூழ்கி சேதமாகியுள்ளன. தம்புள்ள நகரில் இரண்டடி உயரத்துக்கு வெள்ளம் பாய்கிறது - என அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா?

* உலகில் தட்டையான , சமதளமான நாடு - மாலைதீவு
* உலக மக்கள் அமைதியாக வாழ்வதற்கு உகந்த நாடு - நோர்வே
* உலகில் அதிக மக்களால் தயாரித்துச் சாப்பிடப்படும் உணவு - நூடில்ஸ்
* கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டையை அறிமுகம் செய்த நாடு - நோர்வே
* ஒரு நாட்டின் பரப்பளவுக்குள் அமைந்து இருக்கும் இன்னுமொரு நாடு - லெசதோ ( ஆபிரிக்கா )
* ஒரே நாடாக இருக்கும் கண்டம் - அவுஸ்திரேலியா
* பழைமை வாய்ந்த செய்தி நிறுவனம் - ரொயிட்டர்
* தனக்கென்று தாய் மொழி இல்லாத நாடு - சுவிட்சர்லாந்து
* பத்திரிகை வெளிவராத நாடு - திபெத்
* ஒரு போதும் மலராத பூ - அத்திப்பூ

## நாய்தான் நமக்குச் சீனியர்



அழகுப் போட்டியில் நமக்கு முன்னோடியாக விளங்குவது நாய்தான்.

முதல் முதல் அழகுப் போட்டி நாய்களுக்கிடையில் 1859ஆம் ஆண்டு பிரிட்டனில் நடைபெற்றது.அதற்குப் பிறகு 29 ஆண்டுகள் கழித்துத்தான் மனிதர்களுக்கிடையிலான அழகுப் போட்டி பற்றிய எண்ணம் யாருக்கோ வந்தது.

முதல் முதலாக மனிதர்களுக்கிடையிலான அழகுப் போட்டி 1888 இல் பெல்ஜியத்தில் நடைபெற்றது.

# வாழ்க இராமர்! வாழ்க சீதை!

ஒரு கோயிலுக்குள் இரண்டு திருடர்கள், பூட்டை உடைத்துச் சாமி சிலைகளைத் திருடிக் கொண்டு இருந்தார்கள்.

அந்த வழியே சென்ற பரமார்த்தரும் சீடர்களும் அதைக் கண்டனர்.

''ஐயா! யார் நீங்கள்? ஏன் இந்தச் சிலைகளை எடுக்கிறீர்கள்?'' என்று பணிவுடன் கேட்டார் பரமார்த்தர்.

குருவையும் சீடர்களையும் கண்ட திருடர்கள் முதலில் சற்றுப் பயந்தார்கள். பிறகு சமாளித்துக் கொண்டு, ''நாங்கள் வெளியூரில் இருந்து வருகிறோம். இங்கே உள்ள சிலைகளை எல்லாம் அங்கே கொண்டு போகப் போகிறோம்'' என்றனர்.

''வெளியூருக்கா? ஏன்?'' என்று கேட்டான் மட்டி.

''இந்தச் சிலைகள் இங்கேயே இருப்பதால் என்ன பயன்? வெளியூருக்குப் போனால்தான் அங்கிருக்கும் மக்களும் பார்ப்பார்கள். அப்போதுதான் உங்கள் ஊரின் பெருமை மற்ற ஊருக்கும் தெரியும்'' என்றான், திருடரில் ஒருவன்.

''ஆழ்வார்கள், நாயன்மார்கள் செய்த தொண்டைவிட, நீங்கள் செய்யும் தொண்டுதான் பெரியது. உங்கள் பக்தியை மெச்சுகிறோம்'' என்று பாராட்டினார், பரமார்த்தர்.

ஆனால், மட்டிக்கு மட்டும் கொஞ்சம் சந்தேகமாக இருந்தது. ''இதை நீங்கள் திருடிக் கொண்டு போகிறீர்கள்'' என்றான்.



அதைக் கேட்ட திருடர்கள், ''சே, சே! திருடுவதாய் இருந்தால் யாருக்கும் தெரியாமல் அல்லவா திருட வேண்டும்? உங்களுக்குத் தெரிந்துதானே எடுத்துக் கொண்டு போகிறோம்? இது எப்படித் திருடுவது ஆகும்?'' என்று கேட்டனர்.

(தொடரும்..)

## ஆட்டுக்குட்டி

ஆட்டுக்குட்டி நல்ல ஆட்டுக்குட்டி
அழகான ஆட்டுக்குட்டி
துள்ளித் திரியும் ஆட்டுக்குட்டி
இலைதளைகள் தின்னும்குட்டி

சின்னச் சின்ன கால்களாலே
குதித்தோடும் ஆட்டுக்குட்டி
பயமரியாச் சின்னக்குட்டி
சிறுசேட்டை செய்யும் குட்டி.

எங்கஊரு மலைக்கு
தினம் சென்று வரும்
முள்மீதும் தாவியேறி
சிறு இலையை கடித்துத் தின்னும்
குளம் தேடி ஓடிச்சென்று
நன்நீரைப் பருகிவரும்
நிழல் பார்த்து சாய்ந்துகொண்டு
மெல்லமாய் அசைபோடும்

அம்மாவை தவிக்கவிட்டே
சிலநேரம் மறைந்து கொள்ளும்
அண்டைவீட்டுப்
பிள்ளைகளை
ஓட்டம்
காட்டி
தளரவைக்கும்
மேய்ச்சலுக்கு
செல்கையிலே
நரியினை கண்டு
விட்டால்
மேய்ப்பனிடம்
வந்து விடும்
ஆபத்தை
வென்றுவிடும்







## பிரசித்திபெற்ற இடங்கள்

சிங்கராஜவனம்

அமைவிடம் : சப்ரகமுவ மற்றும் தென் மாகாணத்தில் அமைந்துள்ள சிங்கராஜவனம் இலங்கையின் தென் மேற்குப்பகுதியில் காணப்படுகிறது. நாட்டின் கடைசி எல்லை வரை உல்லாசப் பிரயாணிகள் உட்புகக் கூடியதாக அமைந்துள்ள பிரதான உஷ்ணவலய மழைக் காடாகும். இங்கு காணப்படும் மரங்களில் 60 வீதமானவை மிகவும் அரிதாகக் காணப்படும் இனங்களாகும். இக்காடுகளில் ஏராளமான பறவை இனங்கள், பாலூட்டும் மிருகங்கள், பூச்சிவகைகள், ஊர்வன ஆகியன உள்ளன.

# அறிவுக் களஞ்சியம்

## இரத்தம் பற்றிய சில தகவல்கள்

**இரத்தத்தின் நிறம் ஏன் சிவப்பாக உள்ளது?**

இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களின் உள்ளே ஹீமோகுளோபின் என்ற வேதிப் பொருள் உள்ளது. இந்த வேதிப் பொருள் தான் ரத்தத்துக்கு சிவப்பு நிறத்தைக் கொடுக்கிறது. ஹீமோகுளோபின்தான் உடலில் உள்ள அனைத்துச் செல்களுக்கும் ஒட்சிசனை எடுத்துச் செல்கிறது.

இரத்தத்தில் ஹீமோகுளோபின் எண்ணிக்கை குறைந்தால் ரத்த சோகை நோய் ஏற்படும். ரத்த சோகை, ரத்த இழப்பு ஏற்படும்போது ரத்த சிவப்பு அணுக்களைச் செலுத்துவார்கள்.

**இரத்த சிவப்பு அணுக்களின் எண்ணிக்கை எவ்வளவு?**

ஒரு சொட்டு இரத்தத்தில் 55 லட்சம் இரத்த சிவப்பு அணுக்கள் இருக்கும். அதாவது சென்னையின் மக்கள் தொகைக்கு ஏறக்குறைய இணையான அளவுக்கு இருக்கும்.

**இரத்த சிவப்பு அணுக்கள் உற்பத்தியாகும் இடம் எது?**


எலும்புகளுக்கு நடுவில் வெற்றிடம் இருக்கும். இந்த வெற்றிடத்தைச் சுற்றி எலும்பு மஜ்ஜை இருக்கும். எலும்பு மஜ்ஜையில் இரத்த சிவப்பு அணுக்கள், வெள்ளை அணுக்கள், பிளேட்லட்டுகள் உற்பத்தியாகின்றன.

**இரத்த சிவப்பு அணுக்களின் ஆயுள் எவ்வளவு?**

ரத்தச் சிவப்பு அணுக்களின் ஆயுள் நான்கு மாதங்கள். இரத்தச் சிவப்பு அணுக்களின் முக்கிய வேதிப் பொருளான ஹீமோகுளோபன் உற்பத்திக்கு இரும்புச் சத்துத் தேவை. கீரைகள், முட்டைக் கோஸ், முட்டை, இறைச்சி ஆகியவற்றில் இரும்புச் சத்து அதிகம். இவற்றை உணவில் தினமும் சேர்த்துக் கொண்டால் இரத்த சோகை வராது.

(தொடரும்)

## சுறாமீன்...



* கடலில் சுறா தோன்றி 40 கோடி ஆண்டுகள் ஆகின்றன.
* சுறா மீனில் 350 இனங்கள் உள்ளன.
* சுறா மீனுக்குப் புற்று நோய் வருவதில்லை.
* எவ்வளவு பெரிய காயம் ஏற்பட்டாலும் சுறா மீனுக்கு சீழ் பிடிப்பதில்லை.
* கறுப்பு ஆடை அணிந்து குளிப்பவர்களை சுறாமீன் தாக்குவதில்லை.

## தென்னைமரம்



* தென்னை மரத்திற்கு 100 ஆண்டு காலம் ஆயுள் என்றாலும், 80 ஆண்டுகளுக்கு மேல் பலன் தராது.
* தென்னை உஷ்ண மண்டல பயிர். அதனால் குளிர் பிரதேசங்களில் விளையாது.
* இலங்கை, மலேசியா, சுமத்திரா (இந்தோனேஷியா), கிழக்கிந்தியத் தீவுகள் ஆகிய பகுதிகளில் தென்னை மரம் அதிகளவில் வளர்க்கப்படுகிறது.
* சிறுநீரகம் சம்பந்தமான நோய்களையும், மஞ்சள் காமாலையையும் தடுக்க வல்லது இளநீர்.
* அந்தமான், நிக்கோபார் தீவில் தென்னை முக்கியப் பயிராக சாகுபடி செய்யப்படுகிறது.

## திறமையின் வெளிப்பாடு...





வெற்றிப் பரிசு: பாலர் கல்விக் கழகத்தின்கீழ் இயங்கும் ஞானக்குழந்தை பாலகர்களின் வருடாந்த கலை விழாவின் போது ஆங்கில அபிநயப் பாடத்தில் [illegible] பாடத்தில் முதலாம் இடத்தையும் பெற்ற மாணவர்களுக்கு [illegible] யாழ்.நல்லூர் ஞானோதய பாடசாலை ஆசிரியர் சதீஸ் ஆகியோர் பரிசில் வழங்குகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழமொழிகள்

அணில் கொப்பிலும், ஆமை கிணற்றிலும்.
அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
அந்தி மழை அழுதாலும் விடாது.
அப்பன் அருமை மாண்டால் தெரியும்.
அப்பியாச வித்தைக்கு அழிவில்லை.
அயலூரானுக்கு ஆற்றோரம் பயம், உள்ளூரானுக்கு மரத்தடியில் பயம்.
அரசன் இல்லாத நாடு அச்சில்லாத தேர்.
அருமையற்ற வீட்டில் எருமையும் குடியிருக்காது.
அழிந்த கொல்லையில் குதிரை மேய்ந்தாலென்ன, கழுதை மேய்ந்தாலென்ன?
அழுகிற ஆணையும், சிரிக்கிற பெண்ணையும் நம்பக்கூடாது.

# 'நாடு கடத்தும்' வழக்கை எதிர்த்து 'விக்கிலீக்ஸ்' நிறுவுநர் போராடுவார்

## அவரது சட்டத்தரணிகள் தெரிவிப்பு



லண்டன், டிச. 09

'விக்கிலீக்ஸ்' இணையதள நிறுவுநர் ஜூலியன் அசேஞ்ச் (வயது - 39) செவ்வாய்க்கிழமை ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸாரிடம் சரணடைந்தார்.

பின்னர் அவர் கைது செய்யப்பட்டார். ஸ்வீடன் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் குறிப்பிடப்பட்ட, 'நாடு கடத்தும்' வழக்கை எதிர்த்து, அசேஞ்ச் சட்டரீதியாக போராடுவார் என அவரது சட்டத் தரணிகள் தெரிவித்துள்ளனர்.

அவர் மீதான பாலியல் வழக்குகள் குறித்து அவரிடம் ஸ்வீடன் அதிகாரிகள் விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதன் பேரில், அவர் சரணடைந்தார் என ஸ்கொட்லண்ட் பொலிஸார் தெரிவித்தனர். பின்னர் அவர் கைது செய்யப்பட்டார்.

'விக்கிலீக்ஸ்' இணையதள நிறுவுநர் ஜூலியன் அசேஞ்ச் மீது, இந்தாண்டின் ஆரம்பத்தில், ஸ்வீடனைச் சேர்ந்த இரு பெண்கள், தங்களை அவர் பாலியல் பலாத்காரம் செய்தார் என வழக்குத் தொடுத்தனர்.

இக்குற்றச்சாட்டை மறுத்த அசேஞ்ச், அவர்கள் தன்னுடன் உடன்பட்டு உறவு வைத்துக் கொண்டனர் என விளக்கம் அளித்தார்.

இதையடுத்து, 'விக்கிலீக்ஸ்' இணையத் தளம், அமெரிக்கப் படைகளும், பிரிட்டன் படைகளும் ஈராக்கிலும், ஆப்கனிலும் நடத்திய போர் அட்டூழியம் குறித்த ஐந்து இலட்சம் இரகசிய ஆவணங்களை வெளியிட்டது.

அதன் பின்னர் சமீபத்தில் அமெரிக்க வெளியுறவு தொடர்பான இரண்டரை இலட்சத்துக்கும் அதிகமான இரகசிய ஆவணங்களை வெளியிட்டது. இதனால் அமெரிக்காவுக்கும், அதன் கூட்டணி, நட்பு நாடு ஆகியவற்றுக்கும் பலவிதங்களில் நெருக்கடி ஏற்பட்டது.

இந்நிலையில், கடந்த மாதம், ஸ்வீடன் நீதிமன்றம் ஒன்று, அசேஞ்ச் மீது இருபெண்கள் தொடுத்த பாலியல் வழக்கில், அவரை கைதுசெய்ய உத்தர விட்டது.

இதையடுத்து, 'இன்டர்போல்' பொலிஸ் இணையதளத்தில் அவரைத் தேடும் உத்தரவு வெளியிடப்பட்டது. நீதிமன்றத்தின் இந்த உத்தரவு, அமெரிக்க அரசின் நெருக்கடியின் பேரிலேயே எடுக்கப்பட்டது என அசேஞ்சின் சட்டத்தரணிகள் கூறிவந்தனர்.

அவர் பிரிட்டன் ஸ்காட்லாந்து யார்ட் பொலிஸாரிடம் சரணடைவார் என செய்திகள் தெரிவித்தன.

இந்நிலையில், ''ஸ்வீடன் அதிகாரிகள், பாலியல் வழக்கு தொடர்பாக அவரிடம் விசாரிக்க வேண்டும் என விடுத்த கோரிக்கையை ஏற்று, அவர் செவ்வாய்க்கிழமை காலை சரணடைந்தார். அவர் மீது இரண்டு பாலியல் பலாத்காரம், ஒரு கற்பழிப்பு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன'' என ஸ்கொட்லாந்து யார்ட் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் அவர் கைது செய்யப்பட்டார். ஸ்வீடன் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் குறிப்பிடப்பட்ட, 'நாடு கடத்தும்' வழக்கை எதிர்த்து, அசேஞ்ச் சட்டரீதியாக போராடுவார் என அவரது சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

இன்று ஸ்வீடனுக்கு அவர் நாடு கடத்தப்பட்டால், அமெரிக்க இரகசியங்களை வெளியிட்டதற்காக பல்வேறு குற்றச்சாட்டுகளை சுமத்தி அவரை எளிதில் அமெரிக்காவுக்கு நாடு கடத்திவிட முடியும் என்பதால், அவர் அதை எதிர்த்துப் போராட வேண்டியுள்ளது என அவர்கள் கூறினர்.

இதுகுறித்து அவரது சட்டத்தரணி மார்க் ஸ்டீபன்ஸ் கூறுகையில், "அவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை. அவர் மீதான நாடு கடத்தல் வழக்கு இன்னும் 28 நாள்களுக்குள் விசாரிக்கப்படும்'' என்றார்.

ஆகவே, 'விக்கிலீக்ஸ்' விவகாரத்தில் அவர் எப்போது கைதாகி விசாரிக்கப்படுவார் என்பது இனித்தான் தெரியும்.

* கடந்த 1971, ஜூலை மாதம் ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாண்ட் மாகாணத்தின் டவுன்ஸ்வில்லே என்ற ஊரில் பிறந்தார். இவரது பெற்றோர், திரையரங்கம் ஒன்றை நடத்தினர். அதோடு, நாடு சுற்றுவதில் அவர்களுக்குத் தீராத ஆசை இருந்தது.

* வளரிளம் பருவத்தில் இவர் 'கம்ப்யூட்டர் புரோகிராம்' வடிவமைப்பதில் தேறினார்.

* இணையதளத்தில் புகுந்து தகவல்களைத் திருடியதாக, 1995இல் கைது செய்யப்பட்டார். அபராதம் கட்டிய பின் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

* மெல்போர்ன் பல்கலைக்கழகத்தில் தனது 20ஆவது வயதில் கணிதம், இயற்பியல் ஆகியவற்றைக் கற்றார்.

* இவர் நிரந்தரமாக ஓரிடத்தில் தங்கியதாக சரித்திரம் இல்லை. ஐஸ்லாந்தில் இருந்து கென்யா வரை இவர் தங்காத நாடே இல்லை.

* தனது பல நடவடிக்கைகளை இவர் மிக மிக இரகசியமாகவே வைத்துக் கொள்வார். எப்போதும் பல கையடக்கத் தொலைபேசிகளுடன் தான் திரிவார்.

* கடந்த 2006இல் 'விக்கிலீக்ஸ்' இணையதளத்தை ஆரம்பித்தார்.

* 'விக்கி லீக்ஸ்' இணையதளத்தில் ஐந்து முழுநேர ஊழியர்களும், பல தன்னார்வ ஊழியர்களும், 800 பகுதிநேர தன்னார்வ ஊழியர்களும் பணியாற்றி வருகின்றனர்.

* ''விக்கிலீக்ஸ்' ஒரு போதும் சமரசம் செய்துகொள்ளாது. புலனாய்வுப் பத்திரிகையில் இன்னும் நிரப்பப்படாமலே உள்ளது. அந்த இடத்தை 'விக்கிலீக்ஸ்' நிரப்பும்'' என்று அடிக்கடி கூறுவார்.

* 'ட்விட்டர்', 'பேஸ்புக்' ஆகிய சமூக வலைத்தளங்களில் எழுதுவார்.

* 'விக்கிலீக்ஸ்' இணையதளத்திற்கு உலகம் முழுவதும் ஆதரவாளர்கள் அதிகம் என்று கூறப்பட்டது.

# றொக்கெட் தாக்குதலில் இருந்து பாக். தளபதி உயிர் தப்பினார்

இஸ்லாமாபாத், டிசெ.9

பாகிஸ்தான் இராணுவத் தளபதி கயானி மீது, தலிபான் தீவிரவாதிகள் றொக்கெட் தாக்குதல் நடத்தியதில், அவர் அதிர்ஷ்ட வசமாக உயிர் தப்பினார்.

பாகிஸ்தான் தலைமை இராணுவத் தளபதியாக இருப்பவர் அஷ்பக் பெர் வேஸ் கயானி. பழங்குடியினர் அதிகம் வசிக்கும் தெற்கு வசிரிஸ்தானிலுள்ள லாதா என்ற இடத்தில் இவர் திங்கட்கிழமை பயணம் மேற்கொண்டார்.

இதைத் தெரிந்துகொண்ட தலிபான் தீவிரவாதிகள், கயானி இருந்த இடத்தை நோக்கி நான்கு றொக்கெட்டுகளை ஏவி தாக்குதல் நடத்தினர். உஷாரடைந்த இராணுவத்தினர், கயானியை பதுங்கு குழிக்குள் இருக்கச் செய்து காப்பாற்றினர்.

இதன் மூலம் அவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். இராணுவத்தினர், தலி பான்களை நோக்கி பதிலடித் தாக்குதல் நடத்தினர்.

# ஆப்கானிலிருந்து 2011 இல் படை வாபஸ் என்கிறது பிரி.

லண்டன்,டிசெ.9

ஆப்கானிஸ்தானிலிருந்து பிரிட்டிஷ் இராணுவத்தை வாபஸ் பெறும் நடவடிக்கை 2011இல் தொடங்கும் என்று அந்நாட்டு பிரதமர் டேவிட் கெமரூன் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானிலிருந்து படையை வாபஸ் பெறும் நடவடிக்கை 2011இல் ஆரம்பமாகும். 2014 இல் படை முற்றிலும் வாபஸ் பெறப்படும் என்று அமெரிக்கா ஏற்கனவே அறிவித்துவிட்டது. இந்நிலையில் படையை வாபஸ் பெறப்போவதாக பிரிட்டனும் கூறியுள்ளது.

லண்டனிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் இருந்து செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் டேவிட் கெமரூன் இதைத் தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் அவர் மேலும் கூறி யிருப்பவை வருமாறு:-

நான் ஆப்கானிஸ்தானில் பயணம் மேற்கொண்டுள்ளேன். இங்கு நல்ல பாது காப்பு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை காண முடிகிறது. இங்கு முகாமிட்டுள்ள பிரிட்டிஷ்இராணுவ அதிகாரிகளை சந்தித்துப் பேசினேன். அப்போது, படையை வாபஸ் பெறுவதற்கான நடவடிக் கையை 2011இல் இருந்து ஆரம்பிக்க லாம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

ஆப்கானிஸ்தானை அந்நாட்டு பாது காப்புப் படைச் சிப்பாய்களே பாதுகாத்துக் கொள்ளும் நிலைமை உருவாகியுள்ளது. இன்னும் சில மாதங்களில் அவர்கள் தங்களது நாட்டை தாங்களே பாதுகாத்துக் கொள்வதற்கான முழுத் திறமையையும், நம்பிக்கையையும் பெற்றிடுவார்கள்.

இதனால் ஆப்கானிஸ்தானிலிருந்து 2011 இல் படையை வாபஸ் பெறத் தொடங்கி விடலாம் என்ற நம்பிக்கை உள் ளது என்று கெமரூன் தெரிவித்துள்ளார்.

## உலக அரங்கில்

# சீனப் பிரதமர் ஜியாபோ இந்தியா, பாக். விஜயம்

பீஜிங்,டிசெ.9

சீனப் பிரதமர் வென் ஜியாபோ, அடுத்த வாரம் புதுடில்லிக்கு வரவுள்ளார்.

சீனப் பிரதமர் தமது சுற்றுப்பயணத்தை 15 ஆம் திகதியில் தொடங்கி இந்தியாவில் 3 நாள்களும் அதுபோல பாகிஸ்தானில் 3 நாள்களும் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இது குறித்து அந்நாட்டு வெளியுறவு அமைச்சகம், இந்தியாவுடன் முக்கிய மற்றும் உயர்மட்ட வர்த்தக உறவு வைத்துகொள்ளவே சீனா விரும்புகிறது எனத் தெரிவித்துள்ளது.

# நோபல் பரிசு வழங்கும் விழாவை சீனாவுடன் 18 நாடுகள் புறக்கணிப்பு

ஆல்லோ,டிசெ.9

இந்த ஆண்டுக்கான நோபல் பரிசு சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. சமாதான பரிசு சீனாவைச் சேர்ந்த லியூ ஷியாபோ (வயது - 54) என்பவருக்கு அறிவிக்கப்பட்டது.

சீன அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தியதமைக்காக இவருக்கு 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. தற்போது அவர் சிறையில் உள்ளனர்.

சீனாவுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்ட அவருக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கியதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அதை வாபஸ் பெற வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

ஆனால் அதை [illegible] ஏற்கவில்லை. இந்த நிலையில் நோபல் பரிசு வழங்கும் விழா எதிர்வரும் 10ஆம் திகதி ஆல்லோ நகரில் நடைபெறுகிறது. இதில் பங்கேற்கும்படி சீனா உட்பட 65 நாடுகளுக்கு தூதரகங்கள் மூலம் அழைப்பிதழ் அனுப்பப்பட்டது.

ஆனால் சீனாவும், அதன் நட்பு நாடுகளான பாகிஸ்தான், வெனிசுலா, கியூபா, பக்கத்து நாடுகளான ரஷ்யா, பிலிப்பைன்ஸ், கஜகஸ்தான், சீனாவின் வர்த்தக உறவு நாடுகளான சவூதி அரேபியா, ஈரான் ஆகிய நாடுகள் ஏற்கவில்லை. அழைப்பிதழை திருப்பி அனுப்பின.

மேலும், உக்ரைன், கொலம்பியா, எகிப்து, சூடான், ஆப்கானிஸ்தான் - செர்பியா, துனிசியா, ஈராக், வியட்நாம், [illegible]ளிட்ட 18 நாடுகள் இந்த விழாவில் பங்கேற்க முடியாது என அறிவித்துவிட்டன.

அழைப்பிதழ் அனுப்பப்பட்ட 65 நாடுகளில் 44 நாடுகள் நோபல் பரிசு குழுவின் அழைப்பை ஏற்றுக்கொண்டன. இதற்கிடையே விழாவில் பங்கேற்க மறுப்பது ஏன் என சீனா விளக்கம் அளித்துள்ளது.

இது தொடர்பாக சீன வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ஷியாங் யூ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் சீனாவுக்கு எதிரான நடவடிக்கையில் சில கோமாளிகள் இறங்கியுள்ளனர். அவர்களுக்காக எங்கள் பாதையை நாங்கள் மாற்றிக்கொள்ள முடியாது என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர்

## O/L மாவட்ட வலம்

கல்வி உலகின் ஊடக முன்னோடி உதயன்

நன்றிக்குரிய ஆசிரியர்
கே.கே.ஈஸ்வரன்
நாவற்குழி மகா வித்தியாலயம்
யாழ்ப்பாணம்
தொ.பே: 075-0392026

தமிழ்மொழி
22 - T

முற்றுமுழுதான எதிர்பார்ப்பு வினாக்களுடன் யாழ் பிரபல ஆசிரியர்களின்

முன்னோடி வெளியீடு - 05


## தமிழ்மொழியும் இலக்கியமும் I — 1 மணித்தியாலம்

* பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01. ''பதுமத்தான் புவியிற்றான் பண்ணினானே'' என்பதில் ''பதுமம்'' என்பதன் பொருள்,
 1) கண். 2) முல்லை. 3) நீலோற்பலம். 4) கமலம்.

02. ''ஊர்நலம் உள்ளானால் உள்ளப்படும்.'' இதில் உள்ளான் என்பதாற் குறிப்பிடப்படுபவர்,
 1) நண்பர்கள். 2) தேர்ப்பாகன்.
 3) ஊரிலுள்ள அரசன். 4) ஊர் மக்கள்.

03. ''கன்னலும் தேனும் கனியுமின் பாலும்'' என்பதில் கன்னல் என்பதன் ஒத்த கருத்து,
 1) தேன். 2) கரும்பு. 3) பழம். 4) பால்.

04. ''அம்பொன்று வில்லொடித்தல் நாண் அறுதல் நான் கிழவன்...'' இதில் கிழவன் என்பதன் எதிர்ப்பொருட் சொல்,
 1) கிழவி. 2) இளைஞன். 3) விருத்தர். 4) மூத்தோன்.

05. ''திருத்தக்கவை யக மெல்லாம் எமதென்றெழுதுமே'' என்பதில் வையகம் என்பதன் எதிர்ச் சொல்,
 1) வானகம். 2) பாதாளம். 3) பூலோகம். 4) குவலயம்.

* பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

06. ''கோவம் பசியை ஆத்தாது....'' இதில் கோவம் என்பது எந்தக் கிளைமொழிச் சொல்?
 1) கிழக்கு. 2) தெற்கு. 3) வடக்கு. 4) மலையகம்.

07. செமினார் (Seminar) என்பதன் தமிழ்ச்சொல்,
 1) கட்டுரை. 2) விவாதம். 3) பட்டிமண்டபம். 4) கருத்தரங்கு.

08. சிங்கத்தின் ஆண்பால் மரபுப் பெயர்,
 1) களிறு. 2) ஏறு. 3) கடுவன். 4) போத்து.

09. யானை பிளிறும். தேனீ ,
 1) இரையும். 2) ரீங்காரமிடும். 3) சீறும். 4) கரையும்.

10. பின்வருவனவற்றில் ஆங்கிலமொழிச் சொல் அல்லாதது,
 1) கலண்டர். 2) வோட்டு. 3) சீமெந்து. 4) ஏலம்.

11. சிங்கம், வண்டு, திருமால் எனப் பல பொருள் தரும் ஒரு சொல்,
 1) அளி. 2) கடி. 3) அரி. 4) பதி.

12. ஏமாற்றுதல் என்ற பொருள் தரும் அருஞ்சொற்றொடர்,
 1) ஒல்காப்புகழ். 2) நுண்மாண் நுழைபுலம்.
 3) ஊணுறக்கம் இல்லாமல். 4) ஆசைகாட்டி மோசஞ்செய்து.

13. ''அணிகொண்ட குரங்கினங்கள் அலை கடலுக்கப்பாலை மணலொன்று காணாமல் வரையெடுத்து மயங்கினவே.'' இதில் வந்த அணி,
 1) உவமை. 2) தன்மை நவிற்சி.
 3) உயர்வு நவிற்சி. 4) சிலேடை.

14. பெயராயும், வினையாயும் வழங்க முடியாத சொல்,
 1) அரி. 2) அவி. 3) விழு. 4) ஒளி.

15. அலகு, அழகு, அளகு என்பன முறையே தரும் பொருள்,
 1) அளவு, கவின், பெண்மயில். 2) பெண்மயில், கவின், அளவு.
 3) கவின், அளவு, பெண்மயில். 4) அளவு, பெண்மயில், கவின்.

16. முதலைக்கண்ணீா விடுதல் என்னும் மரபுத்தொடரின் கருத்து,
 1) வருந்துதல். 2) வருத்துதல்.
 3) பொய் இரக்கம். 4) ஏமாற்றுக்காரன்.

17. 'மகப்பேறு' என்ற பொருளில் வரும் மரபுத்தொடர்,
 1) வயிறுகடித்தல். 2) வயிறுவாய்த்தல்.
 3) வயிறு கழுவுதல். 4) கண்விடல்.

18. ஒன்றுக்கொன்று தொடர்புள்ள இரு சொற்கள் இணைந்துவரும் இணைமொழி,
 1) கீழ்மேல். 2) காடுமேடு. 3) கரடுமுரடு. 4) ஆற அமர.

19. சிந்திக்காமல் செயற்படல் என்ற பொருளைத் தரக்கூடிய உவமைத்தொடர்,
 1) ஏவற்பேய் கூரையைப் பிடுங்கியது போல.
 2) ஏழைசொல் அம்பலம் ஏறாமை போல.
 3) வலையிற்சிக்கிய மான் போல.
 4) அம்மி துணையாக ஆற்றில் இறங்கியது போல.

20. உத்தம நட்பு எனும் பொருளில் வரும் பழமொழி,
 1) அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
 2) அடம்பன கொடியும் திரண்டால் மிடுக்கு.
 3) அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.
 4) அடிநாக்கில் நஞ்சும் நுனிநாக்கில் அமிர்தமும்.

* பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

21. பொதுப்பெயராக அமைவது,
 1) சிங்கம். 2) பலா. 3) வேம்பு. 4) மிருகம்.

22. சந்தியக்கரமாவது,
 1) ஓ-ஔ. 2) ஐ, ஔ. 3) இ, உ. 4) ஊ, ஔ.

23. கூட்டு வினையாவது,
 1) நின்றேன். 2) சரிபார். 3) தாருங்கள். 4) தருக.

24. பொருள் தரும் வகையில் பிரிபடாச்சொல்,
 1) பகுபதம். 2) பகாப்பதம்.
 3) தனிப்பதம். 4) பெயர்ப்பகுபதம்.

25. பெயரிடைநிலை பெற்றுவந்த சொல்,
 1) ஆடுவாள். 2) கற்றான். 3) போனேன். 4) கலைஞன்.

26. மங்கல வழக்காவது,
 1) காராடு. 2) இறந்தார். 3) நச்சுப்பாம்பு. 4) வெள்ளாடு.

27. சரியாக நிறுத்தற்குறி இடப்பட்டது,
 1) ''இங்கே வாடி லெட்சுமி எங்கிட்டே நிறைதாரேன்''
 2) ''இங்கே வாடி லெட்சுமி, எங்கிட்டே நிறைதாரேன்''
 3) ''இங்கே வாடி, லெட்சுமி, எங்கிட்டே, நிறைதாரேன்''
 4) ''இங்கே வாடி லெட்சுமி! எங்கிட்டே நிறைதாரேன்''

28. மேகம் கறுத்தது; மழை கொட்டியது; வெள்ளம் பாய்ந்தது. இது,
 1) கலப்பு வாக்கியம். 2) தனி வாக்கியம்.
 3) கூட்டு வாக்கியம். 4) செப்பு வாக்கியம்.

29. வினைத்தொகையாவது,
 1) கருத்தரங்கு. 2) இராப்பகல். 3) வருபுகழ். 4) பவளவாய்.

30. மகனோ மகளோ என்பதில் ஓகாரம் தரும் பொருள்,
 1) ஒழியிசை. 2) எதிர்மறை. 3) வினா. 4) கழிவிரக்கம்.

* பின்வரும் பந்திகளின் பிரதான கருத்தைத் தெரிவுசெய்க.

31. எழுதப்படும் கட்டுரை எவ்வாறு அமையவேண்டும் என்பதை முன்கூட்டியே தீர்மானிப்பது திட்டமிடல் எனப்படும். இதன் அடிப்படையிலேயே கட்டுரைக்கான சட்டகம் தயாரிக்கப் படுகின்றது. திட்டமிடல் பல்வேறு செயற்பாடுகளைக் கொண்டது.
 1) கட்டுரை எவ்வாறு எழுதுதல் வேண்டும். 2) கட்டுரை [illegible]
 3) கட்டுரைச் சட்டகம் எழுதுதல். 4) கட்டுரையை வடிவமைத்தல்.

32. அழகுணர்ச்சிக்கு விருந்தாக உள்ளது கலையாகும். ஆனால், இயற்கையிற்காணும் வானம், கடல், மலை, ஆறு, சோலை, அருவி முதலியனவெல்லாம் கலையாகமாட்டா. இவற்றையே கைத்திறம் படைத்த ஒருவன் படமாக வரைந்துகாட்டினால் அது கலையாகும்.
 1) அழகுணர்ச்சிக்கு விருந்தளிப்பது கலையாகும்.
 2) இயற்கையில் காணும் வானம், கடல் முதலியன கலையாகும்.
 3) இயற்கைப் பொருட்களை வரைந்துகாட்டுவது கலையாகா.
 4) இயற்கைப் பொருட்களைக் கைத்திறம்படைத்த ஒருவன் படமாக வரைந்தால் அது கலை ஆகும்.

* பின்வரும் வினாக்களில் உள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப்பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.

33. அப்துல்கலாமினால் அக்கினிச் சிறகுகள் என்ற நூல்
 1) இயற்றுவிக்கப்பட்டது. 2) இயற்றப்பட்டது.
 3) இயற்றினார். 4) இயற்றியது.

34. புயற்காற்றினால் வீடுகள் பல
 1) இடிந்தது. 2) இடியும். 3) இடிந்தன. 4) இடிபட்டது.

35. ஆண்மகனோ பெண்மகளோ அங்கே
 1) வருகின்றவன். 2) வருகின்றவள்.
 3) வருகின்றவர். 4) வருகின்றது.

36. சரியாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்வரிசை,
 1) கலாச்சாரம், நாகரீகம், நடாத்தப்பட்டது.
 2) கலைச்சாரம், நாகரீகம், நடாத்தப்பட்டது.
 3) கலாசாரம், நாகரிகம், நடத்தப்பட்டது.
 4) பிரச்சாரம், காச்சல், சிரார்த்தம்.

* பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

37. ஒருவருக்குரிய நிலம் முதலிய சொத்துகள் .......................... எனப்படும்.
 1) ஆதாயம். 2) சீதனம். 3) சொத்து. 4) ஆதனம்.

38. எல்லோருடைய ............................ அவன்பக்கம் திரும்பின.
 1) கண்கள். 2) கண்ணும். 3) கண்ணே. 4) கண்களும்.

39. ஐ.நா.சபை ஒக்டோபர் முதலாம் திகதியை சர்வதேச சிறுவர் தினமாக .............................. செய்துள்ளது.
 1) அறிமுகம். 2) பிரகடனம். 3) விளம்பரம். 4) தீர்மானம்.

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தி ஒன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்கு மிகப்பொருத்தமான வைப்புமுறையைத் தெரிவுசெய்க.
 அ. ஹிஜ்ரி 1052ஆம் வருடம் பிறந்த இவர் அறுபத்துமூன்று ஆண்டுகள் உலகில் வாழ்ந்தார்.
 ஆ. சீறாப்புராணம் என்னும் காவியத்தை இயற்றியவர் உமறுப்புலவர்.
 இ. அங்கு ஷெய்கு முதலியார் என்பவரின் மகனாக இவர் பிறந்தார்.
 ஈ. இவர் எட்டயபுரத்தின் ஆஸ்தானக் கவிஞராக இருந்தவர்.
 உ. திருநெல்வேலிச் சீமையிலே எட்டயபுரத்தை அடுத்தது நாகலாபுரம்.
 1) ஈ, ஆ, இ, உ, அ 2) ஆ, ஈ, உ, இ, அ
 3) இ, உ, அ, ஈ, ஆ 4) ஆ, ஈ, உ, அ, இ

## தமிழ்மொழியும் இலக்கியமும் II — 2 மணித்தியாலங்கள்

01. சுருக்கமான விடை தருக.
 1) பின்வரும் தொடரைச் சந்திபிரித்து எழுதுக.
 ''காதலொருவனைக் கைப்பிடித்தேயவன்''
 2) அந்த வஞ்சி மகளொரு ஊதாப்பூ. ஊதாப்பூ என்பதை வைத்து இருபொருள்பட வாக்கியம் அமைத்துக் காட்டுக.
 3) சுவரொட்டிகள் வெளியிடப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
 4) மூலதனம், ஆய்வாளன், பறிமுதல், எறிகல் என்பவற்றைக் கூட்டுப்பெயர், ஆக்கப்பெயர் என வேறுபடுத்துக.
 5) பின்வருவனவற்றில் செவ்விகாண்பவனுக்கு இருக்கவேண்டிய பண்புகளாவன.
 நகைச்சுவையாகப் பேசுதல், சிறந்த மொழியறிவு, செவ்வி கொடுப்பவரைக் கட்டுப் படுத்தும் திறன், சிறந்த கேள்விகளைக் கேட்கும் திறன்.
 6) ''மன்னர் விழித்தாமரை பூத்த மண்டபத்தே'' என்பதில் வந்துள்ள அணியை விளக்குக.
 7) நானிலங்கொண்ட இலங்கையின் தோற்றப்பொலிவு எவ்வாறு விளக்கப்பட்டது?
 8) ''அஸ்லாமு அலைக்கும் முப்பது வருஷத்திற்கு முந்தி நடந்த போட்டியிலேயும் நாகுத் தம்பிதான் வெத்தினார்'' இது எப்பிரதேச வழக்காகும்?
 9) விளம்பரத்தின் பண்புகள் பின்வருவனவற்றுள் எவை?
 சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல், தகவல் திரட்டுதல், சுவையான தகவல்கள், தீர்வு கூறல்.
 10) களி, கழி என்ற சொற்களைப் பொருள் வேறுபடுமாறு வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.
 அ. சமாதானம் நிலவுகின்ற இத்தருணத்தில் போக்குவரத்துச் சாதனங்களின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. வாகனச் சாரதிகள் போக்குவரத்து விதிகளைக் கடைப்பிடிக்காமை, மதுபோதையில் வாகனம் செலுத்துதல் போன்றவற்றாலும், கையடக்கத் தொலைபேசியில் பேசியவண்ணம் வாகனம் செலுத்துதல் போன்ற பல காரணங்களாலும் வீதி விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. வீதிவிபத்துக்கான காரணங்கள், அவற்றைத் தடுப்பதற்குக் கடைப்பிடிக்கவேண்டிய வழிமுறைகள் போன்றவற்றை விளக்கி ஒரு மேடைப்பேச்சு.

 ஆ. இன்று எமது நாட்டில் சுத்தத்தின் அவசியம் உணரப்பட்டுள்ளது. எங்கு திரும்பினாலும் ''எமது நகரைச் சுத்தமாக வைத்திருப்போம்'' என்ற பதாகைகள் காணப்படுகின்றன. இலகு வேலைத்திட்டத்தின் கீழ் வீதிகள், வீதியோரங்கள் சுத்தப்படுத்தப்படுகின்றன. ''சுத்தமாக இருப்பதால் சுகமாக வாழலாம்'' என்ற கருத்துப்பட ஒரு விளக்கக் கட்டுரை.

 இ. உமது நகரத்தில்/கிராமத்தில் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. உமது பிரதேசத்தின் விளையாட்டுக்குழுவுக்கும் அயற்பிரதேசத்தின் விளையாட்டுக்குழுவுக்கும் இடையே கிரிக்கெட் போட்டி மிக விறுவிறுப்பாக நடந்துகொண்டிருந்தது. அதில் வீரர்கள் உற்சாகத்துடன் விளையாடினர். இதனைக் கவனத்தில் கொண்டு ஒரு நேர்முக வர்ணனை.

 ஈ. சிவராமன் ஓர் ஏழை விவசாயி. அவன் மனைவி வைதேகி சிறந்த குடும்பப்பெண். அவர்களுக்குப் பூமாறன், பூங்குழலி என இரு பிள்ளைகள். அவ்விரு பிள்ளைகளையும் கல்வியிலே கலங்கரை விளக்காகத் திகழவைக்க வேண்டும் என எண்ணினர் பெற்றோர். ஆனால், அவர்களின் வறுமை அதற்கு இடம்கொடுக்கவில்லை. எனினும், மகனை ஒரு பொறியியலாளனாகவும், மகளை வைத்தியராகவும் காணக் கனவு கண்டார் சிவராமன். சிவராமனின் கனவு நிறைவேறியதா? நிறைவேறவில்லையா? என்பதை விளக்கிச் சிறுகதை ஒன்று எழுதுக.

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40-45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக. சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக. மருத்துவத்துறை ஏனைய துறைகளைப் போன்றதல்ல. இது உயிர்காக்கும் தொழில் சார்ந் தது. இன்று இது பயன்கருதிச் செய்யும் வியாபாரம் போன்று மாறிவருகின்றது. இதனால் ஏழை எளிய மக்கள் சொல்லொணாக் கஷ்டமுறுகின்றனர். இந்நிலை மாறவேண்டும். பயன் கருதாத் தொண்டாக இறைவனுக்குச் செய்யும் பணியாக இதனைக் கருதவேண்டும். நான் மருத்துவரானால் வருமானம் பெருக்கிக் கொள்ளும் ஒரு தொழிலாக இதனைக் கருதாது, இறைவனுக்குச் செய்யும் ஒரு பணியாகக் கருதிச் செயற்படுவேன். ''என் கடன் பணிசெய்து கிடப்பதே'' என்று அப்பர் சுவாமிகளின் வாக்கைக் கடைப்பிடித்து ஒழுகுவேன். ஏழை எளிய மக்களுக்கு இலவசச் சிகிச்சையளிப்பேன். வசதி படைத்தோரிடம் ஒரு குறிப்பிட்டளவு கட்டணமே அறவிடுவேன்.

(23 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப் பெயர்ச்சி உங்களுக்கு எப்படி?

## 21.11.2010 முதல் 07.05.2011 வரை




வாசகர்களே !
நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த குருப் பெயர்ச்சி வந்து விட்டது. இதுவரை கும்ப ராசியில் சஞ்சரித்து சிறிது காலப்பகுதியில் குருவாசம் செய்து, பின் மீனத்துக்கு அதிகாரமாகச் சென்று, பலா பலன்களைக் கொடுத்து மீண்டும் கும்பத்துக்கு வந்து ஒரு சில நாள்கள் மட்டும் இருந்த குரு இப்பொழுது 12 ஆம் இடமான மீனராசியில் கடந்த 21ஆம் திகதி முதல் சஞ்சரித்து உங்களுக்கான பலாபலன்களை வழங்க வுள்ளார்.

பூரட்டாதி 4,
உத்திரட்டாதி, ரேவதி

உழைப்பால் உயரலாம் என்ற உயரிய கொள்கையுள்ள மீனராசி அன்பர்களே!

உங்கள் ராசிக்கு பெயர்ச்சியாகியுள்ள குருபகவான் ஆட்சி பலத்துடன் அமர்ந்துள்ளார். ஜென்ம குரு உங்கள் செயல்களில் தாமதம் ஏற்படுத்துவார். இருப்பினும் குருவின் பார்வை பெறுகிற ஸ்தானங்களின் வழியாக சில நல்ல பலன்களையும் பெறலாம். குரு தனது ஐந்தாம் பார்வையால் ராசிக்கு பூர்வ, புண்ணியம், புத்திரம், ஏழாம் பார்வையால் களஸ்திரம், ஒன்பதாம் பார்வையால் பதா, பாக்ய ஸ்தானங்களை பார்க்கிறார். எந்த விடயத்தையும் மன உறுதியுடன் செயல்படுத்துவீர்கள். வருமானம் அதிகம் பெற வேண்டும் என்ற சிந்தனை இருந்தாலும் செயல்படுத்துவதில் சிரமம் ஏற்படும். பேச்சில் கண்டிப்பு நிறைந்திருக்கும். தம்பி, தங்கைகள் உங்களிடம் கருத்து வேறுபாடு கொள்வர். உங்கள் மீதான சமூகத்தின் பார்வை மாறுபடும். வீடு, வாகனத்தில் இருக்கிற வசதியை பாதுகாத்தாலே போதும். தற்போதைக்கு வீட்டில் பெரிய அளவிலான பராமரிப்புப் பணிகளைத் தொடங்க வேண்டாம். தாயின் உடல் நலம் பாதிக்கலாம். அவருக்குரிய மருத்துவச்செலவை சமாளிக்க வேண்டியிருக்கும். பூர்வ புண்ணிய பலனும் பூர்வீகசொத்தில் கிடைக்கிற வருமானமும் உங்களின் வாழ்க்கை நடைமுறை சீராக செயல்பட உதவும். வழக்கமான வருமானம் குறைய வாய்ப்புண்டு. புத்திரர்கள் உங்கள் சொல் கேட்டு நல்லவிதமாக நடந்துகொள்வர். உடல்நலம் பாதிக்கலாம் என்பதால் உணவு மற்றும் பழக்க வழக்கங்களில் கவனமாக இருங்கள். குடும்பத்தின் முக்கிய தேவைகளை நிறைவேற்ற கடன் வாங்க வேண்டி வரும். ஏற்கனவே பெற்ற கடன் வகைகளும் நெருக்கடியை உருவாக்கும்.

தம்பதியர் ஒற்றுமை குறையும் என்பதால் குடும்பத்தில் சிரமங்கள் வரலாம். விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். நண்பர்கள் உதவியை எதிர்பார்க்க இயலாது. தந்தைவழி உறவினர்கள் உங்கள் நலனில் அக்கறை கொண்டு ஆலோசனை மற்றும் தேவையான உதவி வழங்குவர். பொது இடங்களில் ஏற்படுகிற விவகாரங்களில் தலையிட்டால் சட்டச்சிக்கலில் மாட்டிக்கொள்வீர்கள். ஒதுங்கிச் செல்வது நல்லது. வெளிநாடு வேலைவாய்ப்புக்குரிய முயற்சி வெற்றி பெறுவது சிரமமே. ஏற்கனவே வேலை பார்ப்போருக்கும் அதிக வருமானத்திற்கு இடமில்லை.

தொழிலதிபர்கள்: புடைவை, வாகனம், இரும்பு, தோல், காகிதம், ரப்பர், பிளாஸ்டிக், தண்ணீர் சார்ந்த பொருள்கள், கட்டுமானப்பொருள் உற்பத்தி செய்வோர், கல்வி, நிதி நிறுவனம், விடுதி, முகவர், அச்சகம், மருத்துவமனை, பால்பண்ணை, தொழிற்பயிற்சி நிறுவனம் நடத்துபவர்கள் குளறுபடிகளை சந்திக்கும் கிரகநிலை உள்ளது. நிர்வாகச் செலவு அதிகமாகும். மற்றவர்களுக்கும் இதே நிலையே. தகுதி, திறமை மிகுந்தவர்களை அவசரப்பட்டு நீக்காமலிருந்தால் தான் தொழிலைத் தக்க வைக்கலாம். கடன்தொகை வந்து சேரும். உற்பத்தி, தரம் சிறக்க முழு கண்காணிப்புடன் செயற்படுவது அவசியம். உற்பத்தி, அதற்கேற்ற பணவரவு கிடைக்கும். தொழில்போட்டி வளரும். நண்பர்களின் உதவியால் சில நன்மைகள் ஏற்படும்.

**தருபவர் வித்யா**

பணியாளர்கள்: அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள் பணியிடத்தில் தேவையற்ற விடயங்களைப் பேசக்கூடாது. பேச்சினால் கலகம், நிர்வாகத்தின் கண்டிப்பு இவற்றிற்கு உள்ளாகக் கூடும். உடல்நலத்திலும் சீரான கவனம் வேண்டும். கூடுதல் வேலை வாய்ப்புப் பெற காத்திருக்கும் தன்மை உள்ளது. அளவான பணவரவு கிடைக்கும். முக்கிய செலவினங்களுக்கு கடன் பெறுவீர்கள். சிலர் பெற வகையில் வேலை வாய்ப்புக்கு முயற்சிப்பர். தந்தையின் ஆலோசனை, உதவி உங்கள் வாழ்வியல் நடைமுறையை வளப்படுத்தும். பூர்வீகசொத்தில் வருமானம் பெறுபவர்களுக்கு உயர்வு உண்டு.

வியாபாரிகள்: நகை, புடைவை கண்ணாடி, புத்தகம், சி.டி, பிளாஸ்டிக், இரும்பு பொருள்கள், பால் பொருள்கள், தண்ணீர் சார்ந்த பொருள்கள், தளபாடங்கள் அழகு சாதனப் பொருள்கள், இசைக்கருவிகள் விற்பனை செய்பவர்கள் வியாபாரத்தில் பலத்த போட்டியை எதிர்கொள்வர். மனத்துணிவு இருந்தால் மட்டுமே விற்பனையைத் தக்க வைக்க முடியும். ஏனைய பொருள் விற்பவர்களுக்கும் சுமாரான லாபமே கிடைக்கும். பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். கூடுதல் மூலதனத்திற்காக கடன் வாங்குவது நல்லதல்ல. கடனுக்கு விற்பனை செய்வதையும் தவிர்க்க வேண்டும்.

பெண்கள்: பணிபுரியும் பெண்கள் செயல்திறனில் மந்தநிலை கொள்வர். பணியின் தன்மையை அறிந்து செயல்படுவதால் மட்டுமே ஒழுங்காக கடமையைச் செய்ய முடியும். சலுகைகளைப் பெறுவதில் அவசர நடவடிக்கை கூடாது. குடும்பப் பெண்கள் கணவருடன் கருத்து வேறுபாடு கொள்ள நேரிடும். வீட்டுச்செலவுக்கு திண்டாட வேண்டியிருக்கும். சிக்கனம், தேவை. புத்திரப் பேறு வகையில் அனுகூலம் உண்டு. சுயதொழில் புரியும் பெண்கள் சுமாரான விற்பனையும், அதற்கேற்ற பணவரவும் கிடைக்கப்பெறுவர். அளவான மூலதனம் போதும்.

விவசாயிகள்: குடும்பத் தேவைகளை நிறைவேற்ற பெருமளவில் உழைக்க வேண்டியிருக்கும். கால்நடை வளர்ப்பில் சுமாரான லாபம் கிடைக்கும். நிலம் தொடர்பான விவகாரங்கள் இழுத்தடிக்கும். சாதகத்தீர்வுக்கு பொறுமையுடன் காத்திருக்கவும்.

---

சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள மக்கள் பலர் சுகாதார நெறிமுறைகளை அறியாதவர்களாக அல்லற்படுகின்றனர். அத்தகையோர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சுகாதாரக் கருத்தரங்குகள் நடத்த முற்படுவேன். பல்வேறு சமூக நிறுவனங்களோடும் தொடர்புகொண்டு நடமாடும் இலவசச் சிகிச்சை முகாம்களை நடத்த ஏற்பாடு செய்வேன். சமுதாயப் பணியாகக் கருதி இதனைச் செயற்படுத்த முற்படுவேன்.

04. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை தருக.

பூங்குறிஞ்சி முகட்டினி லேறிப்
பொழிந்த தெள்ளமு தாகிய வெள்ளம்
பாங்கிலாதப ரத்தையை நாடிப்
படருவோரிற்படர்ந்தது பள்ளம்

முன்னை பூத்திடு முல்லையிற் போன
முளரி பூத்திடு மருதத்திற் போன
புன்னை பூத்திடு நெய்தலிற் போன
போகும் போகுந் துறைதோறும் போன

செப்பு மத்தளங் கொட்டுங் கரம் போற்
சிறையசைத்துச் சிரலினம் மேவும்
கொக்கு நாரையும் மீனினம் கொத்திக்
கொண்டெழுந்து விழுங்கி விக்குமே.

1) இப்பாடலில் வர்ணிக்கப்படும் காட்சி யாது?
2) இதில் வரும் உவமை அணி ஒன்றை விளக்குக.
3) பாடலில் கூறப்படும் நானிலங்களும் எவை?
4) "சிறையசைத்துச் சிரலினம் மேவும்" என்பதால் கவிஞர் விளக்க நினைப்பது என்ன?
5) இப்பாடலில் பேசப்படும் வளம் யாது?

05. ஒக்டோபர் 15ஆம் திகதி கைகழுவுதல் தினமாகும். இத்தினத்தின் நோக்கம், எவ்வாறு கொண்டாடப்படவேண்டும், இதன் பயன் என்பன பற்றி விளக்கி உமது நண்பன்/நண்பிக்கு 100 சொற்களில் நீர் எழுதும் கடிதம்.

**தமிழ்மொழியும் இலக்கியமும் III** **2 மணித்தியாலங்கள்**

* ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
* 1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆம் வினாக்களில் ஏதாவது ஒரு வினாவுக்கும் விடை எழுதுக.

01. சுருக்கமான விடை எழுதுக.
1) "கொண்டானின் துண்ணிய கேளிர் பிறரில்லை" என்ற தொடரின் பொருள் யாது?
2) "பொய்வைத்த சொப்பனமாம் மன்னர் வாழ்வும் புவியும் எங்கே."
அ. இவ்வாறு பாடியவர் யார்?
ஆ. சொப்பனம் என்பதன் கருத்து யாது?
3) "உழவர்களைச் சிறப்பிக்கும் நூலாம் எழுபது பாடல்கள் கொண்ட பிரபந்தமாகும்."
அ. இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
ஆ. இக்கூற்று இடம்பெறும் நாடகத்தை எழுதியவர் யார்?
4) "ஒண்ணும் இருக்காது. நமக்கேன் அப்படியெல்லாம் வரது."
அ. இக்கூற்று இடம்பெறும் கதை எது?
ஆ. இதனை எழுதியவர் யார்?
5) "....... படைவேள் பகழி அஞ்சுமஞ் சுங்கய லஞ்சுமஞ் சுங்கட லஞ்சுமஞ்சும்" இவ்வடிகளைச் சந்திபிரித்து எழுதுக.
6) அ. சூசிகை என்றால் என்ன?
ஆ. மங்கையற்கரசி யார்?
7) "தானாய் விடிவெள்ளி தோன்றுகின்ற சங்கதிகள் வானத்தில் மட்டும் தான் வாழ்வில் இருள் தொடரும்."
அ. இக்கவிதை வரிகள் இடம்பெறும் கவிதையின் தலைப்பு எது?
ஆ. எப்பிரதேச மக்களின் உணர்வு இதில் வெளியிடப்படுகிறது?
8) "கூழும் குடியும் ஒருங்கு இழக்கும் கோல் கோடிக் குழாது செய்யும் அரசு." இக்குறட்பாவைக் கொண்டு கூட்டி எழுதுக.
9) "ஞாயிறே இருளை என்ன செய்துவிட்டாய்? ஓட்டினாயா? கொன்றாயா? விழுங்கி விட்டாயா?"
அ. இவ்வாறு வினாத்தொடுப்பவர் யார்?
ஆ. அவரது கவிதையின் எத்தொகுதியில் இது இடம்பெறுகிறது?
10) நந்திக்கலம்பகம் என்றால் என்ன? இதில் எத்தனை பாடல்கள் உள்ளன?

02. பின்வரும் செய்யுட்பகுதிகள், உரைப்பகுதிகள் ஒவ்வொன்றினதும் கருத்தை உமது மொழி நடையில் எழுதுக. அவை ஒவ்வொன்றினதும் தடித்த எழுத்துக்களில் உள்ள தொடர்களின் சிறப்பியல்புகளை விளக்கி எழுதுக.

அ. "வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது - நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்."

ஆ. ஆய்மணிப் பைம் பூண் அலங்கு தார்க் கோதையைக்
காணிய சென்று கதவடைத்தேன் - நாணிப்
பெருஞ் செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ் செல்லும் பேருமென் நெஞ்சு.

இ. உலகீர், இக்கதையால் ஞானமே எல்லாவற்றிலும் மிக அரியதும் எல்லாராலும் விரும்பத்தக்கதும் ஆமென்றும். அந்த ஞானத்தை அடைய ஒவ்வொருவரும் முயலவேண்டுமென்றும் விளங்கு கின்றமையால், ஒவ்வொருவரும் வாணாளை வீணாள் ஆக்காமல் ஞானம் கைவல்லியமாகும் முயற்சியில் நிற்போமாக!

ஈ. மனத்தின் ஆழத்தில் பீதி அது பாட்டிற்குப் புழுப் போலத் துளைத்துக் கொண்டே இருந்தது. மேலே மட்டும் சமாதானம் கொஞ்சநேரத்திற்கு ஒருதரம் அந்தத் திகில் மேல்மட்டத்திற்கு வந்து தலையெடுக்கும், உடம்பு பதறும், நெஞ்சு உலரும், அடிவயிறு கலங்கும், முகம் விகாரம் அடையும், மறுபடியும் மெதுவாகச் சமாதானத்தின் பலம் அதிகமாகும் பயத்தைக் கீழே அமுக்கிவிடும்.

03. "பார்வைகள்" என்ற சிறுகதையில் தர்மலிங்கம் என்ற பாத்திரத்தின் தனிமனித ஆளுமை சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.

அல்லது

குழந்தை ரோஹிணியின் அழகியல் உணர்வு, கற்பனை நயம் என்பவற்றை ஆசிரியர் எவ்வாறு படம்பிடித்துக் காட்டுகின்றார் என்பதை "நட்ஷத்திரக் குழந்தைகள்" என்ற சிறுகதையை மையமாகக் கொண்டு விளக்குக.

04. சொல்வன்மை, பயனில சொல்லாமை ஆகிய இரு அதிகாரங்களிலும் அறிவுடையோரின் அறிவுடைமை எவ்வாறு வள்ளுவரால் உணர்த்தப்படுகிறது என்பதை விளக்குக.

அல்லது

முடியுடை மூவேந்தர்களின் மீதும் காதல் கொள்ளும் பெண்களின் நிலை முத்தொளாயிரத்தில் சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.

* 5,6,7 ஆம் வினாக்களில் ஏதாவது ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக.


05. "நிழலின் நினைவு" என்ற கவிதையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
அ. இக்கவிதையைப் பாடிய கவிஞரின் பெயர் என்ன?
ஆ. இக்கவிதையில் ஆசிரியர் சொல்ல வந்த செய்தி யாது?
இ. வேப்பமரம் இக்கவிதையில் பெறும் முக்கியத்துவம் பற்றி விளக்குக.

06. நளமகாராஜனின் அழகு, வீரம் என்பன நளவெண்பா சுயம்வரகாண்டப் பகுதியில் வர்ணிக்கப்படுமாற்றினை விளக்குக.

07. அ. இராமச்சந்திரக் கவிராயர் எவ்வாறு அயனை நிந்தித்துப் பாடுகின்றார்?
ஆ. ஏன மலையை மதிக்கு நிகராகவழுத்த வேண்டும் எனப்பட்டது?
இ. ஒரு மதின் நயனத்தை எவ்வாறு வியந்து பாடப்படுகின்றது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்கா சென்றது இந்திய அணி



மும்பை,டிசெ.9

இந்திய வீரரான ஷேவாக், பயிற்சியாளர் அடங்கலாக இந்தியக் கிரிக்கெட் குழுவொன்று இரு தினங்களுக்கு முன் தென்னாபிக்கா சென்றுள்ளது. இதேவேளை, டோனி, சச்சின் ஆகியோர் அடங்கிய குழு நேற்று அங்கு சென்றுள்ளது. இந்தியக் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

இந்தியா-தென்னாபிரிக்கா மோதும் முதலாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 16ஆம் திகதி செஞ்சுரியனில் தொடங்குகிறது.

அங்குள்ள சூழலுக்கு ஏற்ப பழகிக்கொள்ள வசதியாக இந்திய முன்னணி வீரர்களை முன்கூட்டியே தென்னாபிரிக்காவுக்கு அனுப்பத் திட்டமிடப்பட்டது.

இதன்படி முதல் குழுவாக ஷேவாக், உமேஷ் யாதவ், ஜெய்தேவ் உனட்கட், புஜாரா, பயிற்சியாளர் கேரி கிர்ஸ்டன் ஆகியோர் கடந்த திங்கட்கிழமை அதிகாலை மும்பையிலிருந்து தென்னாபிரிக்காவுக் குப் புறப்பட்டு சென்றனர்.

அணித்தலைவர் டோனி, டெண்டுல்கர், டிராவிட், வி.வி.எஸ். லக்ஷ்மன் ஆகியோர் நேற்றுப் புறப்பட்டார்கள். இந்திய வீரர்களுக்கு கேப்டவுனில் உள்ள பயிற்சி நிலையத்தில் பயிற்சியாளர் கிர்ஸ்டன் சிறப்புப் பயிற்சிகளை வழங்குவார். தென்னாபிரிக்க ஆடுகளங்களில் பந்து நன்கு எகிறிச் (பவுன்ஸ்) செல்லும். இதனைச் சமாளிக்கும் வகையில் பயிற்சி அளிக்கப்படும்.

## உலக சாதனை படைத்த முதலாவது சீனர் மரணம்

பாரம் தூக்கும் போட்டியில் உலக சாதனை படைத்த முதலாவது சீன வீரரான சென் ஜிங்காய் ஒனு தமது 75ஆவது வயில் மரணமாகியுள்ளார்.

இவர் 1956ஆம் ஆண்டு ஷங்காயில் சீனா - ரஷ்யாவுக்கிடையிலான பாரம் தூக்குதல் போட்டியில் 133 கிலோ கிராம் எடை தூக்குதல் போட்டியில் சாதனை படைத்தார்.

அதேவேளை, பத்து உலக சாதனைகளைப் படைத்துள்ள இவர், சர்வதேச ஒலிம்பிக் சங்கத்தின் பாராட்டுக்களையும் பெற்றவராவார்.

இவரது இளைய வயதுச் சகோதரரான எசன் மான்லினும் மருமகனான சென் வீயங்கும் பாரம் தூக்குவதில் சாதனை படைத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## தென்னாபிரிக்காவில் நடந்த உலகக் கிண்ணத் தொடரை நேரில் ரசித்த 3 லட்சம் ரசிகர்

தென்னாபிரிக்காவில் நடந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை 3 லட்சத்து 3ஆயிரம் ரசிகர்கள் நேரில் சென்று பார்த்து ரசித்துள்ளனர்.

தென்னாபிரிக்காவில் அண்மையில் நடந்து முடிந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் குறித்த விவரங்கள் நேற்று வெளியிடப்பட்டன.

அதில், 3 லட்சத்து 3ஆயிரம் ரசிகர்கள் நேரில் பார்த்து ரசித்துள்ளனர். அதேவேளை, அவர்கள் 5 ஆயிரத்து 210 லட்சம் அமெரிக்க டொலர்களைச் செலவு செய்துள்ளனர்.

போட்டிகளுக்கு விற்பனையான நுழைவுச் சீட்டுகள், மற்றும் விமானப் பயணங்களுக்கான செலவுகள் குறித்த விவரம் இதற்குள் சேர்க்கப்படவில்லை.

# ஐ.பி.எல். வீரர்களுக்கான ஏலம் மார்ச்சுக்குத் தள்ளி வைப்பு?

மும்பை, டிசெ.9

4ஆவது ஐ.பி.எல். தொடருக்கான வீரர்களைத் தெரிவுசெய்யும் ஏலம் மார்ச் மாதத்திற்குப் பிறகே நடைபெறக் கூடிய வாய்ப்பு உள்ளது.

4ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி தொடங்குகிறது.

இந்த முறை கொச்சி, புனே ஆகிய அணிகளையும் சேர்த்து மொத்தம் 10 அணிகள் விளையாடும் என்று முதலில் அறிவிக்கப்பட்டது.

பின்னர் விதிமுறைகளை மீறிச் செயற்பட்டதாகக் கூறி, ராஜஸ்தான் ரோயல்ஸ், கிங்ஸ் லெவன் பஞ்சாப் ஆகிய அணிகளின் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. இதனால், ஐ.பி.எல். அணிகளின் எண்ணிக்கை திரும்பவும் 8 ஆகக் குறைந்தது.

இந்நிலையில், அடுத்த ஐ.பி.எல். போட்டிக்கான வீரர்களின் ஏலம் கடந்த மாதம் நடைபெறுவதாக இருந்தது. எனினும், கொச்சி அணி குறித்து பிரச்சினை காரணமாக ஏலம் ஜனவரி 8, 9ஆம் திகதிக்கு தள்ளிவைக் கப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஏலம் மீண்டும் தள்ளிப்போகும் நிலை காணப்படுகிறது.


ஐ.பி.எல். கிரிக்கெட் அமைப்பிலிருந்து நீக்கப்பட்டதை எதிர்த்து ராஜஸ்தான், பஞ்சாப் அணிகள் மும்பை உயர்நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளன. இதில் ராஜஸ்தான் மீதான நடவடிக்கைக்கு 6 வார காலம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனை எதிர்த்து இந்திய கிரிக்கெட் சபை உயர்நீதிமன்றில் வழக்குத் தொடுத்துள்ளது. வழக்கு விசாரணை தொடர்ந்து நடந்துகொண்டிருப்பதால், தீர்ப்பின் முடிவு யாருக்கும் சாதகமாக வரலாம்.

எது எப்படி நடந்தாலும் ஒரு தரப்பினர் அதனை எதிர்த்து 'சுப்ரீம்கோர்ட்'டுக்குச் செல்வார்கள். இரு தரப்பினரின் சட்டப்பூர்வ அணுகுமுறை காரணமாக ஐ.பி.எல். வீரர்களின் ஏலம் மீண்டும் ஒரு முறை தள்ளி வைக்கப்படக்கூடிய வாய்ப்புள்ளது. அதாவது, மார்ச் மாதத்திற்கு முன்னர் ஏலத்தை நடத்துவது சந்தேகம்தான் என்று ஐ.பி.எல். அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## விளையாட்டு அரங்குகளில்

## டெஸ்ட் தரவரிசையில் ரிக்கி பொன்டிங் பெரும் பின்னடைவு




அடிலெய்ட் டெஸ்டில் இரண்டு இனிங்ஸ்களிலும் மொத்தம் 9 ஓட்டங்களை மட்டுமே பெற்ற ஆஸ்திரேலிய அணித்தலைவரான ரிக்கிபொன்டிங் ஐ.சி.சி.யின் டெஸ்ட் தரவரிசையில் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்திருக்கிறார்.

இவர் 12 இடங்கள் சரிந்து 25ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார். முதல் 20 இடங்களிலிருந்து இவர் வெளியேற்றப்படுவது 2001ஆம் ஆண்டுக்குப் பிறகு இதுவே முதல் முறையாகும்.

பந்து வீச்சாளர் தரவரிசையில், அடிலெய்ட் போட்டியில் மொத்தம் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளரான அண்டர்சன், சஹீர்கான் (இந்தியா) வகித்த 3ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். சஹீர்கான் 4ஆவது இடத்திற்கு இறங்கியுள்ளார்.

மற்றொரு இங்கிலாந்துப் பந்துவீச்சாளரான ஸ்வான் முதலிடத்தை நெருங்கியிருக் கிறார். முதலிடத்தில் உள்ள ஸ்ரெயினை (தென்னாபிரிக்கா) விட 14 புள்ளிகளே ஸ்வான் பின்தங்கி உள்ளார்.

## இந்திய கிரிக்கெட் அணி முன்னாள் வீரர் மரணம்

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான திருமலை சீனிவாசன் புற்று நோய் காரணமாக காலமானார்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரரான திருமலை சீனிவாசன், மூளை புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

சென்னையைச் சேர்ந்த 60 வயதான திருமலை சீனிவாசன் சிகிச்சை பலனின்றி கடந்த திங்கட்கிழமை மரணமடைந்தார். அவர் 1980-81 ஆம் ஆண்டுகளில் ஒரு டெஸ்ட் மற்றும் 2 ஒருநாள் போட்டிகளுக்கான இந்திய அணியில் இடம்பிடித்து விளையாடினார்.

1970 முதல் 1984ஆம் ஆண்டு வரை 45 ரஞ்சி கிண்ண கிரிக்கெட் போட்டியில் தமிழக அணிக்காக விளையாடியுள்ளார். திருமலை சீனிவாசன் மறைவுக்கு, தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத் தலைவர் என்.சீனிவாசன் அனுதாபம் தெரிவித்துள்ளார்.

# டேவிஸ் கிண்ண ரென்னிஸ்: சேர்பியா சாதனை வெற்றி!



பெல்கிரேட், டிசெ.9

டேவிஸ் கிண்ண ரென்னிஸ் தொடரை சேர்பியா முதன்முறையாக வென்று சாதனை படைத்துள்ளது.

டேவிஸ் கிண்ண ரென்னிஸ் தொடரின் இறுதிப்போட்டி சேர்பியா - பிரான்ஸ் அணிகளுக்கிடையே சேர்பியாவின் பெல்கிரேட் நகரில் நடந்தது.

5 ஆட்டங்கள் கொண்ட இந்தப் போட்டித் தொடரில் முதல் 3 நாட்கள் முடிவில் பிரான்ஸ் 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது.

இந்த நிலையில் கடைசி நாளில் உலகின் முன்னணி வீரர்களில் ஒருவரான சேர்பியாவின் ஜோகோவிச் 6-2, 6-2, 6-4 என்ற செற் கணக்கில் பிரான்சின் கேல் மான்பல்சை வீழ்த்தி தொடரை சமனுக்குக் கொண்டு வந்தார்.

இதைத் தொடர்ந்து 5ஆவது மற்றும் கடைசி மாற்று ஒற்றையர் ஆட்டத்தில் விக்டர் டிரோக்கியும் (சேர்பியா)- மைக்கல் லோட்ராவும் (பிரான்ஸ்) மோதினார்கள்.

கிண்ணம் யாருக்கு என்பதை நிர்ணயிக்கும் இந்த ஆட்டத்தில், தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய விக்டர் டிரோக்கி 6-2, 6-2, 6-3 என்ற நேர் செற் கணக்கில் வெற்றியை ருசித்தார். இதன் மூலம் சேர்பியா 3-2 என்ற செற் கணக்கில் வெற்றி கொண்டு, 9 தடவைகள் சம்பியனான பிரான்ஸைத் தோற்கடித்து முதல் முறையாக கிண்ணத்தைக் கைப்பற்றி சாதனை படைத்தது.

சேர்பியா கிண்ணத்தைக் கைப்பற்றியதும், நூற்றுக்கும் மேற்பட்ட ரசிகர்கள் பெல்கிரேட் நகரின் வீதிகளில் தங்கள் நாட்டு தேசியக் கொடியுடன் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் டேவிஸ் கிண்ண வெற்றியைக் கொண்டாடினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்கிறது நியூஸிலாந்து அணியின் பரிதாபம்; நான்காவது போட்டியிலும் இந்தியா வெற்றி!

நியூஸிலாந்துக்கு எதிரான நான்காவது போட்டியிலும் இந்திய அணி அசத்தல் வெற்றியைப் பெற்றுள்ளது. இதனால் நியூஸிலாந்து அணியின் சோகம், தொடர் கதையாகியுள்ளது.

இந்தியா - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரில், முன்னர் நடந்த 3 போட்டிகளிலும் இந்திய அணி வெற்றிபெற்று, தொடரைக் கைப்பற்றியது. இந்நிலையில் நான்காவது போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப் பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி, பிராங்ளினின் (98 ஓட்டங்கள் - ஆட்டமிழக்காமல்) அதிரடியுடன் ஏனைய வீரர்களும் ஓரளவு ஒத்துழைப்புக் கொடுக்க, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 315 ஓட்டங்களைக் குவித்தது.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில், யூசுப் பதான் 3 விக்கெட்டுகளையும், அஷ்வின், நெஹ்ரா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பின்னர், 316 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, யூசுப்பதானின் அதிரடிச் சதத்தால் (123 ஓட்டங்கள் - ஆட்டமிழக்காமல்) 48.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 321 ஓட்டங்களைக் குவித்தது.

இதனடிப்படையில் 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக பந்துவீச்சு - துடுப்பாட்டம் என இரண்டிலும் ஜொலித்த இந்திய வீரரான யூசுப் பதான் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தப் போட்டியிலும் வெற்றி பெற்றதன் மூலம், 4-0 என்ற கணக்கில் இந்திய அணி முன்னிலை வகிக்கிறது. அடுத்த போட்டி நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.





# ஆஸியின் சரிவு ஆரம்பம்!

தற்போது சொந்த மண்ணில் வைத்து ஆஷஸ் தொடரை இழக்கும் நிலையில் உள்ளார் பொண்டிங். நேற்றுமுன்தினம் முடிந்த அடிலெய்ட் டெஸ்டில் அடைந்த இன்னிங்ஸ் தோல்வி, ஆஸ்திரேலிய அணியை 1980களின் வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும் சோகம் அந்நாட்டு கிரிக்கெட் வல்லவான்களைத் துரத்தத் தொடங்கியுள்ளது.

சில வருடங்களாக டெஸ்ட் மற்றும் ஒரு நாள் கிரிக்கெட் தரவரிசையில் முதலாமிடத்தைத் தக்கவைத்துக்கொண்டிருந்த ஆஸ்திரேலியா தற்போது தோல்வி மேல் தோல்வி கண்டுவருகிறது. குறிப்பாக 1986-87 ஆஷஸ் தொடருக்குப் பிறகு, சொந்த மண்ணில் வைத்து ஆஸ்திரேலிய அணி, இங்கிலாந்திடம் இன்னிங்ஸ் தோல்வியைக் கண்டுள்ளது.

வெற்றி - தோல்வி என்பது கிரிக்கெட்டில் வழக்கமான ஒன்றுதான். எனினும், தற்போதைய ஆஸ்திரேலிய அணியின் தோல்விகள் அந்த அணி மீண்டும் 1980களில் இருந்த நிலைக்குச் சென்றுவிடுமோ என்ற அச்சத்தை ஆஸ்திரேலியர்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

1982-83ஆம் ஆண்டுகளில் ஆஸ்திரேலிய நட்சத்திரங்களான கிரெக் சப்பல், டெனிஸ் லில்லி, ராட்னி மார்ஷ் ஆகியோர் ஓய்வு பெற அந்த அணிக்கு ஏற்பட்ட நெருக்கடி பயங்கரமானது.

அந்தக் காலகட்டத்தில் ஆஸ்திரேலியா 20 போட்டிகளில் ஒரு போட்டியில் மட்டுமே வெற்றி பெற்றிருந்தது. ஆஸ்திரேலியா என்றால் தொடர்ந்து 15 அல்லது 17 டெஸ்ட்களில் வெற்றி என்றுதான் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால், அந்தக் காலகட்டத்தில் 14 டெஸ்ட் போட்டிகளில் ஆஸ்திரேலியா வெற்றி என்பதை கனவில் கூட நினைக்க முடியாத ஒன்றாக இருந்தது.

அப்போதுதான் அலன் போடர் அணியை சீர் தூக்கி நிறுத்தியதோடு, ஒரு நல்ல அணியையும் உருவாக்கிக் கொடுத்தார் என்று கூறப்படுவதுண்டு.

ஆனால், அவர் எப்படி தூக்கி நிறுத்தினார் என்றால் நடுவர்களின் உதவியோடு என்பது பலருக்குத் தெரியாத விடயம்.

அதற்குச் சான்றாக இந்திய அணி கும்ப்ளே தலைமையில் ஆஸ்திரேலியா சென்றபோது பார்க்கமுடிந்தது. சிட்னி டெஸ்ட் போட்டியில் நடுவர் ரிக்கி பொண்டிங்கைக் கேட்டு ஆட்டமிழப்புக் கொடுத்த கேலிக்கூத்தெல்லாம் நடந்தது.

ரசிகர்கள் தொலைக்காட்சியில் பார்க்காத காலகட்டங்களிலும் ஆஸ்திரேலியா நடுவரின் உதவியில்லாமல் வெற்றி பெறுவது மிகவும் அரிதானதாகவே இருந்தது.

1986ஆம் ஆண்டில் இந்தியா கபில்தேவ் தலைமையில் அங்கு சென்று 3 டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடரில் விளையாடியது.

அதில் அலன் போடருக்கு நடுவர்கள் ஆட்டமிழப்புக் கொடுக்க மாட்டார்கள். அதுவும் ஒரு போட்டியில் 8 விக்கெட்டுகள் வீழ்ந்த பிறகு போடருக்கு ஆட்டமிழப் புக் கொடுத்தால் ஆஸ்திரேலிய அணியின் தோல்வி உறுதி என்ற நிலை யில் ஏகப்பட்ட ஆட் டமிழப்பு களை 'நொட் - அவுட்' என்று ஆஸ் திரேலிய நடுவர்கள் மறுத்தனர்.

இதனால் இந்தியா 2-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றிருக்க வேண்டிய தொடர், நடுவர்களின் அராஜகத்தால் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

அதேபோல்தான் அனைத்து நாடுகளுக்கும் ஆஸ்திரேலியாவில் நிகழ்ந்தது. பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள் என்று அனைத்து சிறந்த அணிகளும் பார்டருக்கு ஆட்டமிழப்புக் கொடுக்க மறுத்தமையால் ஆஸ்திரேலியாவை வீழ்த்த முடியாமல் தவித்தனர். இதனால்தான் அலன் போடர் பெரிய அணித்தலைவர் என்று ஆஸ்ரேலியா அவரை தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடியது.

நடுவர் தீர்ப்பு மேல்முறையீடு திட்டம் இருந்திருந்தால் அலன் போடர் பெரிய அணித்தலைவராகவோ உலகில் அதிக ஓட்டங்களைக் குவித்த துடுப்பாட்ட வீரராகவோ இருந்திருக்கவே முடியாது என்பது வேறு விடயம்.

அதன் பிறகு ஆஸ்திரேலியா மெல்ல முன்னேறியது. 1987 உலகக் கிண்ணத் தொடர் வெற்றிக்குப் பிறகு பெரியளவில் வீழ்ச்சிகளைச் சந்திக்காமல் இருந்தது.

1992 உலகக் கிண்ணப் போட்டிகளின்போதும் அந்த அணியால் பெரிதாக ஒன்றும் சாதிக்க முடியவில்லை. அலன் போடர் தலை மையில் டேவிட் பூன், மார்க் ரெய்லர், ஸ்ரீவ் வோ, மார்க் வோ, ரிக்கி பொண்டிங், கில் கிறிஸ்ட், ஷேன் வோர்ன் போன்றவர்கள் தலையெடுத்த பிறகு மார்க் ரெய்லர் வசம அணித்தலைவர் பொறுப்பு வந்தது.

அவர்தான் போடர் கொடுத்த அணியை வெற்றிக் கூட்டணியாக மாற்றினார். அணியில் கிளென் மெக்ராத், மத்யூ ஹெய்டன், ஜஸ்டின் லாங்கர், இயன் ஹீலி போன்ற தலைசிறந்த வீரர்களுடன் அப்படியே அணியை ஸ்ரீவ் வோ கையில் கொடுத்தார்.

இந்த வீரர்கள் அடங்கிய அணியே 1998ஆம் ஆண்டு முதல் தொடர் வெற்றி களைக் குவித்தது. 1999, 2003, 2007 உலகக் கிண்ணத்தையும் வென்றது.

ஆனால், இடையே இந்தியாவின் சௌரவ் கங்குலி 2001ஆம் ஆண்டு ஆஸ்திரெலியாவுக்கு ஆப்பு வைத்தார். 2004 ஆம் ஆண்டு ஸ்ரீவ் வோ ஓய்வுபெற்ற தொடரில் அடிலெய்டில் வெற்றி பெற்று சிட்னியிலும் வெற்றி பெறும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி தொடர் வெற்றி இல்லாமல் ஸ்ரீவ் வோவை வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

ரிக்கி பொண்டிங் கையில் அணித் தலைமைப் பொறுப்பு வந்த பிறகு கிளென் மெக்ராத், வோர்ன் போன்ற சிறந்த வீரர்கள் இருந்தும் 2005ஆம் ஆண்டு இங்கிலாந்தில் வைத்து அந்த அணியிடம் ஆஷஸ் தொடரை இழந்தது. ஆனால், அது மிகவும் நெருக்கமான தொடர். இங்கிலாந்து முழு ஆதிக்கம் செலுத்தி வெற்றி பெற்றது என்று கூற முடியாது.

இங்கிலாந்து வெற்றி பெற்ற 2 போட்டிகளிலுமே ஆஸ்திரேலியாவும் வெற்றி பெற்றிருக்கலாம் என்ற நிலையே இருந்தது.

பிறகு நடந்த ஆஷஸ் தொடரில், இங்கிலாந்தை 5-0 என்ற [illegible] செய்தது. [illegible] மெக்ராத், ஷேன் வோர்ன், லாங்கர், மார்டின் ஆகியோர் ஓய்வு பெற்றனர். இதனால் பொண்டிங்கிற்கு சரிவு மேல் சரிவு ஏற்பட்டது.

இதனால், பின்னர் இங்கிலாந்தில் நடந்த ஆஷஸ் தொடரை இங்கிலாந்தில் இழந்தார்.

அதன் தொடர்ச்சியாக தற்போது சொந்த மண்ணில் வைத்து மீண்டும் ஆஷஸ் தொடரை இழக்கும் நிலையில் உள்ளார் பொண்டிங். நேற்றுமுன்தினம் முடிந்த அடிலெய்ட் டெஸ்டில் அடைந்த இன்னிங்ஸ் தோல்வி, ஆஸ்திரேலிய அணியை 1980களின் வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும் சோம் அந்நாட்டு கிரிக்கெட் வல்லவான்களைத் துரத்துகிறது.

சமீபத்தில் நடுவர் தீர்ப்பு மேல்முறையீடு முறை வந்தவுடன் தற்போது சிறைந்து காணப்படும் பாகிஸ்தானிடம் கூட டெஸ்ட் தொடரை ஆஸ்திரேலியாவால் வெல்ல முடியவில்லை. ஏனெனில் எப்போதும் நடுவர் ஆதரவுடன் எதிரணியினர் துடுப்பெடுத்தாடும்போது, இரண்டு முக்கிய துடுப்பாட்ட வீரர்களுக்கு ஆட்டமிழப்பை வாங்கி விடுவார்கள்.

அதேபோல், தங்களது அணிக்கு சாதகமாக துடுப்பாட்டத்தில் இரண்டு தீர்ப்புகளை வாங்கி விடுவார்கள். இதனால், எதிர் அணிகள் செய்வதறியாது தோல்வி தழுவி வந்ததைத்தான் நாம் இதுவரை ஆஸ்ட்ரேலிய வெற்றியில் பார்த்திருக்கிறோம்.

ஓர் அணி ஒரு தொடரில் 3 டெஸ்ட் போட்டிகளையும் ஆஸ்திரேலியாவிடம் இதுபோன்ற மோசமான தீர்ப்புகளினால் படு தோல்வியடைந்தால் அந்த அணியின் அனைத்து வீரர்களின் கிரிக்கெட் வாழ்வும் கேள்விக் குறியாகிவிடுகிறது.

ஸ்ரீவ் வாஹிற்கு பிறகு ஆஸ்திரேலியா இது போன்று வெற்றி பெற்றதால்தான் பாகிஸ்தான் அணிக்கு நெருக்கடி ஏற்பட்டது. ஏராளமான வீரர்களின் கிரிக்கெட் வாழ்வும் கேள்விக்குறியானது. மேற்கிந்திய அணி சரிவு கண்ட அணியாக இருந்தபோதிலும் அந்த அணிக்கு எதிராகவும் ஏராளமான தீர்ப்புகள் ஆஸ்திரேலியாவுக்குச் சாதகமாக வழங்கப்பட்டதை நாம் காண்பிக்க முடியும்.

லாராவுக்கும் சச்சினுக்கும் இது போன்று அபத்த ஆட்ட மிழப்புகளைக் கொடுத்து அணியைத் திணறச் செய்துள்ளனர்.

ஷேன் வோர்னின் பல எல்.பி. டபிள்யூ. முறையிலான ஆட்டமிழப்புகளை இன்று மீண்டும் தொலைக்காட்சிகளில் போட்டுப் பார்த்தாலோ அல்லது 3ஆவது நடுவரின் தீர்ப்புக்கு விட்டாலோ அவர் ஒரு நூற்றுக்கும் மேற்பட்ட



விக்கெட்டுகளை நடுவரின் உதவியுடனேயே பெற்றார் என்பதை நாம் பார்க்க முடியும்.

எனவே, ஆஸ்திரேலிய அணியையோ அல்லது ஷேன் வோர்னின் பந்துவீச்சு மேதமையையோ மட்டம் தட்டுவதற்காக இதனைக் கூறவில்லை. ஒரு மேதை இது போன்ற ஆட்டமிழப்புகளை வாங்க வேண்டிய அவசியமில்லை.

மேலும், ஆஸ்திரேலியா ஓர் சிறந்த அணிதான். ஆனால், அந்த அணியின் உத்திகள்தான் உலகில் சிறந்தது. அந்த அணியின் தேர்வு முறைதான் உலகில் சிறந்தது. அந்த நாட்டுப் பயிற்சியாளர்கள்தான் தலைசிறந்தவர்கள் என்ற மாயை உடைக்கப்பட வேண்டிய ஒன்று.

ஓர் அணியின் வெற்றி அந்த அணியின் உண்மையான வெற்றியாக இருக்கவேண்டும். மற்ற அணி வீரர்களின் கிரிக்கெட் எதிர்காலங்களை அழிப்பதாக இருக்கக்கூடாது.

பொதுவாகவே நடுநிலை நடுவர்கள் முறை வந்தபோதும் அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

அதேபோல்தான் முதலில் நடுவரின் தீர்ப்புக்கு மேன்முறையீடு செய்யும் முறை அமுல்படுத்தப்பட்டபோது, அருமையான கண்டுபிடிப்பு. உடனேயே இதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கூறினார்கள்.

ஆனால் தீர்ப்புகள் தங்கள் தோல்விக்குக் காரணமாகும் போது அது துல்லியமில்லை. அதில் இது சரியில்லை, அது சரியில்லை என்று சாக்குப் போக்குக் கூறத் தொடங்கிவிட்டார்கள்.

எது எப்படியிருந்தாலும் தற்போது நடந்துவரும் ஆஷஸ் தொடரிலேயே ஆஸ்திரேலியா எப்படியாவது பொண்டிங், ஹஸி, கிளார்க் ஆகியோரின்த துடுப்பாட்டம் மூலம் ஓட்டங்களைச் சேர்த்து, பந்து வீச்சில் ஏதாவது அற்புதம் நிகழ்ந்து வெற்றி பெற்றால்தான் உண்டு. இந்தத் தொடரில் தோல்வி தழுவினால் அந்த அணி மீண்டும் 1980களின் சரிவுக்கு செல்வது உறுதி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



# திருமதி சிவஞானசுந்தரி சுப்பிரமணியம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழை மேற்கை (வித்தகபுரம்) வசிப்பிடமாகவும் தற்போது பெருந்தெரு, புலோலி தெற்கு, புலோலியில் வசித்தவருமான திருமதி சிவஞானசுந்தரி சுப்பிரமணியம் நேற்று (08.12.2010) புதன்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பொன்னம்மா தம்பதியரின் இளைய புதல்வியும் காலஞ்சென்ற சின்னையா சுப்பிரமணியம் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னையா- பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் சிறீரஞ்சனி (கனடா), சிறீசாந் தினி (வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி), சிறீலதன் (கனடா), சிறீநந்தினி (கனடா), சிறீராஜன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் விஜேந்திரா (கனடா), மகேந்திரராசா (தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை - யாழ்ப்பாணம்), பகீரதி (கனடா), சுதர்சன் (கனடா), தாரணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் சிவகாமி (கனடா), அபிராமி (கனடா), சங்கரி (கனடா), திவ்யா (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), கௌசிகா (யா/ வடஇந்து மகளிர் கல்லூரி) மற்றும் கனடாவைச்சேர்ந்த அனோஜன், அருணன், சந்தோஷ், சுஜித், விஷாலி, விநோதன், பிரவீனன், அஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான அருளானந்தம், பத்மநாதன், நாகம்மா, கதிரவேலு , நாகம்மா மற்றும் ருக்குமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சின்னத் துரை, சண்முகநாதன் மற்றும் பாக்கியலட்சுமி, சபாரத்தினம், தங்கமணி, முருகையா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2010) வியாழக்கிழமை அவரது பெருந்தெரு, புலோலி தெற்கு இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில்இடம்பெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி.மகேந்திரராசா
(மருமகன்), பிள்ளைகள்.

பெருந்தெரு, புலோலி தெற்கு, புலோலி.
தொ.பே: 021 226 4837, 0779914759.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடும் காணியும் விற்பனைக்கு**

சுழிபுரம் பிரதான வீதியில் அமைந்திருக்கும் விதுஷன் இரும்புக் கடையுடன் சேர்ந்த வீடு, வளவு 3 பரப்புக் காணியுடன் விற்பனைக்குள்ளது. பால் சங்கத்துக்கு அருகில்.

தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்-
வைத்திலிங்கம் இன்பமலர்,
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்

# இலங்கையில் புற்று நோயால் பீடிப்போர் வருடாந்தம் 15 ஆயிரம் பேராக உயர்வு

கொழும்பு, டிசெ.9

இலங்கையில் வருடாந்தம் 15 ஆயிரம் பேர் புற்றுநோயால் பீடிக்கப்படுவதாகவும் அவர்களுள் 25 சதவீதமானோர் மார்புப் புற்றுநோய்க்கு ஆளாக்குவதாகவும் சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது.

மார்புப் புற்று நோயால் பீடிக்கப்படுபவர்களில் 30 சத வீகிதமானோர் காலம் கடந்தே சிகிச்சைக்கு வருவதாகவும் அவர்கள் சரியான சமயத்தில் சிகிச்சை பெற்றால் வருடாந்தம் ஆறாயிரம் மரணங்களை தவிர்க்கலாம் எனவும் அமைச்சு சுட்டிக் காட்டுகிறது.

தேசிய புற்றுநோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் அண்மையில் நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனைகளின் போது 11 ஆயிரம் பெண்களில் 2 ஆயிரம் பேர் மார்புப் புற்று நோய்க்கு ஆளாகியுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டது.

அமெரிக்க நாடு நன்கொடையாக வழங்கியுள்ள புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டு பிடிக்கவல்ல 80 லட்சம் ரூபா பெறுமதியான "மெமோ கிராபி" இயந்திரமொன்றின் அங்குரார்ப்பண நிகழ்வு நாரஹேன்பிட்டி புற்றுநோய் மத்திய நிலையத்தில் நடைபெற்ற போதே மேற்கண்ட தகவல்கள் வெளியிடப்பட்டன.

இந்நிகழ்வில் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

**YARL BABY & PHARMACY**
**No 388, Hospital road, Jaffna**

நத்தார் மற்றும் வருடப்பிறப்பை முன்னிட்டு எமது தாபனத்தில் சிறு பிள்ளைகளுக்கான குறிப்பிட்ட உடுப்புகள் கொள்வனவு செய்பவர்களுக்கு கவர்ச்சிகரமான விளையாட்டுப் பொருள்கள் இலவசமாக வழங்கப்படும். அத்துடன் பேபி பிறேம்ஸ், கட்டில், வோக்கர், நப்பின், பம்பஸ், கவுண், பிரவச தாய்மார்களுக்குரிய அனைத்துப் பொருள்களையும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

## தவறிவிட்டது

அளம்பை, புலோலி மேற்கு பருத்தித்துறை என்ற முகவரியைச் சேர்ந்த பரஞ்சோதி மோதிலால் நேரு என்பவரது தே.அ.அட்டை (671971590V) சமூகசேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட் விசேட அடையாள அட்டை (0712581019D) COM BANK ATM CARD என்பன அடங்கிய பேர்ஸ் கோண்டாவிலுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. இவர் காது கேட்காதவர் அத்துடன் வாய் பேசவும் முடியாதவர். எனவே தயவு செய்து இவற்றைக் கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: பராமரிப்பாளர்
மாவடி ஒழுங்கை, கோண்டாவில்.
T.P.0777101461,
0214590466, 0771041083

## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் தசரதன் (தாஸ்)



கிளானை, கரணவாய் வடக்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் தற்காலிகமாக சுவிஸில் வசித்தவருமாகிய இராமலிங்கம் தசரதன் (தாஸ்) 03.12.2010 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை இராமலிங்கம் (Advocate, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ் காங்கிரஸ் 1947 - 1956) - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் இளைய புதல்வரும் காலஞ்சென்ற ப.சிதம்பரநாதன் (D.S. Post office) - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் சுலோச்சனாவின் அன்புக் கணவரும் R.பொன்னம்பலம் (R.P.Master), ஈஸ்வரி பாலசுப்பிரமணியம், பரமேஸ்வரி இரகுநாதன், R.தாமோதரம்பிள்ளை, R. இராமகிருஷ்ணன், மீனாம்பாள் நிற்சிங்கம், காலஞ்சென்ற R.பரமேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற Dr.K. பாலசுப்பிரமணியம் (Hatton), காலஞ்சென்ற P. இரகுநாதன் (Mack woods), தனபாக்கியவதி, சிவராஜராஜேஸ்வரி, நிற்சிங்கம் (Haylegs), ஸ்ரீதரன் (U.K) ரவீந்திரன், ரஞ்சனா (U.K), கிருபேந்திரன் (U.K) ஆகியோரின் மைத்துனரும், சியாமளா, சுதர்சினி ஆகியோரின் சகலனும் வாசுகி, ரேணுகா, பாலகுமார், சந்திரா, நளாயினி, நிரஞ்சனன், ஜனார்த்தனன், மயூரன், அனுரதி, ரதிக்கா ஆகியோரின் அன்பு சித்தப்பா, மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் Zurich, Switzerland இல் நடைபெற்று, பூதவுடல் இன்று (09.12.2010) வியாழக்கிழமை பி.ப 1.00 மணியளவில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்பு-
சுலோச்சனா தசரதன்
(மனைவி-சுவிஸ்)
T.P-0041719883774

தகவல்.
திருமதி. மீனாம்பாள் நிற்சிங்கம்
(சகோதரி)
T.P-0112360035

(சி- 573182)

### திருமதி இரத்தினகோபால் பாக்கியம்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினகோபால் பாக்கியம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - காமாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தியாகராசா - நவநாயகம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினகோபாலின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்காளான இராசலட்சுமிப்பிள்ளை, சபாரட்ணம், கனகரெட்ணம், மனோன்மணி, ஜெயலட்சுமி, நவரட்ணம், தர்மலட்சுமிப்பிள்ளை மற்றும் கோபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம், கோபால சிங்கம், இராசதுரை, செல்லம்மா நவரத்தினம் மற்றும் பொன்னுத்துரை, இராசலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், இரத்தினேஸ்வரி, காலஞ்சென்ற தியாகரத்தினம் மற்றும் உமா மகேஸ்வரி, குகரெட்ணம், கமலேஸ்வரி, பத்மேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் விஸ்வநாதன், சச்சிதானந்தன் ஆகியோரின் அன்புப் பெரிய தாயும், தர்மலிங்கம், சாந்தினி, பத்மநாதன், மேகலா தேவி, பிரேமதாஸ், காலஞ்சென்ற கனகரட்ணம் ஆகியோ ரின் அன்பு மாமியும், குகந்தன், கிரிவேந்தன், கமலினி, சுகன்யா, ஜாதவி, ஜனனி, ஜானகி, சயந்தினி, வசந்தினி, நிரஞ்சினி, பிர தீபன், காந்தன், வேந்தன், கபிலன், கீர்த்திகா, வக்ஷன் ஆகியோ ரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2010) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

398/2, நாவலர் வீதி (நொத்தாரிஸ் லேன்),
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல்.
இ. குகரெட்ணம் (மகன்).

(107102)

## போட்டிகள் ஒத்திவைப்பு

வலி. வடக்கு, டிசெ. 9

யாழ். மாவட்ட ஹொக்கி விளையாட்டுச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு ஆண், பெண் ஹொக்கி அணிகளுக்கு இடையே நடைபெறுவதாக இருந்த போட்டிகள் யாழ். குடாநாட்டில் நிலவும் பாதகமான காலநிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் அடுத்த வாரம் காலநிலையில் சாதகமான நிலை காணப்பட்டால், நடைபெறுவதற்கான சாத்தியங்கள் உள்ளன என யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-86)

## சித்திரப் பயிற்சி சான்றிதழை பெறலாம்

யாழ்ப்பாணம், டிசெ. 9

கந்தர்மடத்தில் இயங்கும் 'ஐவரி' சித்திரப் பயிற்சி நிறுவனத்தில் 2010 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சையில் சித்தியடைந்த மாணவரின் விவரம் நிறுவனத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் நிறுவனத்துக்கு சமுகந்தந்து சான்றிதழைப் பெற முடியும் என்றும் அறிவிக்கப்பட்டது. (ஓ)

## மரண அறிவித்தல்

### திருமதி சத்தியபாமா சிவராஜன்



சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி சத்தியபாமா சிவராஜன் நேற்று (08.12.2010) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பஞ்சாட்சரம் - தங்கம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் - கண்மணி தம்பதியரின் மருமகளும், சிவராஜனின் (இ.போ.ச. பரிசோதகர்) அன்பு மனைவியும், விஜிந்தன் (லண்டன், 2002 A/L சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சைலஷா (ஆசிரியை, சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்), விஜிமோகன் (மலேசியா, 2008 A/L சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும், பஞ்சரத்தினம் தர்மகுலசேகரம் (லண்டன்), சத்தியராணி (ஆசிரியை, சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்), சத்தியசீலன் (லண்டன்), பத்மாவதி (ஆசிரியை, மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்), சூரியகுமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தில்லை நடேசன், இராஜலட்சுமி, காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் சாந்தி, மகேந்திரம், தவலீலா ஆகியோரின் மைத்துனியும், சிந்துஜன், மிதிலா, கோவர்த்தன், நிஷாணி ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், சுபிதா, மயூரா, மதுஷா, மனோஷா ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2010) வியாழக்கிழமை பி.ப 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
வை.சிவராஜன்
(கணவர்).

(சி/105/34/0)

## மரண அறிவித்தல்

### சின்னையா சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற எழுது வினைஞர், வவுனியா பிரதேச செயலகம்)



ஏழாலை கிழக்கு, இலந்தகட்டியைப் பிறப்பிடமாகவும் அதே இடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சுப்பிரமணியம் நேற்று (08.12.2010) புதன்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் காலமானார்.

அன்னார்காலஞ்சென்றவர்களானசின்னையா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இலங்கையர் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புவனசுந்தரியின் அன்புக் கணவரும், குமுதினி (நீர்கொழும்பு), சிவா ஜினி, மணிவண்ணன், மணிமாறன் (பாபு -U.K), நந்தினி (U.K), சுதர்சன் (சுதன்- U.K) ஆகியோரரின் பாசமிகு தந்தையும் நடேசலிங்கம் (நீர்கொழும்பு), சந்திரசேகரம், சுமதி, குகநாதன் (U.K), மாலினி (U.K), லோகேஸ்வரி (U.K) ஆகியோரின் அன்பு மாமனும், ராம்சுந்தர், ஆகஸ்சினி, தட்சாயினி (நீர்கொழும்பு), கபில்ராஜ் (மாணவன்- ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை), கபின்ராஜ் (மாணவன் - ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்), ஞான்சன், தீபன், ஞான்சி, சாருஜன் (மாணவர்கள் - ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்), வினோஜன், விதுஷன் (லண்டன்), மகிசா, (லண்டன்), தனிசா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தம்பு, நல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நடராசா, நவரத்தினம், குலேந்திரசிங்கம் (குலம் - வவுனியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.12.2010) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஏழாலை கிழக்கு காடகடம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலந்தைகட்டி வைரவர் கோயில்,
ஏழாலை கிழக்கு,
T.P. 0213007078.

தகவல்:
சிவா (மகள்),
சந்திரசேகரம் (மருமகன்).

(107112)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழைக் கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை நால்வர் உயிரிழந்தனர். எட்டுப்பேர் படுகாயமடைந்தனர் - என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது. கண்டி, பதுளை, மாத்தறை மற்றும் பொலனறுவை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே உயிரிழந்துள்ளனர்.

நாடு முழுவதும் மேற்படி அனர்த்தங்கள் காரணமாக 26, 825 குடும்பங்களைச் சேர்ந்த 1,05,974 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

315 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. 3,799 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. வீடுகளை விட்டு வெளியேறிய 1,797 குடும்பங்களைச் சேர்ந்த 67,396 பேர் 43 தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் - என்றும் மத்திய நிலையம் மேலும் தெரிவித்தது. (சி)

## கூட்டமைப்பினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியாக இருக்கும்.

''வெறுமனே சம்பள உயர்வு பெறுவதற்காக மாத்திரம் தமிழ் அல்லது சிங்கள மொழிப் பரீட்சையில் சித்தியெய்தி விட்டு, அம்மொழியை நடைமுறைப்படுத்தாமலிருக்கும் அரச ஊழியர்கள் குறித்தும் கண்காணிப்பு மேற்கொள்ளப் படும்.'' - இவ்வாறு அவர் தெரிவித்தார். (சி)

## மரண அறிவித்தல்

### கனகசபை தேவரம்பை



சாவகச்சேரி, சிவன்கோவிலடியைச் சேர்ந்த கனகசபை தேவரம்பை நேற்று (08.12.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து கனகசபையின் (சரஸ்வதி புத்தகசாலை, சாவகச்சேரி) பாசமிகு மனைவியும், கெளரியின் பாசமிகு தாயாரும், விநாயகமூர்த்தியின் அன்பு மாமியும், சிவராஜ், அபிராஜ், கபில்ராஜ் ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.12.2010) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.விநாயக மூர்த்தி (மூர்த்தி - மருமகன்)
சிவன் கோவிலடி, சாவகச்சேரி. (சி/573473)


**வாடகைக்கு**

யாழ்.நகருக்கு அண்மையில் நாவலர் வீதி, பிறவுண் வீதிச் சந்திக்கு அருகில் மாடி வீடு, நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க:- 0776258796.

**அறிவாலயா கல்வியகம்**
சூராவத்தை, சுன்னாகம்
புதிய கல்வியாண்டு-2011
தரம் 6 - தரம் 10 வரையான வகுப்புக்கள்
ஆரம்பம்:-12.12.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00
பிரபல ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும்.
நிர்வாகி.

**பிறைற்றின் கல்வி நிலையம்**
சாவகச்சேரி
தென்மராட்சி மாணவர்களின் நம்பிக்கை நட்சத்திரம் ....
புதிய ஆண்டில் புதிய உத்வேகத்துடன் ....
தரம் 6→ O/L வரையான வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது.
கல்வியாண்டு - 2011
ஆரம்பம் 11.12.2010
சனி 11 A.M

**Personal English Classes**
பிரத்தியேக சிறுகுழு ஆங்கில வகுப்புகள்
134, இராசாவின் தோட்ட வீதி, (நாவலர் வீதிக்கு அருகில்), யாழ்ப்பாணம், தொ.பே: 0776110802
தொலைபேசியில் முன்பதிவு செய்து வரவும்
General English Leading to Spoken
அடிப்படை இலக்கணம், பிழையற்ற சொற்பிரயோகம், வசன அமைப்பு, வாசித்துக்கிரகித்தல், கட்டுரையாக்கல், சம்பாஷணைகள் (Role Play), என்பவற்றின் மூலம் கற்பிக்கப்படும்.
Business English Communication & Presentation
தொடர்பாடல்களின் அடிப்படை முறைகள், கருவிகள், இடையூறுகள், வணிகக் கடிதங்கள், விவரணங்கள், விளம்பரங்கள், நேர்காணல் (Interview) என்பவற்றின் மூலம் கற்பிக்கப்படும்.

**புதிய நாவலர் கல்வி நிலையம்**
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.
தரம் குன்றாத கற்பித்தலில் 23 ஆண்டுகளைக் கடந்து நவீன கற்பித்தல் முறைகளோடு உங்களுக்காக.....
கல்வியாண்டு 2011
தரம் 1 முதல் O/L வரை
ஆரம்பம் : 11-12-2010
சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு
O/L, 10, 9 எமது தனித்துவமான ஆசிரியர் குழாம்

| | |
|---|---|
| கணிதம் | T.அற்புதராஜா |
| | S. கரண் |
| | V. கருணாகரன் |
| விஞ்ஞானம் | N. மகேந்திரன் |
| | S. சிவரூபன் |
| | S. கோபிநாத் |
| தமிழ் | A. நவநீதகிருஷ்ணன் |
| ஆங்கிலம் | K. ரமணதாசன் |
| வரலாறு | A.K. றொபின்சன் |
| புவியியல் | S. கோகிலன் |
| சமயம் | A. சுமுகலிங்கம் |
| சுகாதாரம் | N. கங்காசுதன் |
| வர்த்தகம் | E. ஜீவா |

அமைதியான பாதுகாப்பான சூழலில் கற்பித்தல். மாதாந்த நடுத்தவணை, தவணைப் பரீட்சைகள். ஒவ்வொரு தவணையும் பெற்றோர், ஆசிரியர் சந்திப்பும் கணிப்பீட்டு அறிக்கை வழங்கலும்.
பிரிவு 1 க்கான அனுமதிகள் டிசெம்பர் 25 வரை...

**A/L 2011 Day Class**
DMI Jaffna

**ஏசியன் கல்வி நிலையம், மீசாலை**
இன்று வகுப்புகள் ஆரம்பம்
பி.ப. 3.00 மணி

**விக்னா**
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
36ஆவது வருட கல்விச் சேவை
புதிய கல்வியாண்டு 2011
தரம் 6, 7, 8 ஒரு மணி
9, 10, O/L Evening class 10 மணி
ஆரம்பம் 12.12.2010 (ஞாயிறு)
* யாழில் தன்னிகரில்லா தனித்துவமான ஒரே ஒரு நிறுவனம்.
* கடந்த பல ஆண்டுகளாக O/L.இல் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுச் சாதனை புரிந்த நிறுவனம்.
* அனுமதிகள் இன்று முதல்.
* 36 வருடங்களாக கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் இயங்கும் நிறுவனம்.

**A/L Day Class**
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் 10-12-2010 வெள்ளி 8.00 மணி
பல மாணவர்களின் வெற்றிக்கு வழியமைத்த முன்னணி ஆசிரியர் குழாம்...

| | |
|---|---|
| கணக்கீடு | A.P. பகீதரன் |
| பொருளியல் | N.B. கஜீதரன் |
| வணி.கல்வி | S. யசோ |
| தமிழ் | A.K. கீர்த்திராஜன் |
| அளவையியல் | P. கமல் |
| புவியியல் | M. செல்வா |
| இந்துநாகரீகம் | J. ஞீஸ் |
| அரசியல் | A.K. றொபின்சன் |
| வரலாறு | R.R. ஆனந்தன் |
| நாடக அரங்கி | S.R. ரமேஸ் |
| கிறிஸ்தவம் | S. நிரோஜன் |

ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும். பாடம் மாறிக் கற்போருக்கு விசேட பிரிவுகள்.
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.

**SAKTHIMICRO SYSTEMS**
Sankaththanai, Chavakachcheri, 0212270084 0776102609 www.sakthizone.com
இன்று பதிவுகளை மேற்கொள்பவர்களுக்கு மட்டும்
Admission fees 18,000/=
Admission fees 11,000/=
விண்ணப்ப முடிவுத்திகதி 12.12.2010
நீங்களும் ஒரு Adobe மல்ரிமீடியா வல்லுனர் ஆகுங்கள்
Adobe Authorised Training Centre — Master Diploma in Multimedia — Adobe Solution Partner
Hotline 0776102609
இந்தியாவில் இருந்து வருகை தரும் மல்ரிமீடியா வல்லுனர்களால் கற்பிக்கப்படுகின்றது
மலிவு விற்பனை
Processor - D Core 3.02Ghz
Motherboard - Intel Chipset
RAM - 1GB
500GB HardDisk
18.5" LCD Monitor
DVD Writer
Keyboard, Mouse
46500/=
அதி நவீன கணனி லாப்
Hotline 0776102609
Kandy Road, Chavakachcheri 0212270084
யாழில் எமது கிளை KKS Road, Kondavil (Uppumada Junction) 0776102609

**எடிசன் அக்கடமி**
தரம் 6 முதல் O/L வரை
யாழ் நகரின் NO.1 கல்வி நிறுவனம்
யாழ்ப்பாணம் | நல்லூர் | கொக்குவில் | சண்டிலிப்பாய் | வட்டுக்கோட்டை
கல்வி ஆண்டு 2011
தரம் 6 முதல் O/L வரை
Tamil Medium & English Medium
ஆரம்பம் :- 09/12/2010 வியாழன் 4 p.m

IELTS - 3 Months
Spoken English - 3 Months
வார/ வார இறுதி வகுப்புகள் ஆரம்பம் 11.12.2010
1. அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன
2. ஒவ்வொரு பிரிவிலும் 10 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி
3. கட்டணங்கள் தவணை முறையில் செலுத்தும் வசதி
4. இன்றிலிருந்து (09.12.2010) அனுமதி வழங்கப்படும்
தொடர்பு: European College of Higher Studies
315 1/2, Parameaswara Junction, Palaly Road, Jaffna.
(யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில்)
தொ.பே: 0771882507, 0213734747

**இன்று ஆரம்பம்...**
கற்பித்தலில் பல வருட அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட ஆசிரியர்கள் ஒருங்கிணையும்
றோயல் அக்கடமி
நாவலர் வீதி, நல்லூர் (TCT அருகில்)
தரம் 6 முதல் O/L வரை
ஆங்கில, தமிழ் மொழி மூல வகுப்புகள்
பெற்றோர்களே!
உங்கள் பிள்ளைகளை எம்முடன் இணைத்து சாதனையாளராக்குங்கள்.

**ஐடியல் அக்கடமி**
சிரணிச் சந்தி, சண்டிலிப்பாய். | இடைக்காடு, காரைநகர். | கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். | அந்தோனியார் கோவிலடி, மானிப்பாய்.
பெற்றோர்களதும் மாணவர்களதும் நன்மதிப்பைப் பெற்ற எமது கல்வி நிறுவனத்தில் 2011 கல்வியாண்டுக்குரிய வகுப்புக்கள் இன்று குதூகலமாக ஆரம்பமாகிறது.
09.12.2010 (வியாழன்) நேரம்: பி.ப. 3.30
கணித ஆசானும் நிர்வாகியும் V.N.பத்மநாதன்
குறிப்பு: புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன
(சி-573487)

**புதிய கல்வியாண்டு-2011**
தரம் 4 முதல் 11 வரையான அனைத்துப் பிரிவு வகுப்புகளும்
★ யாழ்.நகரின் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை ..........
★ யாழ்.நகரின் முன்னணிப் பாடசாலைகளில் கற்பித்த ஆசிரியர் குழு .........
★ யாழ்.நகரின் தனித்துவம் வாய்ந்த ஒரேயொரு நிறுவனம் ...
ஆரம்பம் : 09.12.2010 வியாழன் மாலை 4.00 மணி.
BRAIN POWER INSTITUTE
சின்னக்கடைச் சந்தை அருகில் குருநகர்.
(அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை)

**A/L DAY CLASS**
Phy. : M.கருணாநிதி Bio : R.குகானந்தன்
Che. : N.வாகீசன், G.Beno Maths : P.விமலநாதன்
ஆரம்பம் : 11.12.2010 சனி காலை 7 மணி.
NEW EDUCATION WORLD
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
எதிர்பாருங்கள்!
O/L, A/L (கணித, உயிரியல்) பிரிவுகளில் புதிய திட்டங்கள் ....
சில தினங்களில் .....

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE, JAFFNA
PHYSICS ⇨ K.SELVAN BSc.(Hons.)

| 2011 A/L | 2012 A/L |
|---|---|
| ELECTRICITY | நீர் நிலையியல் |
| SAT, SUN 6.10-7.10 A.M. | BATCH - I - 07.30-08.30 A.M. |
| ELECTRIC FIELDS | BATCH - II - 11.30-12.30 |
| TUE, THU 6.30-7.30 A.M. | BATCH - III - 04.45-5.45 P.M. (SAT, SUN) |


**Invitation**

The Choirs of Uduvil Girls' College celebrate Christmas in Song

On

Thursday, 9th December, 2010, 4.00 P.m

Uduvil Girl's College Hall

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.